# தமிழவேள் உமாமகேசுவரனார்

ச. சாம்பசிவனார்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

# தமிழவேள் உமாமகேசுவரனார்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு, நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து, அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் - கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.)
பட உதவி : நேஷனல் மியூசியம். புது தில்லி

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# தமிழவேள் உமாமகேசுவரனார்

ச. சாம்பசிவனார்

சாகித்திய அக்காதெமி

*Thamizhavel Umamaheswaranar :* Tamil monography by
S. Sambasivanar, Sahitya Akademi, New Delhi, (2002) Rs.25

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு : 2002

**சாகித்திய அக்காதெமி**
ரவீந்திர பவன், 35 பெரோஸ்ஷா சாலை,
புதுதில்லி 110 001

**விற்பனை**
'ஸ்வாதி' மந்திர் சாலை, புதுதில்லி 110 001

ஜீவன் தாரா கட்டிடம், 4-வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கொல்கத்தா 700 053

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014

மத்திய கல்லூரி வளாகம், பல்கலைக் கழக நூலகக் கட்டிடம்,
டாக்டர் அம்பேத்கர் சாலை, பெங்களூர் 560 001

சி.ஐ.டி. வளாகம், டி.டி.டி.ஐ. அஞ்சல்
தரமணி, சென்னை 600 113

விலை ரூ. 25

ISBN 81-260-1632-9

அச்சிட்டோர் : **ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை-5. போன்: 28418543**

# முகவுரை

''தமிழரிற் பெரும்பாலர், சிறு தொழில்களையும், சின்னீரவாகிய இன்பத்தினையும் நாடுபவர்களாய், வாழ்க்கையின் சிறந்த குறிக்கோள்களை அறியாதவர்களாய்க் கீழ்நிலையை எய்தியிருக்கின்றனர். உலகர் போற்றிப் புகழும் உச்சநிலையில் இருந்த தமிழ்மக்கள், ஆற்றல் குன்றி, அறிவிழந்து, கல்லா மாக்களாய் ஆனதன் பொருட்டு என்னை? தாய் மொழிப் பயிற்சியை நெகிழவிட்டோம்; தமிழ் மூதறிஞர் கூறிய உறுதிப் பொருள்களை மறந்தோம்; அன்னியர் நடை, உடை, பாவனைகட்கும், அன்னிய மொழிகட்கும் அடிமைப்பட்டோம்... இக் குறைகளைத் தீர்ப்பதற்குரிய வழிமுறைகளை அமைப்பது கடன்!''

–இக்கூற்று, இப்போது யாரோ ஒரு தமிழன்பர் கூறியிருப்பார் போலும் என்றுதான் எண்ணத்தோன்றும். உண்மையில், இஃது அறுபத்தெட்டு ஆண்டுகட்கு முன்பு (1934) கூறப்பட்டது; கூறியவர், **தமிழவேள் உமாமகேசுவரனார்.**

தமிழ்நாடு, அயலார் ஆட்சியுட்பட்டு அல்லலுற்ற காலத்தில், தமிழ் மக்களிற் பெரும்பாலோர், தம்மொழி பேணி வளர்க்கும் கடமையில் கருத்தின்றிக் காலங்கழித்தனர். நம்மவரது விழிப்பின்மையால், எண்ணிறந்த அரிய தமிழ் நூல்களும், தமிழர் வளர்த்த கலைச்செல்வங்களும் பேணுவாரற்ற நிலையில், இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயின. தமிழ், தனிமொழியோ, அன்றி வேறொரு மொழியிலிருந்து தோன்றியதோ எனச் சிலர் ஐயுற்றுப் பேசும் அவலநிலையும் ஏற்பட்டது.

இவ்விழிநிலை போக்கத் தமிழகத்தில் தோன்றிய சான்றோர்களில் ஒருவர் உமாமகேசுவரனார். ''மூச்செல்லாம் தமிழ் மூச்சு; பேச்செல்லாம் தமிழ்ப் பேச்சு; பெற்றதெல்லாம் தமிழ்த்தாயின் பெற்றி'' என வாழ்ந்து காட்டியவர் 'தமிழவேள்'. அவரால், தமிழர்களும், தமிழும் அடைந்த நன்மைகள் எண்ணில் பலவாம்.

''சாந்தி நிகேதனம் போல், தம்மால் உருவாக்கப்பட்ட கரந்தைத் தமிழ்ச் சங்கமும் திகழவேண்டும்'' என்று எண்ணித் தம் நண்பர் ஒருவரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வடபுலம்

சென்றார் தமிழவேள். கொல்கத்தா சென்றார்; கவி தாகூரின் சாந்திநிகேதனம் கண்டார்; கயாவுக்குப் புறப்பட்டார்; காசி நகர் அடைந்தார்; சாரநாத் சென்றார்; அயோத்தியின் அருகே 'பைசாபாத்' என்னுமிடத்தில் தங்கினார்; அந்தோ, காலன் என்னும் கண்ணிலி, அவர்தம் ஆருயிரைக் கவர்ந்து விட்டான்! தமக்கென எதுவும் வேண்டாத் தகைசால் தமிழவேள், உற்றார் உறவினர் எவருமில்லாத அவ்விடத்தில், தனித்த 'முத்தி'யைத் தேடிக் கொண்டார். இன்று, தமிழ்நாட்டில் ஓரளவாவது தமிழ் உணர்வும் தாய்மொழிப்பற்றும் உண்டு எனில், அதற்கு வித்திட்ட பெருமை தமிழவேளுக்கு உண்டு!

தமிழுக்காக வாழ்ந்த இச்சான்றோர்தம் வரலாற்றை எழுதும் வேட்கையால், 38 ஆண்டுகட்கு முன்பு, கரந்தை சென்று, பலநாள் தங்கித் தமிழவேளின் உற்றார், உறவினர், மற்றும் சிவ. குப்புசாமிப்பிள்ளை போன்றோரை நேரிற்கண்டு, பல்வேறு குறிப்புகள் தயாரித்து, 1964ஆம் ஆண்டில், என் சொந்த வெளியீடாகக் கொணர்ந்தேன். அப்போது 'தமிழவேள்' பி.டி. இராசனார், இந்நூலை வெளியிட்டார். இதனைக் கருத்தில் கொண்டே சாகித்திய அக்காதெமி, 'தமிழவேள் உமாமகேசுவரனார்' என்னும் இவ் இனிய வாழ்க்கை வரலாற்று நூலினை எழுதும் பொறுப்பை என்பால் அளித்ததைப் பெருமையாகக் கருதுகின்றேன். மேலும் பல புதிய செய்திகளைத் தாங்கி இந்நூல் வெளிவருகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், இல்லாத 'ஆங்கிலமோகம்' பொங்கிப் பரவி மேலோங்கி நிற்கும் இன்றையத் தமிழகத்தில், மீண்டும் 'தமிழவேள் உமாமகேசுவரனார்' போல் ஒரு தெய்வீகத் திருமகன் தோன்ற வேண்டும். அதற்கு இந்நூல் உறுதியாகத் துணை செய்யுமானால் அதுவே யான்பெறும் பேறு!

—ச. சாம்பசிவனார்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | 5 |
| | முன்னுரை | 9 |
| 1. | தண்டமிழ்க் குடியின் தகைசால் தோன்றல் | 13 |
| 2. | வழக்குத் தொழில் வித்தகர் | 35 |
| 3. | ஆட்சித் திறன் மிக்க மாட்சியர் | 40 |
| 4. | தமிழ்ச் சங்கத் தலைவர் | 48 |
| 5. | நற்றமிழ் நாவலர் | 78 |
| 6. | சிவநெறிச் செல்வர் | 86 |
| 7. | நற்பண்பின் நாயகர் | 92 |
| 8. | தமிழர் ஏத்தும் 'தமிழவேள்' | 106 |
| 9. | புகழாரப் பொற்பினர் | 115 |
| | நூற் பட்டியல் | 128 |

# முன்னுரை

''பாடி வந்தவர்க்குக் கொடுத்து, அதனால் பல புகழையும் உடையவன்; கூத்தர்களுக்கு வழங்கிய பேரன்பினை உடையவன்; நீதி நூல்களில் சொல்லப்பட்டவற்றை நன்றாக ஆராய்ந்து, அதற்கு ஏற்பச் செங்கோல் செலுத்தியவன்; அதனால், அறநெறி அறிந்தோரால் புகழப்பட்டவன்; சான்றோர்கள் பாராட்டும் உறுதியான நட்பினன்; மகளிரிடத்து மென்மையாக நடந்து கொள்ளும் அதே வேளையில், வலியோரிடத்து மிக்க வலிமையோடும் நடந்து கொள்பவன்; குற்றமில்லாத கேள்விச் செல்வங் கொண்ட அந்தணர்களுக்கு அடைக்கலமாக விளங்கி-யவன்; இத்தகைய உயரிய பண்புகளைக் கொண்டவனாயிற்றே என்றுகூடக் கருதாமல், யமன் அவனது நல்லுயிரைக் கவர்ந்து கொண்டு போனானே! வாய்மையுடைய புலவர் பெருமக்களே! நாம் அனைவரும், நம் சுற்றத்துடன் சேர்ந்து, யமனை இகழ்வோம் வாரீர்! உலகம் துன்புறுமாறு, கேடில்லாத புகழ் நிறையும்படி, இப்போது நடுகல்லாயினான் நம்மைப் பாதுகாத்த வள்ளல்! அந்த யமனை ஏசுவோம் வாரீர்!''

–இப்பொருள்படும்படி புறநானூற்றில் இடம்பெற்றுள்ள பாடல் வருமாறு:

''பாடுநர்க்கு ஈத்த பல்புக ழன்னே!
ஆடுநர்க்கு ஈத்த பேரன் பினனே!
அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்னே!
திறவோர் புகழ்ந்த திண்நண் பினனே!
மகளிர் சாயல்! மைந்தர்க்கு மைந்து!
துகளறு கேள்வி உயர்ந்தோர் புக்கில்!
அனையன் என்னாது, அத்தக் கோனை,
நினையாக் கூற்றம் இன்னுயிர் உய்த்தன்று;
பைதல் ஒக்கல் தழீஇ, அதனை
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்!
'நனந்தலை உலகம் அரந்தை தூங்கக்
கெடுவில் நல்லிசை சூடி,
நடுகல் ஆயினன் புரவலன்' எனவே!'' (புறம் : 221)

கோப்பெருஞ்சோழன் என்னும் பெருந்தகையாளன் இறந்தபின், அவனது நடுகல்லைக் கண்டு, 'பொத்தியார்' என்னும் புலவர் பாடிய கையறுநிலைச் செய்யுள் இது!

பலரும் போற்றும் பெரும் புகழுக்குரியவன்தான் அவன்! எனினும் இறப்பு என்பதும் ஒன்று உண்டன்றோ? அஃது அவனுக்கும் நிகழ்ந்தது. 'இஃது இயற்கை' என்பது புலவருக்குத் தெரியாதா? இருப்பினும், நெஞ்சு பொறுக்காமல், 'கூற்றுவனை வைவோம் வாரீர்!' என்கின்றார்! வைதாலும், இறந்தவன் இறந்தவன் தானே!

கோப்பெருஞ்சோழன் வாழ்ந்து ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகள் கழிந்தன. அவனுக்குப் பின் நம் தமிழகத்தில் தோன்றி மறைந்தவரோ எண்ணில் பலர்!

''மக்கள் உயிர்க்குப் பயன், புகழ் தவிர வேறொன்றும் இல்லை! தனக்குச்சமம் இல்லாமல் மிக மேலோங்கி நிற்பது புகழ் ஒன்றேயாம்! மக்களாய்ப் பிறந்தால் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க வேண்டும்; அக்குணம் இல்லாதார், மக்களாய்ப் பிறத்தலை விட, விலங்காய்ப் பிறத்தல் நல்லது. செய்தவர் இறந்து போகத் தான் இறவாது நிற்பது புகழ்!'' என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க இவ்வுலகில் வாழ்ந்தவர் சிலரேயாவர்!

சோழனைப் போல் புலவர் பெருமக்களால் பாராட்டப் பெற்றோர், தமிழகத்தில் அண்மைக் காலத்திலுங்கூடத் தோன்றிப் புகழுடன் வாழ்ந்தவர்களும் உண்டு! அவர்களில் ஒருவரே, தமிழ் ஓங்கத், தமிழினம் தழைக்கத், தமிழகம் உயரத், தம் உடல், பொருள், உயிர் இம்மூன்றையும் உவந்தளித்த ஒப்புரவாளர் 'தமிழவேள்' உமாமகேசுவரனார் ஆவர்!

''நல்லவர்கள் தீயவர்கள் என்றில் லாமல்
நலிந்துவரும் அனைவருக்கும் தண்ணீர் ஊட்டி
நில்லாமல் பலதிசையும் வளைந்து செல்லும்
நீரோடை திடுமென்று வற்றி னாற்போல்
எல்லோரும் நலமடையப் பணிகள் செய்த
எழிலுருவே! நீ மறைந்து சென்றாய் அந்தோ!
பொல்லாத மக்கள்பலர் உயிரோ டுள்ளார்
புகழ்தமிழுக் கென்னபயன் உமாமகேசா!''

(சாமி. சிதம்பரனார்)

என்று புலவரால் போற்றப்பெறுபவர் உமாமகேசுவரனார்!

'தமிழவேள்' உமாமகேசுவரனார், தண்டமிழ்க் குடியின் தகைசால் தோன்றல்; வழக்குத் தொழில் வித்தகர்; ஆட்சித் திறன்மிக்க மாட்சியர்; தமிழ்ச்சங்கத் தலைவர்; நற்றமிழ் நாவலர்; சிவநெறிச் செல்வர்; நற்பண்பின் நாயகர்; தமிழர் ஏத்தும் 'தமிழவேள்'; புகழாரப் பொற்பினர்.

இத்தகு மாவீரரின் வாழ்க்கை வரலாற்றை அறிவதனால், ஒவ்வொருவரும், ''நந்தமிழ் நாட்டுக்கும் நம்மினிய மொழிக்கும் நம்மவர்க்கும் பாடுபடவேண்டும்'' எனும் உயரிய எண்ணம் கொண்டு உழைக்க முன்வருவர்! அதற்கு இந்நூல் பெரிதும் துணைபுரியும் என உறுதியாக நம்பலாம்.

# 1

## தண்டமிழ்க் குடியின் தகைசால் தோன்றல்!

1941 ஆம் ஆண்டு மேத்திங்கள் 9 ஆம் நாள்!

''அமிழ்தினு மினிய தமிழ்மொழி வழங்கும் இமிழ்திரைக் கடல்சூழ் தமிழகத் துள்ளீர்!

''எங்கும் இன்பம் பொங்கித்துளும்பும் பொங்கற் புதுநாள் தமிழ் நினைவூட்டும் தண்டமிழ் நன்னாளன்றோ? இந்நன்னாளில் நீவிரெல்லீரும் ஒக்கலோடிருந்து மிக்க சோறுண்டு உளமிக மகிழ்ந்து களிக்கின்றீரன்றோ? இக்களிப்பு நாளில் தம் தமிழன்னையை, நந்தா ஒளியுடைச் செந்தமிழன்னையை நீவிர் நினைந்து ஏத்திப் போற்றுவதுண்டோ? தாய்க்கடன் நினைந்து பணியாற்றா மக்களுமுளரோ? எந்நாட்டில் தாய்மொழிப்பற்று ஒரு தனிப்பற்றாய்த் தழைத்து நிற்கின்றதோ அந்நாடே எந்நாட்டினும் மிக்குயர் பொன்னாடென ஆன்றோர் அறிவுறுத்திச் சென்றனர். அம்முறையில் நம்நாட்டின் நிலைமை என்ன?

''தமிழ்நாட்டில் தமிழ் ஒளிபரப்பும் கல்லூரிகள் யாண்டு யாண்டுள்ளன? அக்கல்லூரிகள் பயின்று எத்துணை மாணவர்கள் யாண்டுதோறும் தேர்ச்சிபெற்று வெளிவருகின்றனர்? மொழிக்காக விருந்தமைந்த முறையில் தமிழன்னைக்கு அணிசெய்யக் கூடியனவாய் எத்துணைச்சிறந்த தமிழ்நூல்கள் யாண்டுதோறும் வெளியிடப் படுகின்றன? 'பன்னருங் கலைதெரி பட்டிமண்டபங்கள்' பல நிலவிய தமிழ்நாட்டையும், கந்தனையனையவர் கலைபயில் கழகங்கள் நிலவிய செந்தமிழ்நாட்டையும் உங்கள் அகக்கண் முன்னே நிறுத்திக்கொண்டு, சங்க காலத்திற்குச் செல்லுங்கள் அக்காலத்தில் சங்கத்தில் ஒருங்கு கூடித் தமிழாராய்ந்த புலவர்கள் எண்ணிக்கையையும், உயர்நிலைப் பள்ளிகளும், பல்கலைக் கழகங்களும் மல்கியிருந்தும் இக்காலத் தமிழ்நாட்டில் சங்கப் புலவர்களை ஒத்த புலவர்களின் எண்ணிக்கையையும் எண்ணிப்பாருங்கள் அற்றை ஞான்றிருந்த புலவர்களைவிட இற்றைஞான்று யாம் மிக்க புலவர்களைத் தமிழ்நாட்டிற் காண்கின்றோமா? இல்லையே! காரணமென்னை? தமிழரின்

அயர்ச்சியும் உறக்கமும் அன்றோ? சென்றதுபோக; நம் தமிழன்னை மீண்டும் வீறுபெற்று அரியணை ஏறி, முடிதாங்கிச் செங்கோலோச்சித் திகழவேண்டின் நீவிர் நும் செய்கடன் அறிந்து பணியாற்ற வேண்டாவோ? கூட்டங்கள் கூட்டித் 'தமிழ் உயர்தனிச் செம்மொழி' யெனப் பேசிவிட்டால் தமிழ் உயர்ந்து விடுமோ? தமிழ்ப் புலவர் மிகுந்தாலன்றோ தமிழ் உயரும் புதுவது புனைந்த புத்துயிர் நூல்கள் வெளிவந்தாலன்றோ தமிழ் உயரும். புலவர்களைப் பேணி உயர்நிலைக்கண் செல்லவிட நிலைக்களனாயிருந்து பணியாற்றும் எம் சங்கத்திற்கு நீவிர் புரிந்த உதவிதான் என்னையோ? புலவர்களைப் போற்றி ஆயிரக்கணக்கான பொற்காசுகளை அள்ளி இறைத்து அவர்கள் உளங்குளிர என்புங் குளிரத் தமிழ்ப்பெரு வள்ளல்கள் தமிழ்ப் பேரரசர்கள் ஈந்தணைத்ததனாலன்றோ இன்று எந்தமிழ்மொழியில் எண்ணற்ற நூல்கள் நின்று நிலவித் தமிழகத்தை அணி செய்கின்றன. இந்நூல்களின் ஏற்றத்தை உணர்ந்த எம் மொழி வல்லுநரும் 'இம்மொழி இணையில் மொழி'யென நம்மொழியைப் போற்றுகின்றனர். ஒரு நூலுக்குப் பதினாறு நூறாயிரம் பொன்னை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே வாரிக்கொடுத்துப் 'பட்டினப்பாலை' எனும் அப்பண்பார் நூலைக் கொண்டு புலவர்களை ஊக்கிய திருமாவளவன் வாழ்ந்த வண்டமிழ் நாட்டின் தாய்மொழிப் பற்று இன்று தமிழகத்தினின்றும் யாண்டொழிந்தது? அத்தகு சிறப்புடை மன்னர்களையும் வள்ளல்களையும் போன்று வாரிக்கொடுக்க வண்பொருள் இல்லையாயினும் தமிழகத்திற் பிறந்த நீவிர் உம்மாலியன்ற ஒரு துளி உதவியைத் தமிழ்மொழி வளர்ச்சிக்குச் செய்ய வேண்டாவோ? பலதுளி பெருவெள்ளமன்றோ? பலகற்கள் பொருந்தியன்றோ பெருந்தளியாகின்றது?

"நுங்கடமையை உணர்ந்து தமிழாக்கத்திற்கு உதவி புரிமின்! தனிக்கைதட்டின் பேரொலி எழும்புமோ? தமிழாக்கங்கருதி உண்மைப் பணியாற்றும் எம் கரந்தைத் தமிழ்ச்சங்கம் தனித்தமிழைத் தகவுடன் போற்றி வருவதை நீவிர் நன்கு அறிந்துள்ளீர்! நம்மொழி நலம் பேணப் பேரவாக்கொண்டு புலவர் கல்லூரியை வைப்புமுதல் (Fund) இன்றியே தோற்றுவித்து எம் சங்கம் நடத்தி வருகின்றது. தனித்தனியே மொழி வளர்ச்சிக்கு முயல்வோர் யாவரும் எம் சங்கத்தோடிணைந்து உழைத்தால் தாய்மொழி ஏற்றங்கண்டு ஒருங்கு களிக்கலாம் என யாம் சாற்றவும் வேண்டுமோ? ஒல்லும் வகையால் உதவ எண்ணுமின்!

"மொழியே உயிரெனும் முதற்குடிப் பிறந்தீர்!

வங்க நாட்டின் தாய்மொழிப் பற்றின் வன்மையை நிவீர் உணர்மின்! ஆந்திரர்தம் தாய்மொழிப் பற்றை ஆய்ந்தறிமின். அவர் மொழிப்பற்றும் அவர்தம் ஆற்றலுங்கண்டு அவரைப் போற்றாதா ருளரோ? அவர்தம் உலைவில் முயற்சியால் தத்தம் தாய்மொழிக்குத் தனித் தனிப் பல்கலைக்கழகங் கண்டிருக்கின்றனரே. நம் தமிழ்நாட்டில் நம்மொழிக்கெனப் பல்கலைக்கழகம் காண யாம் முயன்றோமா? பிறமொழிகளுக்கு எத்துணையோ உயர்நிலைப் பள்ளிகளும், கலைக்கழகங்களும் நம்நாட்டில் நிலவுகின்றனவே? அம்மொழியாளர்–களைக் கொண்டு யாம் நாணமடைய வேண்டாவோ? அரசியல் தேர்தல் எனின் சிறு பதவிக்கும் அளவற்ற பொருள்களை அள்ளியிறைக்கும் தமிழ்நாட்டுச் செல்வர்களே ஆய்ந்துணர்மின்! ஆவன செய்மின்! தாயைப் போற்றாதார் தாய்நாட்டிற்கு எவ்வாற்றாற் பணிபுரிவர்? தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்றெனத் தகவுடன் அறிமின். தமிழ்மொழி பிறமொழிச் சொற்களால் நெருக்குண்டு பீடழிவதை உணர்மின்! மொழித் தூய்மையே அம்மொழி பேசும் மக்களின் தூய்மையும் வாழ்வும் என்பதையுணர்ந்து பணி செய்மின்! பொங்கற் புதுநாளாகிய இன்று தாய்த்திறையாக ஒல்லும் பொருள்தந்து உதவுமின்! தாய்மொழியைப் போற்றி அவள் தண்ணருள் பெற எஞ்சங்கத்தோடியைந்து பணிபுரிய வம்மின்! தமிழ் தழைத் தோங்கத், தமிழ்க்கலையோங்கத், தமிழர் வீறுபெற்றுயர ஓயாது உழைக்க வம்மின்! வம்மின்!"

–இவ்வாறு பொங்கற் பெருநாளின்போது தங்கத்தமிழினத்தை அறைகூவியழைத்த அருமந்த வாய், பேசமுடியாமல் தானாக மூடிக்கொண்ட துயரந்தரும் நாளே–9 5.1941.

சிவமணக்கும் இன்சொல், உருமணக்கும் திருநீறு, இயலருள் ஒழுகும்கண்கள், அருள்மணக்கும் திரு நோக்கு, இள நகை ஒளிர்செவ்வாய், சொற்பொறுக்கும் செவிகள், வீரவுரை நவிலும் நாக்கு, செம்பாகத் தமிழ் பேசிச் சிரிப்புக் காட்டும் முகம், எடுப்பான திருவுருவம் – அத்தனையும் செயலிழந்த நாள்!

ஆம், கன்னலெனும் வடிவுடையோன், கருணையூற்று, கலைப்பெருக்கக் கடல் தந்த அமிழ்தமானோன், செந்நலத்தான், தண்ணளியான், பொங்குதமிழ்த்தாய்ப் பணிபோற்றி நின்ற புலவர் குழாம் குடியேறத்தகுந்தவாறு கரந்தைத் தமிழ்ச்சங்கம் வளர்த்து நின்றான், செந்தமிழை உலகமெல்லாம் பரப்ப எண்ணிச் சிந்தனை, சொல், செயல் மூன்றும் அதற்கே ஆக்கியோன். எல்லோரும் நலமடையப் பணிசெய்தோன். வன்மனத்தால் எடுத்த வினைதொடுத்து முடிப்போன்.

வாய்மையே வழக்கிலும் பேசுவோன், கன்மனத்தார் இளகும்வகை தமிழில் உள்ள கலைப்பெருமை விரித்துரைக்கும் நாவல்லோன், நன்மையெனும் கனிபழுத்த தருவாய் நின்ற நாயகன். தாயாகி உண்பித்தோன், தந்தையாய் அறிவளித்தோன், சான்றோனாகி ஆயாத நூல்பலவும் ஆய்வித்தோன்; அவ்வப்போது, அயர்ந்தகாலை ஓயாமல் நலமுரைத்து, ஊக்குவித்தோன், செந்தமிழ்த்தாயின் அருண்மகன் – அருந்தொண்டன் – உயிர்த்துணைவன் உமாமகேசுவரன் – இவ்வுலக வாழ்வினை நீத்த பெருநாள் 9–5–1941.

*''உணவெலாந் தமிழ்ச்சுவையே உறவெலாந்*
*தமிழ்ப்புலவ ருவக்கும் அன்பிற்*
*றணவிலா நன்மக்கள் தமிழ்பயிலும்*
*மாணவரே தமிழ்த்தாய்க் கேற்ற*
*குணநிலா வியமகனே யுமாமகேச்*
*சுரப்பெயர்கொள் கோவே! நிற்கு*
*மணமுலாம் நல்வீடு தமிழ்க்கழகம்*
*அன்றோநீ மறந்தாய் கொல்லோ?''*

(மு. கதிரேசச் செட்டியார்)

என்று அறிஞர் பலரும் ஏக்கமடையத் தமிழர் தலைவராம் 'தமிழவேள்' உமாமகேசுவரனார், பொன்னுடல் நீத்துப் புகழுடல் பெற்ற நாள்!

சரியாக ஐம்பத்தெட்டு ஆண்டுகள், இவ்வுலகில் வாழ்ந்த உமாமகேசுவரனார், தண்டமிழ்க் குடியிலே தோன்றிச் செயற்கரும் செயல்கள் செய்த தகைசால் தோன்றலாவார்!

## ஊரும் பெயரும்

அழகிய பூவாடையைப் போர்த்தியிருக்கின்ற அம்மங்கை நல்லாள், தன் கரிய கயற்கண்களால் விழித்துப் பார்க்கின்றாள்; இருபக்கங்களிலும் வண்டுகள் மிகுந்து ஒலிக்க, மெல்ல அசைந்து வருகின்றாள்; மலர்கள் மிகுந்த சோலையில் மயில்கள் ஆடவும், குயில்கள் இன்னிசை பாடவும், மாலைகள் அருகில் அசையவும் நடந்து வருகின்றாள். அவளுக்கேன் அத்துணைப் பெருமிதம்? ஆம், அதற்கும் காரணம் உண்டு. அவள் கணவன் செங்கோலனாயிற்றே! அவள் ஏன் அஞ்சி ஒதுங்கி நடக்க வேண்டும்?

*''மருங்கு வண்டு சிறந்தார்ப்ப*
*மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்*
*கருங்க யற்கண் விழித்தொல்கி*
*நடந்தாய் வாழி காவேரி*

*கருங்க யற்கண் விழித்தொல்கி*
*நடந்த வெல்லாம் நின்கணவன்*
*திருந்து செங்கோல் வளையாமை*
*அறிந்தேன் வாழி காவேரி''*

(சிலப்பதிகாரம், கானல்வரி : 25)

காவிரியாற்றைக் கற்புக்கடம் பூண்ட காரிகையாகவும், சோழப் பேரரசனை அவள் கணவனாகவும் கருதிச் சேரர் பெருந்தகை இளங்கோவடிகள் பாடிய பாடல் இது! 'கோள்நிலை திரிந்து கோடைநீடினும் தான் நிலைதிரியாத் தண்டமிழ்ப்பாவை' யாகிய காவிரியின் தண்ணருளால் நன்செய் வளம்பெற்ற நாடு சோழப் பெருநாடாகும்!

பிற்காலச் சோழர் காலத்தில், 'தஞ்சை' தலைநகராகச் சிறப்புற்று விளங்கியது. 'தண்மை + செய்' என்ற வடிவமே 'தஞ்சை' என்றாயிற்று என்றும்; 'தண் சாய் ஊர்' என்பதே 'தஞ்சை' யாயிற்று என்றும்; 'பழையாறை' என்பது 'பழையாறு' என்று ஆனாற்போலத் 'தஞ்சாறை' என்பது 'தஞ்சாவூர்' ஆயிற்று என்றும் கூறுவர். எனினும், பஞ்சம் என்பதைக் கிஞ்சித்தும் அறியாத சோழத் திருநாட்டில் தஞ்சை மாநகரம் தலைநிமிர்ந்து விளங்குவதைக் காணலாம். 'தஞ்சம்' என வந்து தாள் பணிவோர்க்கெல்லாம் 'அஞ்சேல்' என்று எஞ்சாது அருள் செய்யும் தன்மைத்து ஆதலின், 'தஞ்சை' எனும் திருப்பெயர் பெற்றது என்று கூறுதல் பொருந்தும்! அந்நகரில் அஞ்சன வண்ணனாம் திருமால் அமர்ந்து அருள்புரிகின்றான் எனத் திருமங்கை மன்னர் பாடுகின்றார்.

*''வம்புலாம் சோலை மாமதில் தஞ்சை*
*மாமணிக் கோயிலே வணங்கி*
*நம்பிகாள் உய்ய நான்கண்டு கொண்டேன்*
*நாராயணா என்னும் நாமம்''*

(பெரியதிருமொழி : பெரிய திருமந்திரம் : 6:3–4)

என்பது அம்மன்னர் பாடிய பாட்டு.

தஞ்சையை நினைக்கும்போதெல்லாம் நம் நெஞ்சத்தில் நிலைத்து நிற்பன மூன்று. ஒன்று, இராசராச சோழனின் பெரும்புகழ் பரப்பிக்கொண்டிருக்கும் பெருவுடையார் திருக்கோயில்; அடுத்துத் தமிழின் புகழைத் தரணிக்குணர்த்திக் கொண்டிருக்கும் (தஞ்சைக்) கரந்தைத் தமிழ்ச் சங்கம்; மற்றது, உலக விந்தைகளுள் ஒன்றெனக் கொள்ளத்தக்க அளவில் பெருமையுடன் நின்று கொண்டிருக்கும் 'சரசுவதி மகால்' எனும் கலைக்கோயில்!

தஞ்சைப் பெருநகரம் கி.பி. 7–முதல் 9–ஆம் நூற்றாண்டு வரை, பல்லவ ஆட்சியில் அவருடைய சிற்றரசர் முத்தரையருக்குத் தலைநகராக இருந்தது என்றும், பிற்காலச் சோழப் பேரரசுக்கு அடிகோலிய விசயாலயன் அதனைப் பெரும்பிடுகுமுத்தரையரிடமிருந்து கைப்பற்றினான் என்றும் வரலாற்றாசிரியர் கூறுவர். சோழர்கள் மட்டுமன்றிப் பாண்டிய, நாயக்க, மகராட்டிர மன்னர்களாலும் ஆட்கொள்ளப்பெற்ற நகரம் இது. இத்தகு மன்னர்களால் கட்டப்பெற்ற மாடமாளிகைகளையும், கூட கோபுரங்களையும் இன்றும் கண்டு களிக்கலாம்.

தஞ்சை நகரின் பெருமையனைத்தையும் தன் பெருமையாக்கிக் கொண்டவன் இராசராச சோழனேயாவான். மன்னர் மன்னனாக, மாநில வேந்தனாக, வெற்றி பல பெற்ற கொற்றவனாகக் கடல்சூழ் இலங்கையையும் வென்ற மாவீரனாக விளங்கினான் இவன். தமிழினிடத்தும் சைவத்தினிடத்தும் அளப்பரும் பற்றுக்கொண்ட இவன், முத்தமிழ்த்துறைகள் முழங்கிடச் செய்தான்; சைவத்தின் சிறப்பை உலகறியப் பெருங்கோயில் ஒன்றை எழுப்பினான். அது, தஞ்சைப் பெருவுடையார் எனும் இராசராசேச்சரமுடையார் கோயில் என்று பெயர் பெற்றது.

இக் கோயிலை முதல் இராசராசன் கி.பி. 1003–1009 வரையுள்ள ஏழு ஆண்டிற்குள் நிறுவினான். இக்கோயிலின் வெளிச்சுற்று நீட்டளவு 793 அடி; குறுக்களவு 397 அடி. கோயில் வாயில்களைக் கடந்து உள் நுழைந்தால் 500 அடி நீலமும் 250 அடி அகலமும் உடைய கருங்கல், செங்கல் பரப்பபட்ட பரந்த வெளியைப் பார்க்கலாம். அங்கே, ஒரே கல்லாலான பன்னிரண்டடி உயரம் ஒன்பதரை அடி நீளம் எட்டேகால் அடி அகலம், 25 டன் எடையுள்ள நந்தியம் பெருமான் காட்சியளிப்பார் இதனை அடுத்து உமாமகேசுவரி உலக முழுதுடையாளது திருக்காமக் கோட்டம் உண்டு. இவற்றின் எதிரே, தட்சிணமேரு விமானம் பொருந்திய பெருவுடையார் கோயில் ஈடும் எடுப்புமற்ற நிலையில் தோற்றமளிக்கும். இஃது அடித்தள முதல் முடிவரை. கருங்கல்லால் ஆனது. உள்ளே இருக்கும் சிவபெருமான், இலிங்க வடிவமானவர்; இராசராசேச்சரமுடையார் எனும் பெயரினர்; இந்த இலிங்கம் உலகிலேயே மிகவும் பெரிதென்பர் அறிஞர். கோயில் விமானம் 216 அடி உயரமுடையது; உச்சியில் இருபத்தைந்தேகால் அடி சதுரமும் எண்பது டன் நிறையும் கொண்ட ஒரேகல்லால் ஆக்கப்பட்ட பிரமரந்திரத் தளக்கல் உள்ளது திருமூலத்தானத் திருச்சுற்று மாளிகைச் சுவர்களில்

அழகிய வண்ண ஓவியங்கள் காட்சியளிக்கின்றன. இவை, ஏறத்தாழ 910 ஆண்டுகட்கு முற்பட்டவையெனின், இவற்றின் பழமையை என்னென்பது?

எனவே தஞ்சையம்பதியில் இராசராசன் எடுத்த தனிப்பெருங் கோயில் தமிழ்நாட்டில் சிறந்த அணியாய்த் திகழ்வதில் வியப்பொன்றுமில்லை. கருவூர்த் தேவர் என்னும் பெரியார்,

> *"... மின்நெடும் புருவத்து இளமயில் அனையார்*
> *விலங்கல்செய் நாடக சாலை*
> *இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை*
> *இராசரா சேச்சரத்[து] இவர்க்கே"*
>
> (திருவிசைப்பா, 16 : 8 : 3 –4 )

என்று பாடியுள்ளார். ஆங்குள்ள முருகனைக் கண்டு தொழுத அருணகிரிநாதர்,

> *"தஞ்சென வாம்அடி யவர்வாழத்*
> *தஞ்சையில் மேவிய பெருமாளே!"* (திருப்புகழ்)

என்று போற்றியுள்ளார்.

சோழனின் சமயப் பற்றுக்கும், செல்வச் சீர்மைக்கும், சிற்பக்கலை ஆர்வத்திற்கும் நிலைக்களனாய் நின்று இன்றும் அவன் பெருமையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கும் கலைக் கோயில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலாகும்.

தஞ்சையை யாண்ட மன்னரில், மக்களால் மதித்துப் போற்றத்தக்கவனாக விளங்கியவன் சரபோசியாவான். ஆங்கிலேயரிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்த அவன், அவர்கள் தந்த பொருளைக் கொண்டு கவலையின்றி வாழ்ந்தான்; கலைவாணரைப் போற்றினான்; கலைக்கூடம் கண்டான்; மருத்துவமனை அமைத்தான். அவன் காலத்தில் கலை, கவினுடன் விளங்கியது. இன்று அவன் கட்டிய மாளிகை பொலிவிழந்தது, மருத்துவ சாலை அழிந்தது ஆயினும் அருமையாகத் தொகுத்து வைத்த நூல்நிலையம் மட்டும் இன்றும் அவன் பெயரைச் சொல்லிக் கொண்டு நிற்கிறது அதுவே 'தஞ்சைச் சரசுவதிமகால்' ஆகும்.

## கருந்திட்டைக்குடி

இத்தகு தஞ்சை நகரின் ஒரு பகுதியாக விளங்கும அழகிய ஊர், கருந்திட்டைக் குடியாகும். இது காவிரியின் கிளைகளான வடவாற்றிற்கும் வெண்ணாற்றிற்கும் இடையில் அமைந்துள்ளது. இரு

ஆறுகளின் நடுவே திட்டாக அமைந்துள்ளமையால் 'திட்டை' என்னும் பெயர் பெற்றதெனலாம்.

'தஞ்சை'யைப் போலவே, இக் 'கருந்திட்டைக்குடி' என்ற ஊர்ப்பெயர் குறித்தும் பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன

கருவேல மரங்கள் மிகுந்துள்ளமையால் 'கருந்திட்டைக்குடி'; பிறவிப் பெரும் பிணியிலிருந்து விடுவிக்கும் ஊர் ஆதலின் 'கருவிட்டகுடி'; மகப்பேறு அளிக்கும் இறைவன் எழுந்தருளியுள்ள ஊர் ஆதலின் 'கரு இட்ட குடி'; மன்னன் ஒருவன், தனக்கு இருந்த 'கருங் குட்டம்' என்ற கொடிய நோயிலிருந்து இறைவனருளால் நலம்பெற்றான் ஆதலின், 'கருங்குட்டம் விட்ட குடி' என்றெல்லாம் கூறுவர்.

'கருந்திட்டைக் குடி' என்னும் இவ்வூர், பழமையாற் பெயர் பெற்றது. இங்குள்ள சிவன் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குக் 'கருவேலநாதர்' என்றும்; அம்பிகைக்குப் 'பெரிய நாயகி' என்றும் பெயர் வடமொழிவாணர்கள் வசிட்டேசுவரர். பிரகன்நாயகி என்கின்றனர். கோயில் சிறிதே எனினும் ஆங்குள்ள சிற்பங்கள், காலத்தால் பழமையானவை; சிறந்த வேலைப்பாடமைந்தவை. மேலும் பிற இடங்களில் இல்லாத சில புதுமைகளை இச்சிற்பங்களில் காணலாம். எடுத்துக்காட்டாக உமையொரு பாகனை (அர்த்த நாரீசுவரர்)யும், வாயில் காப்போரையும் (துவாரபாலகர்) குறிப்பிடலாம். உமையொரு பாகனின் வலப்பாதி பெண்ணுருவமாக, இடப்பாதி ஆணுருவமாக இருப்பது விந்தைக்குரியது. வாயில்காப்போரின் கைகள் நான்கிற்கு மாறாக இரண்டு மட்டுமே உள்ளன!

திருநாவுக்கரசர் தாம் பாடிய அடைவுத் திருத்தாண்டகத்தில், 'கருந்திட்டைக்குடி' என்ற பெயரைக் குறிப்பிட்டுள்ளார் என்பது நோக்கத்தகும்.

***"நற்கொடிமேல் விடையுயர்ந்த நம்பன் செம்பங்***
***குடி, நல்லக் குடி, நளி நாட்டியத் தான்குடி;***
***கற்குடி, தென் களக்குடி, செங் காட்டங்குடி,***
***கருந்திட்டைக் குடி, கடையக் குடி காணுங்கால்***
***விற்குடி, வேள் விக்குடி, நல் வேட்டங்குடி,***
***வேதிகுடி, மாணிகுடி, விடைவாய்க்குடி,***
***புற்குடி, மா குடி, தேவன்குடி, நீலக்குடி***
***புதுக்குடியும் போற்றஇடர் போகும் அன்றே!"***

(அப்பர் தேவாரம் : 71 : 3)

என்பது அவர் பாடிய திருப்பாட்டு!

இத்திருக் கோயிலில் காணப்படும் இருபது கல்வெட்டுக்களும், பல்வேறு அரிய செய்திகளை அளிக்கின்றன. இக்கோயிலில் கருப்ப இல்லின் மேலைப்புறச் சுவரில் 'திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்' என்று தொடங்கும் கல்வெட்டொன்று காட்சியளிக்கின்றது. ''இராசகேசரி சதுர்வேதி மங்கலத்துப் பேரவையோரால் பராந்தக தேவரின் திருமகளார் குந்தவைப்பிராட்டியார், கருந்திட்டைக்குடி, வடவாற்றின் வடகரையில் எழுந்தருளியுள்ள வசிட்டேசுவரருக்குத் திருநொந்தா விளக்கு வைப்பதற்கென்று, இராசகேச சதுர்வேதி மங்கலத்திலுள்ள நாலரைமா நிலத்தினை, மேற்படியாருக்கு விற்றுக் கொடுத்துள்ளனர்'' என்றும், ''இக்கல்வெட்டு முதலாம் இராசராசனின் பதினேழாவது ஆட்சியாண்டில் எழுந்தது'' என்றும் இந்தக் கல்வெட்டால் அறிய முடிகின்றது

எனினும் இன்றுள்ள சிலர் இத்தகு பெயர்களை யெல்லாம் விட்டுவிட்டுக் 'கருந்தட்டன் குடி' என்று சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

கருந்திட்டைக்குடி, கரந்தை என்ற மரூஉப் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. கரந்தை என்ற சொல்லுக்கு மீட்டல் என்று பொருள். பகைவர் கவர்ந்து சென்ற பசுக் கூட்டங்களை மீட்டுக் கொணர்தல் 'கரந்தை' யாகும் எனப் புறப்பொருள் இலக்கணம் புகலும் தமிழனின் இழந்த பழம் புகழினை மீட்டுத் தந்த பெருமை தற்காலத்துக் கரந்தைக்கு உரியது! எனவே 'கரந்தை' எனும் பெயர் கற்றோர் நாவில் களிநடம் புரிந்து கொண்டிருப்பதில் வியப்பேதுமில்லை!

## வேம்பப் பிள்ளை

கரந்தையில், சீரும் சிறப்புமுற்றுச் செல்வத்திற்றிளைத்த செழுங் குடிகள் பல வாழ்ந்து வந்தன அவற்றுள் அன்பும், பண்பும், ஆன்ற பெருமையும் பெற்ற அஃகமுடைய வேளாளர் குடியும் ஒன்றாகும்.

போரென்னப் பொருப்பன்ன புயங்கள் வீங்குமளவிற்குப் பேராண்மையுற்றகுடி மறக்குடியாகும் 'விழித்த கண் வேல் கொண்டெறிய அழித்திமைப்பின் ஓட்டன்றோ' என்ற கொள்கையுடைய குடி, மறக்குடியாகும். 'குழவி இறப்பினும் ஊன்றடி கழியினும் ஆளன்று, என வாளிற் றப்பார்' என்ற முதுமொழிக்குரிய குடி, மறக்குடியாகும் 'நின்மகன் புறமுதுகிட்டனன்' எனப் பேதையர் சிலர் கூற, 'அங்ஙனமாயின் அவனுக்குப் பாலூட்டிய மார்பினை அறுத்தெறிவேன்' என வஞ்சினமுரைத்துப் போர்க்களஞ் சென்று வாளால் தன் மகன் மாண்டு கிடக்கும் காட்சி கண்டு 'ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்த' வீரமங்கையர் தோன்றிய குடி, மறக்குடியாகும்

இத்தகைய மறக்குடியினர் பலர் இன்றும் நம் தமிழகத்தில் வீறுகொண்டு விளங்கி நிற்கின்றனர். இவர்கள், 'முக்குலத்தோர்' என்னும் பெயரால் தமிழகத்தில் தலைசிறந்து விளங்குபவர்கள். இவர்களில், ஒரு பிரிவினர் 'அகம்படியர்' என்றழைக்கப்படுகின்றனர். 'அஃகம் (நெல் முதலான கூலவகைகள்) உடையர்' என்பதே 'அகமுடையார்'; வாணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டி, அவற்றை வறியவர்க்கு வழங்கும் வள்ளல் மனம் (நல்ல அகம்) படைத்திருந்தமையால் 'அகம் உடையார்'; அமைச்சர் முதலான அரசுப் பணிகளில் அமர்ந்து, அரசனுக்குத் துணை செய்ததுடன், போர்க் காலங்களில் அரண்மனையிலேயே தங்கியிருந்து (அகம் படிந்து) புறத்தே சென்ற படைகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தமையால் 'அகம்படியர்'; அகத்திற்குப் படிவரேயன்றிப் புறத்திற்கு (வீரத்திற்கு)ப் படியும் பண்புடையவரல்லர், எனவே 'அகம்படியர்', இப்படிப் பலகாரணங்கள் சொல்லப்படும்.

இக்குலத்தினர், 'பிள்ளை' என்னும் பட்டப்பெயர் கொண்டு விளங்குவாராயினர். போர்க்களத்தில் 'பிள்ளைமைத் தன்மையோடு' எதற்கும் அஞ்சாது செயல்புரிபவர்கள் 'பிள்ளை' என்றழைக்கப்பட்டனர் என்பது இங்குக் குறிக்கத்தகும்

தன்னாடு தமிழ் நாடாகவும், தன்குடி தமிழ்க்குடியாகவும் தோன்றிய **தமிழவேள் உமாமகேசுவரனார்** தஞ்சைக் கரந்தையில் ஓர் உயர்ந்த அகம்படியர் குடியில் தோன்றியவர் இவர் தந்தையார் வேம்பப் பிள்ளை என்பார்; பாட்டனார் வைத்தியலிங்கம் பிள்ளை என்பார்

வைத்தியலிங்கம் பிள்ளையும் அவர் முன்னோரும் கரந்தையையடுத்த சுங்காந்திடல் என்ற சிற்றூரினர். 'காடு கொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம்பெருக்கும்' உழவுத் தொழிலே உயர் தொழிலெனக் கொண்டவர்கள்; கள்ளமில்லா உள்ளமுடையவர்கள். இரவாமலும் இரவார்க்கொன்று இல்லையென்னாமல் ஈதலுமாகிய பண்புகளைப் பெற்றவர்கள். இவர்களின் உறவினர்களிற் சிலர் தஞ்சையின் கிழக்கு, வடகிழக்கு, காவிரியின் படுகைகள் முதலிய பகுதிகளிலும் பரவலாக வாழ்ந்து வந்தனர். உழவே தலையாய தொழிலெனக் கொண்டவர்களாயினும், ஓரளவு தமிழ்ப்படிப்பும் அறிந்தவர்கள். தமிழ் நெடுங்கணக்கு, ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், புராண நூல்கள் – இவற்றில் ஓரளவு பயிற்சியும் பெற்றவர்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது இக்குடும்பத்தினர் சிலர் நல்ல ஆங்கிலப்படிப்பும் பெற்று, உயர்ந்த அலுவல்களில் அமர்ந்து பெருமை பெற்றுத் திகழ்ந்தார்கள் அக்காலத்தில் மாணிக்கம் பிள்ளை,

இராசகோபால் பிள்ளை, சுப்பிரமணிய பிள்ளை என்ற மூவரும் இக் குடும்பத்தில் ஆங்கிலம் அறிந்து, பெரிய வேலைகளில் அமர்ந்து பேர் பெற்றவர்களாவர்!

வைத்தியலிங்கம் பிள்ளையின் ஒன்றுவிட்ட தமக்கையார் அன்னபூரணி என்னும் அழகுத் திருப்பெயர் கொண்டு விளங்கி வந்தவர். அம்மங்கை நல்லாளைக் கரந்தையில் 'நாட்டாண்மைக்காரர்' என்றும் 'பெரிய வீட்டுக்காரர்' என்றும் புகழப்பெற்ற சண்முகத்தாபிள்ளை என்பார், தம் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டார். இவர்கள் குடும்பம் பெருகத் தலைப்பட்டது. எனவே, தம் வாழ்க்கை வளமுறுதற் பொருட்டுச் சண்முகத்தா பிள்ளை, தம் வீடு முதலியவற்றைத் தம்முடைய உறவினர் மேற்பார்வையில் விட்டுவிட்டுக் குடும்பத்துடன் திருச்சி–தென்னூர் சென்று தங்கத் தலைப்பட்டார். தம் மக்கள் ஆடவர் ஐவரையும் ஆங்கிலப் படிப்புப் படிக்கவைத்து, உயர்ந்த அலுவலில் அமர்த்தினார். அம்மக்களில் சிலர் மேலை நாட்டிற்கும் சென்று திரும்பி வந்தவராவர்!

கரந்தையில், கணவரை இழந்து மக்கட்பேறில்லாத–உறவால் நெருங்கிய அம்மையார் ஒருவர், சுங்காந்திடல் வைத்தியலிங்கம் பிள்ளையைத் தம் வளர்ப்பு மகனாக ஏற்றுக் கொண்டார். அதன் பயனாய், வைத்தியலிங்கம் பிள்ளை, கரந்தையில் குடியேற வேண்டியதாயிற்று. அங்ஙனம் வந்தவர், பலசரக்குக் கடை வைத்துப் பணந்திரட்டலாயினார். தக்க வயதில் மணமுடித்துக் கொண்டு வளமார்ந்த வாழ்க்கையினை நடத்தலாயினார். நான்கு குழந்தைகட்குத் தந்தையாயினார். அந்நால்வரில் ஒருவர் ஆடவர்; மூவர் பெண்டிர். அந்த ஆடவரே, உமாமகேசுவரனாரின் அருமைத் தந்தையாரான வேம்பப்பிள்ளை!

சண்முகத்தாபிள்ளையைப் பின்பற்றி வைத்தியலிங்கம் பிள்ளை, தம் மகனை ஆங்கிலப் படிப்புப் படிக்க ஏற்பாடு செய்தார். அக்காலத்தில் தஞ்சை நகரின் தென்கோடியில் ஆங்கில நன்மக்களிற்சிலர், கல்வியையும் தம் மதத்தையும் பரப்பப் பெருந்தொண்டு புரிந்து கொண்டிருந்தனர் அவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர் மார்சு **(Marsh)** என்பவராவர். இவர் ஆங்கிலத்துடன் தமிழையும் நன்கு கற்றறிந்தவர். ஏழை எளியவரிடத்து என்றும் இரக்கங்காட்டுபவர். தஞ்சையில் தூயபேதுருபள்ளியின் தலைவராக இருந்து அறிவிற் சிறந்த மாணவர் பலரை உருவாக்கியவர். தமிழகத்தில் பல்லாண்டுகள் தங்கிப் பணிபுரிந்தவர். இடையில் சில காலம் இங்கிலாந்து சென்று அங்குத் தங்கிப் பின் மீண்டும் இந்தியா வந்தவர்; செயப்பூர் அரச

குடும்பத்தினருக்கு ஆங்கில ஆசிரியராய் இருந்தவர். செய்ப்பூர் அரசர் தென்னாட்டிற்குப் பயணம் செய்தபோது இவரும் உடன் வந்து, தஞ்சையில் சிலகாலம் தங்கித் தம் பள்ளியையும், தம்மிடம் பயின்ற மாணவர்களையும் கண்டு மீண்டும் தாயகம் செல்லும் வழியில் கடற்செலவின்போதே இயற்கை எய்தியவர்! இவர்தம் மாணவர்கள், நன்றிக்கு வித்தாக இவர் பெயரால் தஞ்சை நகரில் 'ஒற்றுமைக்குழு'வின் (Union Club) மேல்மாடத்தைக் கட்டியுள்ளனர். அஃது இன்றும் மார்சுத் துரைமகனார் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறது!

இத்தகு நல்லாரான மார்சுத் துரையிடம் வேம்பப்பிள்ளை தூயபேதுரு கல்லூரியில் இடைக்கலை வகுப்பு (F.A.) வரை பயின்றார். அதற்கு மேல் அக்காலத்தில் படித்தற்கு வாய்ப்பு இல்லை. வேம்பப்பிள்ளையுடன் கல்வி பயின்ற பள்ளித் தோழர்களில் பலர் பிற்காலத்தில் அரசாங்க உயர் அலுவல்களில் அமர்ந்து சிறப்புற்றனர். கிருட்டிணசாமி ஐயர், நரசிம்மலுநாயுடு, குமாரசாமி வாண்டையார், சதாசிவ ஐயர், சண்முகம் பிள்ளை முதலியோர் அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

கல்லூரிப் படிப்பை முடித்த வேம்பப்பிள்ளை, அக்காலத்தில் வல்லத்தில் இருந்த தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எழுத்தர் பணியை மேற்கொண்டார். நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் உடையவராதலின் படிப்படியாக இவருக்கு வேலை உயர்வுகள் அடுத்தடுத்துக் கொடுக்கப் பெற்றன. மன்னார்குடி வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிரசுதார் ஆகவும், சீகாழி வட்ட ஆட்சியராகவும், கும்பகோணத்தில் துணை நடுவராகவும், பணி புரிந்து, அரசினராலும் பொதுமக்களாலும் பெரிதும் பாராட்டப் பெற்றார். தம்மைப் போலவே தகுதிகள் பெற்றவரும் தமக்கு நெருங்கிய நண்பருமான ஒருவரது வீடு பற்றிய வழக்கு ஒன்று தம்மிடம் வந்தபோது, நடுவு நின்ற நன்னெஞ்சினராய வேம்பப்பிள்ளை, வழக்கினைப் பலகால் துருவி ஆராய்ந்தார். முடிவில் தம் தீர்ப்பை வழங்குகையில் அது நண்பருக்கு எதிராகவே அமைந்தது எனின் இவர்தம் 'சமன்செய்து சீர் தூக்கும்' தன்மையை என்னென்று புகழ்வது? இவருடைய நெறியையும் உயர்குணங்களையும் இன்றுங்கூடப் பாராட்டுவாரைக் கரந்தையிற் காணலாம்.

காலஞ்சென்ற இராவ்பகதூர் சீனிவாசபிள்ளை, இவரைப்பற்றிக் கூறும்போது, ''வேம்பப்பிள்ளையினுடைய குண நலங்களும் நீதிமுறைகளும் பலரும் அறிந்தனவாகும். ஆனால், அவருடைய

அறிவின் மாட்சியையும், தெளிவையும், தத்துவக் கருத்துக்களை எவரும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் எளிய நடையில் எழுதும் ஆற்றலையும் ஒரு சிலரே அறிவர். புனைபெயரால் அவரெழுதிய ஆங்கிலக் கட்டுரைகள் பலவாம்'' என்று குறிப்பிடுவது, பிள்ளையின் சிறப்பைத் தெற்றெனத் தெரிவதற்குப் போதிய சான்றாகும்.

வேம்பப்பிள்ளை, இசையில் மிக ஈடுபாடு கொண்டவர். தக்க ஆசிரியரிடம் 'பிடில்' கற்றிருந்தார் தம் வாழ்நாளின் இறுதி வரையிலுங்கூடப் பிடில் இசைப்பதைக் கைவிடவில்லை. உடற் பயிற்சி செய்வதிலும் விருப்பங் கொண்டவர். கர்லாக்கட்டை தூக்கும் பயிற்சியை இடைவிடாமல் செய்துவந்தார். சிந்தாந்த, வேதாந்தங்களை அறிவதிலும், பிறரோடு சொற்போர் நிகழ்த்தி உண்மையறிவதிலும் வேட்கை உடையவர். கரந்தையிலிருந்த பால்சுவாமிகளுடன் வேதாந்தம் பற்றி அடிக்கடி தடைகளை எழுப்பி அவரைத் திணறச் செய்துள்ளார்.

### உமாமகேசுவரர் தோற்றம்

வேம்பப்பிள்ளை, தமக்கு உற்ற வயதுவந்தபோது கரந்தையில் தம் உறவினர் குடும்பத்தைச் சார்ந்த அருங்குணங்களுடன் ஓரளவு தமிழறிவும் கொண்ட காமாட்சி அம்மையை மணந்து இல்லறக்கடன்களை இனிதே ஆற்றிவந்தார் இவ் இல்லற வாழ்வின் பயனாய்த் தர்மசம்வர்த்தினி என்னும் பெண்மகவு, தலைமகவாய்த் தோன்றியது. இவர்கள் தம் குலம் விளங்கவும் தம் பெயர் துலங்கவும், தக்க அறிவுடை மகனைப் பெற்றெடுக்க வேண்டுமெனும் பெருவிருப்பத்தால் நாளும் தஞ்சைப் பெருவுடையானையும், உமாமகேசுவரியையும் வழிபட்டு வரலாயினர். சித்தத்தைச் சிவன்பாலே வைத்து, நாளும் வழிபட்டுவரும் மெய்யடியார்க்கு உமையொருபாகன் உளம் இரங்காதிருப்பனோ? அவன் திருவுளப்படி, தண்டமிழின் நிலை தரணியில் ஓங்கவும், தமிழரின் புகழ் தலைமை எய்தவுமாக, அன்பே உருவெடுத்தாற் போன்ற அழகிய ஆண்மகவு ஒன்று பிறந்தது. உமாமகேசுவரியின் திருவருளால் தோன்றிய அம்மகவுக்கு **உமாமகேசுவரன்** என்றே பெயரிட்டழைப்பாராயினர் பெற்றோர்!

அடுத்துத் தோன்றியவர்கள் மூவர் இராதாகிருட்டிணன், கோபால்சாமி, செண்பகவல்லி என்னும் பெயர்கள் அவர்கட்குச் சூட்டப்பட்டன கோபால்சாமி இளமையிலேயே இயற்கை எய்திவிட்டார் இந்நிலையில், காமாட்சியம்மையார் இரட்டைக்

குழந்தைகளைப் பெற்றெடுத்தார். அவைகளும் இறந்துபோயின. சின்னாளில் காமாட்சியம்மையாரும் இறந்துபடவே, அவ்வம்மையாருக்குச் சிறிய தந்தையாரின் மகளைத் தம் இரண்டாம் மனைவியாகக் கொண்டார் வேம்பப்பிள்ளை. இவ்வம்மையாருக்கு ஒரு பெண்மகவு பிறந்தது. இக்குழந்தைக்கு மூத்த மனைவி பெயராகிய காமாட்சி என்ற பெயரே இடப்பெற்றது.

**தமிழவேள் த.வே. உமாமகேசுவரனார்,** இவ்வுலகில் தோன்றுதற்குப் பெருமை பெற்ற நாள்–1883 ஆம் ஆண்டு மேத் திங்கள் 7–ஆம் நாள் (சுபானு ஆண்டு சித்திரை – 26 திங்கட்கிழமை) ஆகும்.

இளங்குழவியாய் இருக்கும்போது, பெற்றோர் தம் மகவைத் தொட்டிலில் இட்டு, உறக்கம் உண்டாகப் பண்டைத் தமிழரின் பெருமையும் வீரமும் ஈரமும் கூறி, கன்னல் தமிழால் பண்ணோடு பொருந்தத் தாலாட்டுப் பாடுவர்; அதனைக் கேட்டுக் குழந்தை உறக்கம் கொள்ளாமல் கண்களில் நீர்வர விருப்புடன் கேட்ட நாட்கள் கணக்கில. குழந்தை வளரும் போது தமிழ்ப்பற்றும் சேர்ந்தே வளர்வதாயிற்று

## பள்ளிப் படிப்பு

உமாமகேசுவரனார், குடும்பத்திற்கு மூத்தபிள்ளையாதலாலும் கண்டாரைக் கவர்ச்சிகொள்ளும் கனிந்த பார்வையுடையவராதலாலும் பெற்றோர் மட்டுமன்றி உற்றாரும் மற்றாரும் அவரை உவகையுடன் எடுத்துக் குலவி மகிழ்வர். செல்வக்குடும்பத்தில் சீருடன் வளர்க்கப்பெற்ற உமாமகேசுவரனார் உரியபருவத்தே பள்ளிக்கு அனுப்பப்பெற்றார். 'விளையும் பயிர் முளையிலே' என்பதற்கேற்பக் கல்வியில் கரையிலா ஆர்வம் பொங்கித் ததும்பத் தங்குதடையின்றி ஆண்டுதோறும் வகுப்புகளில் வெற்றிபெற்று வந்தார் இவ்வாறு மூன்றாம் படிவம் வரையிலும் இவர்தம் படிப்பு வல்லத்திலும், கும்பகோணத்திலும் நிகழ்ந்தது. அக்காலத்தில் மூன்றாம் படிவத்தேர்வு அரசினரால் நடத்தப்பெற்று வந்தது. அத்தேர்வில் வெற்றிபெற்றார் உமாமகேசுவரனார்.

உமாமகேசுவரனாருக்கு ஆண்டு பன்னிரண்டாகும்போதே இவர் தம் ஆருயிர் அன்னையை இழக்கலாயினார். தாயில்லாக் குறையைப் போக்கத் தந்தை கொண்ட முயற்சிகள் அளவிறந்தன., அம்மக்களைக் கருத்துடன் காத்தற்கென்றே மறுமணம் செய்து கொண்டாரேனும்,

தாமே தாயாய், உடன்பிறந்தாராய், மற்றுளோராய் விளங்கித் தம்பிள்ளைகட்குக், குறிப்பாகத் தலைமகனுக்கு மனக்குறை எதுவும் நிகழாமற் காத்துவந்தார் வேம்பப்பிள்ளை.

தம்மகன் தம்மைவிடக் கல்வியறிவிற் சிறந்த சான்றோனாகத் திகழ வேண்டும் என வேம்பப்பிள்ளை விருப்பங்கொண்டதில் வியப்பில்லையன்றோ? அடுத்தடுத்துப் பதவி உயர்வால் வெளியூர் செல்லும் தம் நிலையை எண்ணிப் பார்த்தார்; அதனால் தம் செல்வனின் படிப்புக்கு இடையூறு நேருமே எனக் கவன்றார்; எனவே தம் மூத்த மனைவியின் தங்கையும், உமாமகேசுவரரின் சிற்றன்னையுமான கரந்தை பெரியநாயகத்தம்மையாரிடம் தம் மகனை ஒப்படைத்தார். இதற்கு முன்னரே, மகள் செண்பகவல்லியும் அந்த அம்மையார் வீட்டில்தான் வளர்ந்து வந்தாள். தம் தந்தை விருப்பப்படி உமாமகேசுவரனார் கரந்தையில் தங்கிப் படித்து வரலானார்.

பெரியநாயகத்தம்மையாரின் கணவர் சுப்பராயபிள்ளையென்பார். கரந்தையில் வணிகப் பெருஞ்செல்வராய் விளங்கி வந்தார் பரந்த நோக்கமும், விரிந்த சிந்தையும், சுற்றந்தழுவும் பண்பும், விருந்துபேணும் இயல்பும் இயற்கையாய்க் கொண்டவர் அவர். அவருக்குச் 'சிதம்பரம்' என்ற ஆண் மகவு ஒன்று உண்டு. தம் செல்வன் சிதம்பரத்தைவிட உமாமகேசுவரனாரிடத்துப் பேரன்பு பூண்டவர் சுப்பராய பிள்ளை. உமாமகேசுவரனாரின் வாழ்வும் வளமும் சுப்பராயபிள்ளையின் கண்காணிப்பினாலேயே மேனிலை உற்றன என்று கூறினும் பொருந்தும்

தஞ்சைத் தூய பேதுரு கல்லூரியில் நான்காம் படிவத்தில் சேர்க்கப்பெற்றார் உமாமகேசுவரனார். அப்போது இவருக்கு ஆங்கிலங்கற்பித்த ஆசிரியர் சண்முகம்பிள்ளை என்பவராவர். இப்பிள்ளை, வேம்பப்பிள்ளையுடன் உடன் பயின்ற ஒருசாலை மாணவர்; வேம்பப் பிள்ளையின் மிக நெருங்கிய நண்பருமாவார் எனவே தம் நண்பரின் பிள்ளையை ஆங்கிலத்தில் சிறந்த அறிவுள்ளவனாக்க வேண்டும் என்று உறுதி கொண்ட சண்முகம்பிள்ளை, ஒவ்வொரு வாரமும் ஞாயிறன்று தஞ்சையினின்றும் கரந்தைக்கு நடந்தே வந்து ஆங்கிலம் சொல்லித் தருவார் இவரது பாதுகாப்பினால், இயற்கையாக அமைந்த தமிழறிவுடன் போதிய ஆங்கில அறிவும் உமாமகேசுவரனாரிடம் நன்கு உரம் பெறுவதாயிற்று பிற்காலத்தில் உமாமகேசுவரனார், ஆங்கிலத்தில்

கடல்மடை திறந்தாற் போல் பேசவும் எழுதவும் வல்லவரானார் என்றால் அதற்கு வித்திட்ட பெருமை சண்முகம் பிள்ளைக்கே உரியது! வேம்பப்பிள்ளை இறந்த பின்னருங்கூட இவர், உமாமகேசுவரனாருக்குப் பாடஞ்சொல்லுதற் பொருட்டுக் கரந்தை வந்து போனார் என்றால் இவர்தம் உள்ளன்பை, நட்பின் பெட்பை எங்ஙனம் இயம்புவது? உமாமகேசுவரனாரும், தம் ஆசிரியர் செய்த நன்றியை மறந்தாரிலர். அவர் இறக்குங்காலம் வரையிலும் தம்மாலான உதவிகள் அனைத்தும் செய்து, தம் நன்றிக்கடனை ஆற்றியுள்ளார்.

கல்லூரியில் பயின்ற காலத்து உமாமகேசுவரனார் மேற்கொண்ட கடமைகள், பிற்காலத்தில் பேரறிஞராக வருவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தன. பள்ளி நேரம் தவிரப் பிற நேரங்களில் இவர், தம் வீட்டைவிட்டு வெளியே செல்லமாட்டார். ஏதாவது ஒருநூலைப் படித்துக் கொண்டே இருப்பார். வீண்பொழுது போக்க வேண்டும் என்ற எண்ணம் எள்ளளவும் இல்லாதவராதலின், தமக்கு இனிய பள்ளித் தோழர்கள் வீட்டிற்குக்கூடச் செல்லமாட்டார்; அந்நண்பர்கள்தாம் இவரை வீடு தேடி நாடி வந்து வேண்டுவன பெற்றுப் போவர். விளையாட்டில்கூட விருப்பங்கொள்ளார்; 'புத்தகப்புழு'ப் போல எந்நேரம் நூலுங்கையுமாகவே காட்சியளிப்பார். நாள்தோறும் பக்கத்தே உள்ள மீனாட்சியம்மன் கோயிலுக்குமட்டும் செல்லுவார்; முறையாக வலம்வந்து வழிபாடு செய்து வீடு திரும்புவார். இளமையிலேயே கடவுட்பற்றும், சைவப்பற்றும் இவர்பால் மிகுந்து விளங்கின. அதனாலேயே இவர், தாம் அலுவல் பார்க்கச் சென்ற காலம் வரையிலும் இவ்வழிபாட்டைச் சிறிதும் தவறாமற் செய்து வந்தார்.

தம்முடன், தம்பியரும் கல்லூரி வரவேண்டியிருந்தமையால் தமக்கென அமைந்த சொந்த வண்டியிலேயே தஞ்சைக் கல்லூரி சென்று திரும்புவார். நண்பகலுணவு தக்கார் வாயிலாகக் கல்லூரி சேர்க்கப்படும். சிலபோழ்து சிற்றன்னை பெரியநாயகத்தம்மையாரே கொண்டு செல்வதுமுண்டு.

இங்ஙனம் இருக்கையில், தந்தை வேம்பப்பிள்ளை சீகாழிக்கு மாற்றப்பட்டார். சிலதிங்களில் அவரின் வயது முதிர்ந்த தந்தை வைத்தியலிங்கம் பிள்ளை இறையடி சேர்ந்தார். தம் தந்தைக்குப் பதினாறாம்நாள் இறுதிக்கடனாற்றுதற்கென மூன்று திங்கள் விடுப்புப் பெற்றுக் கரந்தையில் தங்கியிருந்தார் வேம்பப்பிள்ளை. இந்நிலையில்

எவரும் எதிர்பாராத வகையில், தந்தை இறந்த பதினைந்தாவது நாளன்று, தந்தையைப் பின்பற்றி வேம்பப் பிள்ளையும் திடுமென இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்!

தாயினை இளமைக்காலத்திலேயே இழந்து துன்புற்ற உமாமகேசுவரர், தம் படிப்பு முடிவதற்குள் அரிய தந்தையையும் இழக்க வேண்டியவரானார் என்னே கொடுமை! அன்றுமுதல் உமாவின்* உடன்பிறந்தாரும் வீ. சுப்பராயபிள்ளையின் வளர்ப்பிலேயே இருந்து வரலாயினர். வேம்பப்பிள்ளையின் இரண்டாம் மனைவி, தம் ஒரே மகளுடன் கரந்தையிலுள்ள தம் தந்தை வீட்டில் வாழ்ந்து வரலாயினார்.

முன்னர்க் கூறியவாறு சுப்பராய பிள்ளையும் அவர்தம் அன்புத் துணைவியாரும், பெற்றோரை இழந்த பெருந்துயரால் வருந்தும் பிள்ளைகட்கு ஆறுதல் மொழிகள் பல புகன்று அன்பும் ஆதரவும் அளித்தனர், இதனால், பெற்றோரை இழந்த கவலை, பிள்ளைகட்குத் தெரியாதுபோயிற்று.

உயர் குடியிற் பிறந்து, உயர் குடியிற் புகுந்து, உயர்ந்த முறையில் மனையறங் காத்த மாண்புடையவர் பெரியநாயகத்—தம்மையார். ஆதலின், உமாவைத் தம் மூத்த மகனாகவே கருதி வளர்த்துவந்தார் 'இவ்வுலக வாழ்விற்குப் பொருளே பெரிதும் வேண்டற்பாலது' எனக் கருதிய வைத்தியலிங்கம் பிள்ளை, தம் பெயரன் 'உமா'வை மேல்படிப்பிற்கு அனுப்பி வைக்காமல் வாணிகத் துறையில் ஈடுபடுத்த வேண்டும் என விரும்பினார் ஆனால், அவ்வெண்ணத்திற்கு முற்றிலும் மாறாக நின்று, 'உமா'வைப் படிக்க வைத்த பெருமை, கற்பிற் சிறந்த இவ்வம்மையாருக்கே உரியது! தமிழவேள் பிற்காலத்துத் 'தமிழின் வாழ்வே தம் வாழ்வு' எனக் கொண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவராய்ப் புரந்தகாலை, தமிழவேளின் விருந்தினராகச் செல்லும் தமிழுலகப் புலவர்கட்கும் அன்பர்கட்கும் உள்ளம் மகிழ வேண்டும் உதவிகளனைத்தும் ஆற்றிய சிறப்பு இவ்வம்மையாருக்கு உண்டு உற்றார் உறவினர், அறிந்தார், அறியாதார் என்ற வேறுபாடின்றி யாவர்க்கும் வேண்டும் மருந்துகளை அள்ளிவழங்கிக் காத்தருளிய கொடை வள்ளலாக விளங்கியவர்; தம் செல்வக் குடும்பத்தினைச் சார்ந்தவர்கட்கும், பணியாட்களுக்கும், இரவலர்க்கும், பிறர்க்கும் நாடோறும் தம்

★ *உமா – உமாமகேசுவரனார்*

அறக்கரங்களால் அமுதனைய இன்சொல்லோடு, நல்லமுதை வாரி வழங்கும் நெறியில் ஒரு கற்பகத்தருவாகவும், காமதேனுவாகவும் விளங்கியவர். இத்தகு நல்லாரான அம்மையார் உமாவின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்டு, உமா இறந்தபின்னரும் சில ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து, தம் 95–ஆம் வயதில் (27–7–1949இல்) மறைந்தார். இவ்வம்மையாரின் வளர்ப்புமுறையே, உமாமகேசுவரனாரை உலகில் ஒரு தனிமனிதராக – ஒப்பற்ற தலைவராக – தமிழவேளாக ஆக்கியது எனத் துணிந்து கூறலாம்.

## கல்லூரிக் கல்வி

வளர்ப்பன்னையின் ஊக்கமும், இயற்கையறிவும் துணை செய்யத் தஞ்சைத் தூயபேதுரு கல்லூரியில் இளங்கலை (B.A.) வகுப்பு வரை படித்து வெற்றி பெற்றார் உமா. உடனே, தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எழுத்தர் பணியை மேற்கொண்டார். காலையில் பத்துமணிக்கு அலுவலகம் செல்பவர், இரவு பத்துமணிக்கே வீடு திரும்புவார். வேலை மிகுதியால் குறிப்பிட்ட நேரத்தில் உணவு கொள்வதில்லை; இதனால் இவருடல் மெலிவதாயிற்று. சிறிய தந்தை சுப்பராய பிள்ளைக்கு இது பிடிக்கவில்லை; 'வேலை வேண்டாவென்று சொல்லிவிடு' என்று ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தார். அதற்கேற்றாற் போல், நேர்மையின் உறைவிடமாக விளங்கிய உமாவுக்கும் துணைமாவட்ட ஆட்சியருக்கும் (Deputy Collector) சிறிது மனத்தாங்கல் உண்டாயது. உடனே தம் வேலையை வேண்டாமென்று உதறித் தள்ளிவிட்டு, மேற்கொண்டு என்ன செய்யலாம் எனச் சிந்தித்தார் உமா. சட்டப் படிப்புப் பயின்று வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்வதே நலம் எனக் கருதினார் உமா. எனவே சென்னை செல்லத் திட்டமிட்டார் இவர்தம் உள்ளக்கிடக்கையின் வழியே செயல்புரியும் சிற்றன்னையார், உமாவுடன் சென்னை சென்று, தம் குடும்ப நண்பர் ஒருவரது இல்லத்தில் இருக்கச் செய்து திரும்பினார். இடையிடையே தாமும் சென்னைக்குச் சென்று சின்னாள் தங்கி உமாவின் உடல் நலமறிந்து வருவார்.

சென்னைச் சட்டக் கல்லூரியிற் சேர்ந்த உமாமகேசுவரனார் சட்டக்கலைத் தேர்விலும் (B.L.) வெற்றி பெற்றுக் கரந்தை திரும்பி னார். அக்காலத்தில் தஞ்சை கே. சீனிவாச பிள்ளையைத் தெரியாதார் தமிழகத்தில் யாரும் இருந்திருக்க முடியாது. சிறந்த வழக்கறிஞர்; நல்ல தமிழறிஞர். 'தமிழ் வரலாறு' போன்ற நூல்களை ஆக்கித்

தந்தவர்; தஞ்சை நகரவைத் தலைவராயிருந்து நல்ல பணிகள் பல புரிந்தவர்; ஆங்கில அறிவுடன் ஓரளவு வடமொழியும் தெரிந்தவர்; சட்டத்துறையில் வல்லவர்; பெரிய வழக்குகளை எடுத்து வெற்றி தேடித் தருவதில் கைதேர்ந்தவர்; பொறியியலிலும் போதிய அறிவு பெற்றவர். இன்னோரன்ன தன்மைகளால் அவர் புகழ் யாண்டும் பரவியிருந்தது. மேலும் வேம்பப்பிள்ளையின் நெருங்கிய நண்பர்; பள்ளித் தோழருமாவார். எனவே அன்னாரிடம் வழக்குப் பயிற்சி **(Practice)** பெறுதல் நன்றெனக் கருதினார் உமாமகேசுவரனார் எனவே சில ஆண்டுகள் அவரிடம் பயிற்சி பெற்று, வழக்குரைக்கும் வன்மையறிந்து, பின்னர்த் தாமாக அத்தொழிலைச் செய்யத் தொடங்கினார்.

## மண வாழ்வு

இதற்கிடையில் உமாவுக்கு மணம்முடித்து வைக்க வேண்டுமெனச் சிற்றன்னையார் விரும்பினார். அன்னையின் அன்புக் கட்டளைக்கு எதிர் நிற்பரோ உமா? உடன்பாட்டினைத் தெரிவித்தார். திருச்சியில், நெருங்கிய உறவினராகச், செல்வக்குடும்பத்தினராகத் திகழ்ந்த தாசில்தார் அண்ணாமலைப் பிள்ளையின் தம்பியார் அரங்கசாமிப் பிள்ளை என்பார்க்கு அருமைத் திருமகளாராக **உலக நாயகி** என்னும் அம்மையார் அறிவும் திருவும் ஒருங்கே பெற்றவராக விளங்கினார். அத்தகு நல்லாரே உமாவின் வாழ்க்கைத் துணைவியாவதற்கு உரியர் எனச் சிற்றன்னையார் கருதினார்.

நல்லநாளும் வேளையுங் கூடிய பொன்னாளில், கருந்திட்டைக்குடியில், உமாமகேசுவரனாருக்கும் உலகநாயகி அம்மையாருக்கும் ஊரார் போற்றும் திருமணம் உயரிய முறையில் சிறப்புடன் நிகழ்ந்தது அப்போது உமாமகேசுவரனாருக்கு ஏறத்தாழ இருபத்தைந்து வயது இருக்கலாம்

உமாமகேசுவரனாரின் உள்ளத்திற்கேற்ற மங்கையாக உலகநாயகி விளங்கினார்; தம் கணவரது குறிப்பறிந்து, குணத்திற்கேற்பப் பழகும் பண்பினர். துறந்தார்ப் பேணல், விருந்தயர்தல், வறியார்மாட்டு அருளுடைமை முதலிய அருங்குணங்களும், வாழ்வுக்கு வேண்டும் பொருள் அறிந்து கடைப்பிடித்தல், அட்டில் தொழில் வன்மை, ஒப்புரவு முதலிய செயல்களைச் செய்யும் ஆற்றலும் பெற்றவர் கற்பெனும் திண்மையைப் பொற்புடன் போற்றி ஒழுகுபவர், 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச்

சோர்விலாள் பெண்' எனும் பொய்யாமொழிக்கேற்ப மெய்ம்மையாய் ஒழுகும் மங்கை நல்லாளின் மலர்க்கரம் பற்றிய நாள்முதல் உமாமகேசுவரனாரின் வாழ்வு முன்னிலும் பன்மடங்கு வளரத் தலைப்பட்டது. 'இல்லவள் மாண்பானால் இல்லது என்?' என்பது பொன்னுரையன்றோ?

கருத்தொருமித்த இவ்விருவர்தம் இல்வாழ்க்கையின் பயனாய்த் தோன்றிய மக்கள் மூவர். முதலாமவர் பஞ்சாபகேசன் என்னும் பெயரினர்; அடுத்தவர் மாணிக்கவாசகம்; மூன்றாமவர் சிங்காரவேலு என்பவர்.

சிங்காரவேலு பிறந்து நான்கு திங்களே ஆயின; தம்வாழ்வின் இன்ப துன்பமனைத்திலும் பங்கு பெற்றுத் தம் பொதுநலப் பணிக்குத் – தமிழ்ப்பணிக்கு எவ்வித இடையூறும் நேராவண்ணம் பெருந்துணைபுரிந்த அருமைத் துணைவி உலகநாயகியை உமாமகேசுவரனார் இழக்க நேர்ந்தது கொடுமையினும் கொடுமை! இராச்சச ஆண்டு 16–ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று, காலன் என்னும் கண்ணிலி, உலகநாயகியின் உயிரைக் கவர்ந்து சென்றான்; ஊழின் வலியோ, பெரிது பெரிது!

உமாமகேசுவரனார், தம் அருமைத் துணைவியாரை இழந்தபின், அவருக்குக் குடும்பக் கவலை இல்லாமற் செய்ததோடு, அவர்தம் நற்பணிகளுக்குத் துணைபுரிந்தோர் இருவர். ஒருவர், அவரின் சிற்றன்னை; மற்றவர், அவருடைய சிறிய தந்தையார் மகன் வீ.சு. சிதம்பரம்பிள்ளையின் துணைவியாரான கனகவல்லி அம்மையார். இவர், நற்குணம் வாய்ந்த திருவாட்டியார்; பொதுவாக, உமாமகேசுவரனார், குறிப்பிட்ட செயல்களைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்யும் இயல்பினர்; அவர்தம் இயல்புக்கு எவ்வித இடையூறும் நேராவண்ணம் பார்த்துக் கொண்ட பெருமை இப்பெருமாட்டிக்கே உண்டு.

உமாமகேசுவரனார், தனித்து உணவு கொள்ளவே மாட்டார். நண்பர்கள் அன்றிப் புலவர்கள் ஒரு சிலராவது உடனிருப்பர். அத்தகையோர்க்கும் சேர்த்து மனமுவந்து உணவளிப்பவர் கனகவல்லி அம்மையாராவர்!

**மகன் பஞ்சாபகேசன்**

பெற்றெடுத்த மக்கள் மூவரில் முதல்மகன் என்னும் பெயருக்கேற்பப் பஞ்சாபகேசன் (தோற்றம் : 22–7–1909) விளங்கி

வந்தான். தன் நுண்ணறிவால் யாவர்க்கும், பொதுவாகவும், கல்வி கற்பித்த கணக்காயர்க்குச் சிறப்பாகவும், மிகு வியப்பினையும் மகிழ்ச்சியினையும் தந்துவந்தான். பள்ளியில் தனக்கு இணையில்லை எனுமளவில் முதன்மை பெற்று விளங்கி வந்தான். தமிழ்க் கல்வியில் மேவிய ஆர்வத்திற்கும் தெளிவிற்கும் அளவிலது என மிளிர்ந்தான். ஒரு நாட் பழகியோரும் தனது அன்பு, அடக்கம், ஒழுக்கம் முதலிய உயர்குணங்களை நன்கு அறிந்து பெருமகிழ்வுற நின்றவன். தன் கடமை எத்துணையவாயினும் எச்சம் சிறிதும் வையாது உடனுக்குடன் முடித்துக் காட்டும் பேராண்மையாளன் தம் தந்தையார் வளர்த்து வரும் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பயிருக்கு நாளும் நற்றொண்டாகிய நன்னீர் விட்டுக் காத்துவரும் கடமையாளன். "தமிழவேளுக்குப் பின் சங்கத்தைப் புரந்து வருபவரில் இவனை விஞ்சுவார் எவரும் இருத்தல் இயலாது!" எனப் பலரும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த காலத்து, அப்பெருமையனைத்தும் ஒருங்கே இடிந்து சுக்குநூறாகுமாறு, தன் பதினாறாம் வயதிலேயே (அச்சய புரட்டாசி 15 வெள்ளி) பள்ளியிறுதி வகுப்பில் பயிலுங் காலத்திலேயே இறைவன் இணையடியினை எய்தி விட்டான்! இளமையிலேயே பெற்றோரை இழந்து, பின்னர்த் தம் ஆருயிர்த் துணைவியையும் இழந்து மருகி நின்ற உமாமகேசுவரனார் உள்ளத்துப் பின்னும் பேரிடி விழுந்து விட்டது. அந்தோ, அருமந்த மகன் பஞ்சாபகேசன் பரமனடி சேர்ந்தான்! அவனையிழந்து, அருமைத் தந்தையார் மட்டுமா உருகி நின்றார்? அன்று, அன்று! அவனோடு உரையாடியவர், நெருக்கமாய்ப் பழகியவர், அவனின் பண்புகளை உடனிருந்து அறிந்தவர், அவனால் கரந்தைத் தமிழ்ச்சங்கம் ஒப்புயர்வற்ற பெருங்கோட்டையாய்த் திகழப் போகிறது என மனக்கோட்டை கட்டியவர் அனைவருமே அவன் பிரிவினால் வருந்தினர்; அரற்றினர்; அழுதனர்; புலம்பினர்; உருகி நின்றனர்.

பஞ்சாபகேசன் மறைந்து போனாலும் அவனை என்றும் நினைவு கூர்தற் பொருட்டுக் கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரியில் 'பஞ்சாபகேசன் அவை' (மன்றம்) என்பதொன்று 20-10-1926-இல் தோற்றுவிக்கப்பெற்றது. உமாமகேசுவரனாரும், தம் மகன் பெயரால் நினைவுநிதி ஒன்று ஏற்படுத்தி, ஆண்டுதோறும் ஏழை மாணவர்கட்கு உண்டி உடை முதலியனவும் கொடுத்து வரலானார்.

உமாமகேசுவரரின் அடுத்த இருமக்களுள், மாணிக்கவாசகம் என்பார், பிணிகள் பல அணியணியாகவந்துற அவற்றால் எவ்வித வேலையும் செய்ய முடியாத நிலையில் வீட்டிற்கிடந்து உழன்று, பின்

இறந்துபோனார். சிங்காரவேலு, ஆங்கிலக் கல்வி கற்று, மருத்துவராகச் சென்னையில் பணிபுரிந்தவராவர்.

இவ்வாறு வாழ்வில் அல்லல் பல உற்ற உமாமகேசுவரனார், மனைவியார் இயற்கை எய்தியபின், தன் முகத்தைக் கண்ணாடியிற் கூடப் பார்ப்பதில்லை! நண்பர் பலர் நெருங்கி, மறுமணம் செய்து கொள்ள எத்துணையோ முயன்றும் பலனில்லை. ''ஒருத்திக்கு ஒருவனாயின், ஒருவனுக்கும் ஒருத்தியே'' என்றுகூறி, நண்பரைக் கடிந்து இகழ்ந்துவிட்டார். வெறும் பேச்சளவில் நில்லாமல் வாழ்வின் இறுதி வரையிலும் உண்மை ஒழுக்க சீலராய்த், தண்டமிழ்க் குடியில் தோன்றிய தகைசால் தோன்றலென விளங்கினார் உமாகேசுவரனார் எனின் இவர்தம் பெருமையை என்னென்பது?

# 2

## வழக்குத்தொழில் வித்தகர்

''**க**ள்வனைக் கோறல் கடுங்கோலன்று!'' என்று கூறிய பாண்டியப் பேரரசனுக்குத், ''தேரா மன்னா! செப்புவதுடையேன்'' என்று தொடங்கி, ''என்கால் பொற்சிலம்பு மணியுடை அரியே'' என்று முடித்து, அரியணையில் அமர்ந்திருந்த அவன் கீழே வீழ்ந்து உயிர் துறக்கச் செய்த பெருமாட்டி கண்ணகி. **சோழநாட்டு மங்கை நல்லாள்,** தான் ஒருத்தியாகவே நின்று வழக்காடி வெற்றி பெற்ற வரலாறு நாடறியும்.

அதே சோழநாட்டில் தோன்றிய தமிழவேள் உமாமகேசுவரனார், வழக்காடும் தொழிலை மேற்கொண்டதில் வியப்பேதுமில்லை.

### பேச்சாற்றல்

உமாமகேசுவரனார், பள்ளியிலும் கல்லூரியிலும் படித்த காலத்திலேயே பேச்சாற்றல் கைவரப் பெற்றுப் பரிசுகள் பல பெற்றவர். பின்பு, வழக்குத் தொழிலில் ஈடுபட்ட போது, நீதிமன்றங்களில் ஆங்கில மொழியில் அழகாகப் பேசும் நல்வாய்ப்பினையும் பெற்றார். இவரது பேச்சாற்றலுக்கு இவர் பார்த்த வழக்குத் தொழில் பெரிதும் துணைபுரிந்தது என்று கூறுவது மிகையாகாது.

முன்னர்க் கூறியவாறு, தஞ்சைச் சீனிவாச பிள்ளையிடம் வழக்குத் தொழில் பயிற்சி பெற்றபின், வழக்குரைக்கும் வன்மையறிந்து, பின்னர்த் தாமாக அத்தொழிலைச் செய்யத் தொடங்கினார்.

். மாமகேசுவரனார், கரந்தையிலிருந்து கொண்டே, வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்ளலானார். உமாவின் குடும்பத்தில் குதிரைவண்டி ஒன்று உண்டு. அவர், நீதிமன்றத்திற்குச் செல்வதற்காக அந்த வண்டி, வாயிலில் வந்து நிற்கும் என்றாவது ஒருநாள் வண்டி வரவில்லையென்றால், அதற்காக அவர் காத்திருக்க மாட்டார்; விரைவாக நடந்து வண்டிப்பேட்டைக்குச் சென்றுவிடுவார் **வண்டியைக் காலங்கடந்து** கொண்டு வருவோர்க்கு மறைமுகமான **தண்டனை அது!**

நாளும் காலை நான்கு மணிக்கே துயிலெழுந்து விடுவார். வழக்குகள் பற்றிய குறிப்புகள், மற்றும் பிற அலுவல் குறிப்புகள் அனைத்தையுமே, விடிவதற்குமுன் கவனித்து விடுவார். உடனே எழுந்து, கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் உள்ள 'திக்கற்ற மாணவர் இல்லத்'திற்குச் சென்று பார்வையிடுதல்; சங்கத்தின் தோட்டத்தைக் கவனித்தல்; பின்னர் வீடு திரும்பியபின் நீராடுதல்; பூசை செய்தல்; சிற்றுண்டி அருந்திவிட்டுத் தமது அலுவல் அறைக்கு வந்து, வழக்குகள் தந்தவர்களிடமும் மற்றவர்களிடமும் கலந்துரையாடுதல் ஆகியன மேற்கொள்வார். தமக்குவந்த மடல்களுக்கு உடனுக்குடன் மறுமொழி எழுதிவிடுவார். பின்பு நீதிமன்றம் சென்று வழக்காடியபின் இல்லம் திரும்புவார் மாலையில் கரந்தைத் தமிழ்ச்சங்கப் பணிகள்! பெரும்பாலும் இரவு ஒன்பது மணிக்குப் படுக்கைக்குச் சென்று விடுவார். உமாவின் அன்றாட அலுவல்கள் இவை! அலுவலில் ஈடுபட்டிருக்கும் போது யார் என்ன இரைச்சலிட்டாலும் அது பற்றிக் கருதாது, கருமமே கண்ணாயிருப்பார் அன்றியும் அலுவலகச் செயல்களைக் கவனிக்கும்போது மிகக் கண்டிப்பாகவும் நடந்து கொள்வார்.

உமாமகேசுவரனார், வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்ட போது, அத்தொழிலை நடத்திவந்த தமிழர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவென்றே சொல்ல வேண்டும். ஐ குமாரசாமிப் பிள்ளை, ஆ.தா. பன்னீர்செல்வம், மருதமுத்து மூப்பனார், அழகிரிசாமி நாயுடு, எம். வேங்கடாசலம்பிள்ளை போன்ற ஒருசிலர்தாம் வழக்குத் தொழிலில் ஈடுபட்டவர்கள் எனலாம்.

'பெயர்ப்பலகை' (Name Board) கூடத் தொங்கவிடாமல், ஏறத்தாழ முப்பத்திரண்டு ஆண்டுகட்கு மேலாக வழக்கறிஞராய் விளங்கிக் கட்சிக்காரர்கள், நடுவர்கள், பொதுமக்கள் எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றாரென்றால், இவரிடத்து அரிய பண்புகள் இருந்திருத்தல் வேண்டும் அன்றோ?

பெற்ற பணத்தைவிடப் பேரும்புகழும் அடைய வேண்டும் என்ற ஆர்வம், அதனால் ஏற்படும் இடையறா உழைப்பு, உழைப்பிலும் உண்மையே காணவேண்டும் என்ற அவா, அவ்வுண்மையை அச்சம் சிறிதும் இல்லாமல் உரைக்கும் ஆண்மை – இவை வழக்கறிஞர் உமாமகேசுவரனாரிடம் அமைந்த பண்புகள்.

வழக்குகளை ஆயத்தம் செய்வதில் மிகவும் கைதேர்ந்தவர் இவர். பெரும்பாலும் உரிமையியல் வழக்குகளையே (Civil Case)

மேற்கொள்வார். குற்ற வழக்குகளை விட (Criminal Case) உரிமையியல் வழக்கிற்கு (Civil Case) ஆழ்ந்த பட்டறிவும், நிறைந்த உலகியலறிவும், கடின உழைப்பும் தேவை என்பர் அத்துறை வல்லார். தஞ்சை மாவட்டத்திலேயே இத்தகு வழக்குகளை நடத்தி வெற்றி காண்பதில் உமாமகேசுவரனாரை விஞ்சியவர் எவருமிலர் என்று இன்றுங்கூடச் சொல்லப்பெறுதலைக் காதுகுளிரக் கேட்கலாம்!

தம்பால் வரும் வழக்கிற்கெனச் சான்று கூறுவார் பலரை ஆயத்தமாக்குவார்; நிறையப் புள்ளி விவரங்களைத் தொகுப்பார்; அங்ஙனம் தொகுப்பதற்குத் தம் கட்சிக்காரர்கள் சரியாக ஒத்துழைக்காவிடில் அவர்கள்பாற் கடுஞ்சினங் காட்டுவார். தம் உள்ளத்தில் உண்மையென்றுபட்ட வழக்குகளையே பெரும்பாலும் எடுத்துக்கொள்வார் எனவே இவரிடம் பொய்வழக்கிற்கென வழக்குரைக்க வருமாறு அழைப்போர் பெரிதும் அஞ்சுவர். வழக்கினைக் கொண்டு வருபவர்கள், முதலில் உள்ளதை உள்ளவாறே இவரிடம் உரைத்துவிட வேண்டும். ஒளிவு மறைவுள்ளவர்களை விரட்டி விடுவார். சிலபோது தம் கட்சிக்காரரிடம் ''இஃது உண்மைக்குப் புறம்பாய் எனக்குத் தோன்றுகிறது; வெற்றி கிடைப்பது அருமை'' என்று சொல்லிப்பார்ப்பார். ''நாங்கள் கூறுவதே உண்மையென நம்புகிறோம். எங்களுக்காக வழக்காடிப் பாருங்கள். தோல்வி கிடைத்தாலும் கவலை கொள்ளோம்'' என்று கட்சிக்காரர் உரைப்பாராயின், அவர்கட்காக வழக்காடுதலும் உண்டு. ஒருவர்க்கு உண்மை என்று தோன்றக்கூடிய ஒன்று, மற்றவர்க்குப் பொய் என்று தோன்றுவது உலக இயல்பல்லவா? எனவே பொய் என்று பிறர்சொல்வதை நம்பி விட்டுவிடாமல் அதனை ஆராய்ந்து உண்மைகாண்பதே வழக்கறிஞர்க்குள்ள இயல்புகளில் ஒன்றாகும் எனச் சட்டத்துறை வல்லுநர் கூறுவர். அம்முறையில் சிலபோழ்து சில வழக்குகளை இவர்மேற்கொண்டு நடத்தியதும் உண்டு!

மிகுதியான சாட்சிகளை ஆயத்தம் செய்தபின், வழக்கினை நடாத்துதற்குரிய குறிப்புகள் அனைத்தையும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொகுத்து எழுதிவைத்துக்கொள்வார் உமாமகேசுவரனார். எத்தகைய வழக்கறிஞர் பார்த்தாலும், அவ்வழக்கினைத் தாமே ஏற்று நடத்துதற்குரிய முறையில் இவருடைய குறிப்புகள் அமைந்திருக்கும் 'காலங் கடந்தாலும் கவலைப்படாமல் குறிப்புகள் தொகுத்து வைத்து வழக்கினை நடத்துவதில் வல்லவர் இவர்' எனப் பல வழக்கறிஞர்கள் இவரைப் பற்றிக் கூறுவதுண்டு.

நடுவுமன்றத்தில் பலரும் போற்றும்வகையில் அழகிய ஆங்கிலத்திலேயே வழக்காடுவார் இவர். குறுக்குக் கேள்விகள் கேட்பதில் பெயர் பெற்றவர்; இவர் வழக்காடும் முறையினைக் கேட்டு அதனை முன்னெடுத்துக்காட்டாகக் கொள்வதற்கென்றே வழக்கறிஞர் பலர் நடுவுமன்றத்திற்கு வருவார்கள் என்றால் இவர்தம் நாவன்மையை எங்ஙனம் எடுத்துரைப்பது? எவர்க்கும் அஞ்சாத அரிய நடுவர்கூட இவரிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தனர்.

எந்தக்கட்சிக்காரரிடமும் வழக்காடுதற்குரிய தொகை இன்னது எனத் தம் வாயால் ஒரு போதும் கேட்கமாட்டார்; கையேந்திப் பணமும் பெற்றுக் கொள்ள மாட்டார். இவரிடம் எழுத்தராகப் பணிபுரிந்த பி சுந்தரம் ஐயர் என்ற பாப்பையர் என்பவரே, கட்சிக்காரரிடம் தொகை பேசுவதும், பெறுவதும் செய்வார். கட்சிக்காரரைப் பெருந்தன்மையாக நடத்தும் இயல்பு உமாமகேசுவரனாரிடம் இயற்கையாய் அமைந்ததொன்று. பணம் கொடுக்க முடியாத ஏழ்மை நிலையிலுள்ளோர்க்கு எவ்விதத் தொகையும் பெறாமல் வழக்காடி வெற்றி தேடித் தருவார்.

இத்தகு தன்மைகளால், அரசாங்கத்துக்கும் நம்பிக்கையான—வராகத் திகழ்ந்தார் உமாமகேசுவரனார் என்பதில் வியப்பேதுமில்லை. அதனாலேயே 'அரசு கூடுதல் வழக்குரைஞர்' (Additional Public Prosecutor) பணியை இவருக்கு அளித்தனர் போலும்.

இவர் கடைப்பிடித்த கொள்கைகளால், அக்காலத்திலேயே இவருக்குத் திங்கள் ஒன்றுக்கு ஓராயிர ரூபாய்க்குங் குறையாமல் வருமானம் கிடைத்து வந்தது. தஞ்சை மாவட்டத்திலேயே உரிமையியல் வழக்கில் நிறையவருமானம் பெற்றவர் இவரே!

வழக்குத் துறையில் இவருக்கு முதன் முதலாகப் பெயர் வருவதற்குக் காரணமாயிருந்தது. 'கும்பகோணம் குப்புசாமி ஐயர் வழக்கே'யாகும் என்பர் சிலர். ஒருவரும் எடுக்கமுடியாது எனத் தள்ளிய இவ்வழக்கை இவர் எடுத்துக்கொண்டு தக்க முறையில் வழக்காடி வெற்றி தேடித்தந்தார். அன்று முதல் உயர் வழக்கறிஞர் குழுவில் இவர் பெயர் முதலிடம் பெறுவதாயிற்று.

உமாமகேசுவரனார் மேற்கொண்டு நடத்திய வழக்குகள் எண்ணிறந்தன; அவற்றுள் சுவையானவையும் சில உள. கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையின் தம்பிபொருட்டு

வழக்காடியதும், வரகனூர்க் கருவறைக்குள் நுழைவதற்கென வழக்காடியதும், நீதிக் கட்சிக்காக வழக்காடியதும், சட்டத் துறையில் வல்லார்கட்குப் பெருவிருந்தாயிருந்தன. இவர்பால் பயிற்சி பெற்ற வழக்குரைஞர் பலராவர்.

தமிழ்நாட்டில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களில் பெரும்பாலோர் வழக்குரைஞர்களே என்பதும் குறிப்பிடத்தக்கது. தஞ்சை கே. சீனிவாசபிள்ளை, நாவலர் சோமசுந்தரபாரதியார், வ.உ. சிதம்பரம்பிள்ளை, சாத்தூர் கந்தசாமி முதலியார், டி.கே.சி., ரா.பி. சேதுப்பிள்ளை, டி.சி சீனிவாச ஐயங்கார், நீதிபதி மகராசபிள்ளை இன்னும் பல பேருண்டு. இவ்வரிசையில் தமிழவேளும் ஒருவராக இருந்து வழக்குத் தொழில் வித்தகராக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 3

## ஆட்சித்திறன் மிக்க மாட்சியர்

**ச**ங்ககாலத்தே சோழர்களின் தலைநகராக விளங்கியது 'உறையூர்'. அது தஞ்சையையடுத்து அமைந்துள்ளது. சோழப் பேரரசர்களுள், 'சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்' என்பவனும் ஒருவன்! அவனைப் பாடவந்த மாறோக்கத்து நப்பசலையார் என்னும் புலவர்,

*"........ கெடுவின்று,*
*மறம்கெழு சோழர் உறந்தை அவையத்து*
*அறம்நின்று நிலையிற்று"* (புறம் : 39 : 7-9)

என்று போற்றுவர். "கேடின்றி வீரம் செறிந்த சோழரின் உறையூர் அவையினிடத்தே அறம் என்றும் நிலைபெற்று நிற்கும்" என்று கூறுவாரானால், அச்சோழனின் ஆட்சித்திறத்தின் மாட்சியை உணரலாம்

இத்தகு சோழநாட்டுத் தஞ்சையில் தோன்றிய தமிழவேள் உமாமகேசுவரனாரும், பல்வேறு பொறுப்புக்களை வகித்தபோதும், சிறிதும் குறையேதுமின்றி 'ஆட்சித் திறன் மிக்க மாட்சியரா'க விளங்கினார் எனலாம்

### தொண்டுக்கு உதவிய தொடக்கநிலைகள்

ஒருவர், ஆழ்ந்த தமிழ்ப்பற்று உடையவராக இருக்கலாம், நாவன்மை மிக்கவராக இருக்கலாம்; சமூகத்தொண்டராக இருக்கலாம்; பலர் போற்றும் வழக்கறிஞராக இருக்கலாம். ஆனால், 'ஆட்சித்திறன் மிக்க மாட்சியரா'க அவர் இருக்க முடியுமா என்பது சிந்தனைக்குரியது. ஆனால், தமிழவேள் உமாமகேசுவரனார், இவ் எல்லாத் தகுதிகளும் ஒருங்கே பெற்ற உரவோர் என்பது துணிந்து உரைக்கலாம்

இவர்தம் தொண்டுக்கு இயல்பாகவே சில வாய்ப்புகள் ஏற்பட்டன. அக்காலத்தில், எல்லா நிலைகளிலும் பிராமணர்களின் செல்வாக்கே மிகுந்திருந்தது. அரசாங்க அலுவல்களிலும் அவர்களின்

எண்ணிக்கையே மிகுந்திருந்தது. இந்நிலையை மாற்றுவதற்கென்றே தமிழகத்தில் 'நீதிக்கட்சி' (Justice Party) என்பதொன்று உருவாயிற்று. அதன் ஆரம்பகாலப் பெயர் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' (South Indian Liberal Federation) என்பதாகும். இது தோன்றியது 1917ஆம் ஆண்டாகும். சர். தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர் என்ற இரு பெரியார்களே இதனைத் தோற்றுவித்தவர்கள்.

'நீதிக்கட்சியின் தூண்கள்' என்று சிறப்பாகப் பேசப்படுபவர்களில் பலர், தஞ்சை மாவட்டத்தினர்களே! அவர்களில் குறிப்பிடத்தக்கோர் மூவர். ஒருவர், தமிழவேள் உமாமகேசுவரனார்; மற்றொருவர், ஆ.தா. பன்னீர் செல்வம்; அடுத்தவர், ஐ. குமாரசாமிப் பிள்ளை. இவர்களை 'முப்பெருந்தலைவர்கள்' என்று கூறுவதுண்டு.

1920ஆம் ஆண்டில், 'சென்னை உள்ளாட்சிக் கழகச் சட்டம்' (Madras Local Board Act) நடைமுறைக்கு வந்தது. இதனால் தஞ்சை மாவட்டக் கழகம், (District Board), வட்டக்கழகம் (Taluk Board) ஆகியவற்றில் நீதிக்கட்சியைச் சார்ந்தவர்களில் பெரும்பாலோர் ஆட்சியிலமர்ந்தனர். தொடக்கத்தில் 'தஞ்சை மாவட்டக் கழகத்' தலைமைப் பொறுப்பு, வி.கே. இராமாநுச ஆச்சாரியார் என்பவரிடம் இருந்தது. எனினும், அப்பெரியவர், தன்னுடைய அனைத்து அதிகாரங்களையும் துணைத்தலைவராக இருந்த சர் ஆ.தா. பன்னீர் செல்வத்திடம் ஒப்படைத்துவிட்டார். ஆச்சாரியாருக்குப் பின் பன்னீர்செல்வமே மாவட்டக் கழகத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்

தஞ்சை வட்டக்கழகத்தின் முதல் 'அலுவல்சார்பற்ற தலைவரா'க (Non-Official President) இருந்த பெருமை தமிழவேள் உமாமகேசுவரனாருக்கு உண்டு. மேலும் இவரே, பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து, தலைவராக இருந்த சிறப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அப்போதிருந்த சட்டப்படி, வட்டக் கழகத் தலைவர்கள், மாவட்டக் கழகத்தில் உறுப்பினர்களாகவும் இருப்பர் இவ்வகையில் உமாமகேசுவரனார், வட்டக் கழகத் தலைவர் பணியோடு, மாவட்டக் கழக உறுப்பினர் பணியையும் ஒருங்கே செய்யும் ஒப்பற்ற வாய்ப்பினைப் பெற்றவர் எனலாம்.

## தொண்டில் தலைநின்றவர்!

தமிழவேள் உமாமகேசுவரனார், மேற்கூறிய பதவிகளில் இருந்தபோது, செய்த தொண்டுகள் எண்ணிறந்தன அவற்றுள் குறிப்பிடத்தக்கவை:

தமிழவேளின் ஆட்சிக்காலத்தில், தஞ்சை வட்டத்தில், இவரது கால்படாத சிற்றூர்களே இல்லை எனலாம். எந்த ஒரு சிற்றூரும் 'சாலை' இல்லாமல் இருக்கக் கூடாது என்பது இவரது கொள்கை. இவரது பன்னிரண்டு ஆண்டு ஆட்சிக் காலத்தில், ஒன்றிரண்டு ஊர் தவிரப் பெரும்பாலும் எல்லாச் சிற்றூர்களுக்கும் சாலைகள் போடப்பட்டன எனலாம். விடுபட்ட ஒன்றிரண்டு சிற்றூர்களுக்கும் 'சாலை' போடுவதற்கு வேண்டிய நிலங்களை வாங்குவதற்கான ஏற்பாடும் செய்திருந்தார்!

'வட்டக்கழகங்கள்' 1934ஆம் ஆண்டு கலைக்கப்பட்டு, மாவட்டக்கழகங்களுடன் இணைக்கப்பட்டன; அப்போது, விடுபட்ட பாதைகளும் நிரப்பப்பட்டுவிட்டன.

இவர்தம் ஆட்சிக்காலத்தில் போடப்பட்ட சாலைகளில் குறிப்பிடத்தக்கவை: வரகூர்–அம்பது மேலகரச்சாலை. குறிப்பிட்ட சில இனத்தாரின் எதிர்ப்பையும் மீறிப் போடப்பட்டது இது! ஆலங்குடி – கண்டியூர்ச் சாலை. இது, மிகப்பெரிய சாலை என்பதோடு, பல சிற்றூர்களையும் ஒருங்கிணைப்பது.

திருவையாறு 'ஏழூர்த் திருவிழா' மிகப் புகழ்பெற்றது. இவ்விழாத் தொடர்புடைய மேலத்திருப்பூந் துருத்தி, திருநெய்த்தானம் ஆகிய ஊர்களையும்; திருப்பழனம்–திருச்சோற்றுத்துறை ஆகிய ஊர்களையும் இணைக்கும் சாலைகள் மிக இன்றியமையாதவை. உயர்ந்த நன்செய், புன்செய் நிலங்களைப் பெருவிலை கொடுத்துவாங்கிப் போடப்பட்ட சாலைகள்! இவ் இரண்டு சாலைகளும், காவிரி, குடமுருட்டி எனும் இரு ஆறுகளுக்கும் இடையிலமைந்தவை. வெள்ளம் வந்தால், இவ் ஆறுகளைக் கடக்க, ஒவ்வொரு சாலையின் இருபுறமும் பரிசில்துறைகளையும் தமிழவேள் அமைத்துத் தந்தார். மேலும், திருப்பழனம்–திருச்சோற்றுத்துறைச் சாலையின் இருபுறமும் நிழலுக்காகத் தென்னை மரங்களைப் பயிரிடச் செய்தார். இவற்றால், ஏழூர்த் திருவிழாவில் வலம் வரும் சைவ அன்பர்கள், நன்செய் புன்செய் நிலங்களைக் கடந்து வந்த அவலநிலை நீங்கிற்று! இவைமட்டுமா? சாலைகளைக் குறுக்கிட்டுச் செல்லும் வாய்க்கால்களைக் கடக்கப் பாலங்களும் அமைத்தார் தமிழவேள். தஞ்சைவட்டத்தில், இரண்டு தீவுச் சிற்றூர்கள் உண்டு. ஒன்று, 'நாகத்தி'; மற்றொன்று, 'தொண்டரையன் பாடி'. இவை, ஆறுகளுக்கு நடுவில் அமைந்தவை. இவ்வூர்களில் வாழ்வோர், குழந்தை முதல் பெரியவர் வரை அனைவருமே, கோடைக்

காலங்களில் நீந்தித்தான் வரவேண்டும். இத்தொல்லை போக்கத் துணிந்து செயலாற்றினார் தமிழவேள். இவ்விரண்டு ஊர்களுக்கு– மெனத் தனித்தனிப் பாலங்கள் கட்ட ஏற்பாடு செய்தார். இவர்தம் ஆட்சிக் காலத்திலேயே 'நாகத்தி'க்குப் பாலம் கட்டி முடிக்கப்பட்டது. 'தொண்டரையன் பாடி'க்கு, இவரது காலத்தில் தொடங்கப்பட்ட 'பாலம்', மாவட்டக் கழகத்தால் பின்னர்க் கட்டிமுடிக்கப்பட்டது.

## கல்வி வசதி

'தமிழவேள்', தஞ்சை வட்டக் கழகத் தலைமைப் பொறுப்பு ஏற்றபோது, தஞ்சை வட்டத்தில் ஏறத்தாழ நாற்பது அல்லது ஐம்பது தொடக்கப்பள்ளிகளே இருந்தன. நீதிக்கட்சி ஆட்சிக்கு வருமுன், தொடக்கக் கல்வி 'ஏனோதானோ' என்று கவனிப்பாரின்றி இருந்தது. படித்த வகுப்பார், மென்மேலும் படித்து முன்னேறப், படிக்காத வகுப்பினரோ, படிக்கும் பள்ளி வசதிகளின்றிப் படிக்காமலேயே காலங்கழித்தனர். அப்போது, எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள், ஏறத்தாழ ஐந்து அல்லது ஆறு விழுக்காட்டினரேயாவர்! இந்த அவல நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது நீதிக்கட்சி. தொடக்கப்பள்ளிக்கு ஊக்கமளிக்க விரும்பிய அக்கட்சி 'சென்னைத் தொடக்கப்பள்ளிச் சட்டம்' (The Madras Elementary Education Act-1920) என்ற தனிச்சட்டமே இயற்றியது; அதன்படி, தொடக்கக் கல்விக்காகத் தனிவரி, தனிநிதிவசதி ஆகியவற்றுக்கு வழி பிறந்தது கட்டாயக் கல்விக்கும் அச்சட்டம் வகை செய்தது.

'சட்டம்' வந்தாலும், அதைப் பெரும்பாலோர் நடைமுறைப் படுத்துவதில்லை. ஆனால், தமிழவேளோ, அச்சட்டத்தை நன்கு பயன்படுத்த, அதனால் நாற்பது அல்லது ஐம்பது தொடக்கப்பள்ளிகள் இருந்த தஞ்சை வட்டத்தில், ஏறத்தாழ ஒரு நூற்று எழுபது பள்ளிகள் உருவாயின இது, தமிழவேளின் அருஞ்செயலாகும்!

பேரூர்களில் இருந்த சிறிய பள்ளிக்கூடங்கள், எட்டாம் வகுப்பு வரையிலான உயர் தொடக்கப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டன தஞ்சைவட்டத்தில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரையுள்ள பள்ளிகளுக் கெல்லாம் 'பொதுத்தேர்வு' (Public Examination) முறை கொண்டு வரப்பட்டது

கட்டிடம் இல்லாப் பள்ளிகளுக்குக் கட்டிடங்களும் கட்டப்பட்டன; சில ஊர்களில், கட்டிடங்கள் விலைகொடுத்தும் வாங்கப்பட்டன.

தஞ்சை வட்டக்கழக ஆட்சியில், திருவையாற்றில், 'இராமச்சந்திர மேத்தா சத்திரம்' என்பது ஒன்று உண்டு. அதற்கென நிலங்களும் இருந்தன. வடநாட்டிலிருந்து வரும் பைராகிகளுக்கு உணவு வழங்கவேண்டும் என்பது விதி. ஆனால், அது சரியாக நடைபெறவில்லை. ஆனால், தொடர்பில்லாத பலர், ஆங்கு உணவுண்டு வந்தனர். இதனையறிந்த தமிழவேள், அச்சத்திரத்தில் கட்டுப்பாடுகளை விதித்து, அதன் மூலம் பெருந்தொகை வருவாயாக ஈட்டித்தந்தார். இந்தச் சேமிப்பினால் வளமான நிலங்கள் வாங்கப்பட்டன. வருவாய் மேலும் மிகுந்தது. பள்ளிகளையும் பயிலும் மாணவர்களையும் மட்டுமே தமிழவேள் கருத்திற் கொண்டாரில்லை. பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களையும் கவனத்திற்கொண்டிருந்தார். நன்றாகக் கடமை உணர்வுடன் பணிபுரியும் ஆசிரியர்களைப் பாராட்டுவார்; பணி செய்யாது ஏமாற்றுவோரை அடையாளம் கண்டு, தயவு தாட்சணியமின்றித் தண்டனையும் அளிப்பார். கல்வித்துறைக்குத் தணிக்கையாளர்கள் எழுதும் தணிக்கைக் குறிப்புகளை நன்றாகக் கவனித்து, மேல் நடவடிக்கை எடுப்பதைத் தமிழவேள் தமது தலையாய கடமையாகக் கொண்டிருந்தார். அன்றியும், முன் அறிவிப்பு ஏதுமின்றித் திடீரெனப் பள்ளிக்குச் சென்று பார்வையிடுவார். தாம் மட்டுமன்று, தம்மால் அமர்த்தப்பட்ட 'தனித் தணிக்கையாளர்' ஒருவரைக் கொண்டும், திடீரெனப் பள்ளியைப் பார்வையிடச் செய்வார் எனின் தமிழவேளின் ஆட்சித் திறத்தை என்னென்பது?

இன்னோரன்னவற்றால், தஞ்சை வட்டக் கழக ஆட்சியில் உள்ள பள்ளிகள் சீரோடும் சிறப்போடும் புகழ்பெற்று விளங்கின. மாவட்டக் கழகத் தலைவராக இருந்த சர் ஆ.தா பன்னீர் செல்வத்தின் நெருங்கிய நண்பராக விளங்கியவர் தமிழவேள்; ஆதலின், மாவட்டக் கழகப் பொறுப்பில் இருந்த உயர்நிலைப் பள்ளிகளின் நடைமுறை பற்றி அவ்வப்போது தம் நண்பருக்கு ஆலோசனை கூறுவது வழக்கம்.

தஞ்சை அரசர் அறநிலையங்கள் வருவாயிலிருந்து இரண்டு உயர்நிலைப்பள்ளிகள் இயங்கி வந்தன. ஒன்று, ஒறுத்த நாட்டிலும் (ஒரத்த நாடு), மற்றொன்று இராசாமடத்திலும் இருந்தன இவ்விரு பள்ளிகளிலும் மாணவர்களுக்கு இலவச உணவும் உறையுளும் கொடுக்கப்பட்டு வந்தன ஆனால், பிராமண வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமே இந்த வசதிகளை அனுபவித்துக் கொண்டு வந்தனர் கடும் எதிர்ப்புகளுக்கிடையே, இந்த நிலையைத்

தமிழவேளின் துணைகொண்டு மாற்றி, ஏனைய தமிழ் இன மாணவர்களும் இத்தகைய சலுகைகள் பெறும்படிச் செய்தார் பன்னீர்செல்வம்!

தஞ்சையில் 'சுரேயசு சத்திரம்' என்பதொன்றுண்டு. சோம்பேறிகள் தங்குமிடமாக இருந்த அதை, ஆதி திராவிட மாணவர்கள் தங்குவதற்கும்; இலவச உணவு பெறுதற்குமாகவும் மாற்றி அமைத்தார் பன்னீர்செல்வம்; இவ்வாறு சாதிப்பதற்குத் துணைநின்றவர் தமிழவேளே!

''பல்லாயிர ஏழைத்தமிழ் இளைஞர்கள் படித்து முன்னுக்கு வர முடிந்தது இந்த உயர்நிலைப் பள்ளிகளால்!'' என்று பெருமையுடன் கூறுகிறார் தமிழவேளின் எதிர்வீட்டில் இருந்தவரும் தமிழவேளை நேரிடையாக நன்கு அறிந்தவருமான சிவ. சண்முகசுந்தரம்! இவர், இவ்விரு பெரியார்களையும் பற்றிக் கூறுவது இவண் குறிக்கத் தகும்:

''சில்லா போர்டின் ஆட்சியில் சர். ஏ.டி பன்னீர்செல்வம்; தஞ்சைத் தாலுக்காபோர்டு ஆட்சியில் 'தமிழவேள்' உமா மகேசுவரம்பிள்ளையவர்கள். இக்காலமே தமிழ் இளைஞர்களுக்குப் பொற்காலம்! அவர்கள் ஆட்சியின் கீழுள்ள எல்லாத் துறைகளிலும் ஏராளமான தமிழ் இளைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றார்கள் தமிழ்நாட்டிலே தமிழர்களுக்கு வேலை வாய்ப்புப் பெருமளவில் ஏற்பட்டது என்றால் அது, தஞ்சையில்தான் கால் கொண்டது என்று கூசாமல் கூறலாம். **தமிழர்களாக உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தமிழவேள் அவர்களையும் சர். ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களையும் என்றென்றும் மறவார்!''**

தமிழவேள், வட்டக் கழகம், மாவட்டக் கழகம், மாவட்டக் கல்விக் கழகம் ஆகியவற்றின் மூலம் தமிழர் கல்விபெறப் பேருதவி புரிந்ததோடு, தனிப்பட்ட முறையிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர் பலர் படிப்பதற்குப் பொருளுதவியும் செய்துள்ளார். மேலும், அன்றைய அரசாங்கத்தில், தமக்கிருந்த செல்வாக்கைக் கொண்டு அரசு உதவி பெற்று, மேற்படிப்புக்கு, மேலை நாடுகள் சென்றுவரவும் ஏற்பாடு செய்தவர் என்பது எண்ணிப் பார்த்தற்குரியது

**கூட்டுறவுத் தொண்டு!**

இவைதவிரக் கூட்டுறவு இயக்கத்திலும் தமிழவேளுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேளாளர், வணிகர்,

நடுத்தரமக்கள் முதலானோர்க்குக் கடன் கொடுத்து மிகுந்த வட்டி வாங்கும் லேவாதேவிக் காரர்களின் பிடியிலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களுடைய கடன்சுமையைக் குறைப்பதோடு, அவரவரும் தொழில் செய்து முன்னேறவேண்டும் என்பது நீதிக் கட்சியின் கொள்கைகளுள் ஒன்று. சில தொழில்களைக் கூட்டுறவுச் சங்கங்களே ஏற்று நடத்த வேண்டும் என்பது அக்கட்சியாரது திட்டம். எனவே நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில், பல கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றின; மக்களுக்கு உதவி புரிந்தன. தமிழவேள், கூட்டுறவு இயக்கத்தில் பெரும் பங்குகொண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றைத் தோற்றுவித்தார்.

தமிழவேளின் முயற்சியால், 1919 ஆம் ஆண்டு, கரந்தையில், 'திராவிட கூட்டுறவு வங்கி' ஒன்று தொடங்கப் பெற்றது. அவ்வாறே 'கூட்டுறவு நிலவள வங்கி' ஒன்று, இவரது அரிய முயறசியால், 10–9–1926–இல், உருவாயிற்று. இவ்வங்கி, இப்போது, தஞ்சை இராசப்பா நகரில் செயல்பட்டு வருகின்றது. அன்றியும், 'கூட்டுறவு அச்சகம்' ஒன்றையும் தொடங்கினாா தமிழவேள் அது 16–2–1927 முதல் செயல்பட்டு வருகின்றது. தொடக்கத்தில் இது கரந்தை இராமர் கோயிலருகே இருந்தது; இப்போது தஞ்சை மருத்துவக் கல்லூரிச் சாலையில் சிறப்புடன் இயங்கி வருகின்றது. இம்மட்டோ? 'தஞ்சை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தி விற்பனைக் கழகம்' என்பதொன்றும் 1939இல், தமிழவேளின் முயற்சியால் உருவானதேயாகும். இஃது இப்போது நாஞ்சிக்கோட்டை சாலையில் உள்ளது.

இன்னோரன்ன கூட்டுறவுப் பணிகளால், பல்வேறு பதவிகள் இவரை நாடி வந்தன. அவ்வாறு வந்தவை: திராவிடக் கூட்டுறவு வங்கித் தலைமை; கூட்டுறவு அச்சகத் தலைவர்; அர்பன் வங்கி உறுப்பினர்; நிக்கல்சன் நகர வங்கி உறுப்பினர்; சட்ட ஆலோசகர்; உயர்நிலைப் பள்ளிக் கல்விக்குழு உறுப்பினர் எனப் பலவாகும்.

இத்துணைப் பொறுப்புகளில் இருந்தாலும், மனச் சோர்வடையாமல், கருமமே கண்ணாகக் கொண்டு செயலாற்றிய தமிழவேளின் ஆட்சியின் மாட்சியை அனைவரும் புகழ்ந்ததில் வியப்பில்லை!

"பொதுப்பணிகள் புரிகின்றோம்" என்று சொல்லிப் பொருள் சேர்ப்பார் பலரையே காணும் இத்திருநாட்டில், "சமன்செய்து சீர்தூக்கும் கோல் போல்" நடுநின்று ஆய்ந்து, பொருட்பற்றுச்

சிறிதுமின்றி, இன்னும் ஒருபடி மேலே கூறப்புகுந்தால், தம் கைப்பணத்தையும் பொதுப்பணிக்குச் செலவிட்ட பெருந்தகை தமிழவேளாவர். இதுகுறித்தே,

*''தஞ்சைக் கூற்றத் தலைவன் எனத் தகைசால்*
*பெரியோய்! நீ அமர்ந்திங்கு*
*எஞ்சா அன்பிற் செய்த பணி எழுத்தால்*
*எழுதும் இயல்பினதோ?''* (க. வெள்ளைவாரணனார்)

என்று புலவருலகம் பாராட்டுவதாயிற்று!

# 4

## தமிழ்ச்சங்கத் தலைவர்

*''கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து*
*பண்ணுறத் தெரிந்து ஆய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை*
*மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்*
*எண்ணிடைப் படக்கிடந்ததாய் எண்ணவும் படுமோ?''*

(திருவிளையாடற்புராணம்)

என்பது பரஞ்சோதிமுனிவர் பாடிய பைந்தமிழ்ப் பாட்டு. ''முக்கட் பெருமானாகிய சிவபெருமானே தமிழ்ச்சங்கத்தே அமர்ந்து பசுந்தமிழை ஆராய்ந்தான்; இவ்வுலகத்திலே இலக்கண வரம்பிலா மொழிகள் பல உள. அவற்றோடு சேர்த்து எண்ணப்பட முடியாத பெருமை பெற்றது ஒண் தீந்தமிழ்'' என்பது கருத்து. ஆனால், ''இது *பொய்யாய்ப் பழங்கதையாய் ஆனதுவோ?*'' என்று ஐயுறுமாறு, தமிழகத்தில் தமிழின் நிலை தாழ்ந்தது!

தென்தமிழ்நாட்டில், தமிழைப் புரத்தற்கென்றே அமைந்த சங்கங்கள் மூன்று. அவை முறையே, 'முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம்' எனப் பெயர் பெற்றிருந்தன. முதற்சங்கம் எனப்படும் 'தலைச்சங்கம்' இருந்த இடம் – தென்மதுரை. 'இரண்டாம் சங்கம்' எனப்படும் இடைச்சங்கம் இருந்த இடம் – கபாடபுரம். 'மூன்றாம் சங்கம்' எனப்படும் 'கடைச்சங்கம்' இருந்த இடம் – இப்போதுள்ள மதுரை. இம்மூன்றையும் புரந்து, தமிழை வளர்த்த பெருமை பாண்டியர்களுக்கு உரியது. எண்ணற்ற புலவர்கள், எண்ணற்ற அரிய தமிழ்நூல்களை ஆக்கித் தந்தனர். ஆயினும் என்? முதலிரு சங்கங்களைக் கடல் கொள்ளை கொண்டு போக, அத்துணை நூல்களும் கடற்கோளால் அழிந்தன. இடைச்சங்க காலத்து நூலாகக் கருதப்படும் 'தொல்காப்பியம்' மட்டுமே நமக்குக் கிடைத்தது. இது, தமிழர் செய்த பெரும் பேறு!

ஏறத்தாழக் கி.பி 2ஆம் நூற்றாண்டிற்குப்பின், தமிழ் தன் நிலையினின்றும் தாழ்ந்தது என்றே சொல்ல வேண்டும். தமிழ்நாட்டின்

வரலாறு இன்னதென்றே தெரியாத அளவுக்கு ஓர் இருண்டகாலம். தமிழகத்தில், களப்பிரர் ஆட்சி, பல்லவராட்சி, நாயக்கராட்சி, மராட்டியர் ஆட்சி, முகமதியர் ஆட்சி, ஆங்கிலேயராட்சி என அடுத்தடுத்துத் தோன்றின. இதனால் எடுத்துவளர்க்கும் ஆள் இல்லாத அநாதைப் பிள்ளையாகத் தமிழ் ஆனது. இடைக்காலத்தில் பிறகாலச் சோழர்களது ஆட்சியில் தமிழ், அதனோடு தொடர்புடைய சைவம், வைணவம் தலைதூக்கின. பன்னிருதிருமுறைகள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், வகைவகையான சிற்றிலக்கியங்கள் தோன்றி, வறண்டுபோன தமிழன்னையின் நாவில் பாலூற்றிச் சிறிது உரம் இட்டன. எனினும், தமிழ்நாடு உள்ளிட்ட இந்தியநாடு முழுவதிலுமே 'வடமொழி' செங்கோலோச்சியது. கற்றறிந்த தமிழ் வாணர்களே, வடமொழிப் புலமை பெற்று, வடமொழியிலேயே அரிய நூல்களை ஆக்கி வைத்தனர் இதன் விளைவால், ''எல்லாமே வடமொழியி லிருந்து தமிழுக்கு வந்தவை'' என்று கூறுமளவுக்கு ஆயிற்று.

தமிழர்கள், தம் மொழிநலம் பேணும் மதுகை இன்மையால், தமிழிலிருந்தே கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளமும், துளுவும் எனச் சிலமொழிகள் கிளைத்தன. ''வட இமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட தமிழ் நிலைமாறி'', ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்'' என்றாகி, இப்போது, ''வடசென்னை தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்'' எனும் நிலை உண்டாகிவிட்டது!

ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்திலும் தமிழுக்கு ஆதரவு இல்லை. எனினும், கிறித்துவ மதத்தைப் பரப்ப வந்த பாதிரிமார்கள், தமிழைப் படிக்க வேண்டிய கட்டாய நிலைக்கு ஆளானார்கள்; தமிழைப் படித்தார்கள். தமிழின் இனிமையும் செம்மையும் இலக்கணமும் அவர்களில் ஒருசிலரை ஈர்த்து விட்டன அவர்களில் குறிப்பிடத் தக்கோர் கால்டுவெல் துரைமகனார், வீரமா முனிவர், டாக்டர் ஜி.யு போப் ஐயர் ஆகியோராவர். கால்டுவெல், 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற ஓர் அரிய நூலை எழுதித், ''தமிழிலிருந்து பிரிந்து போன மொழிகளே கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம்'' என்று, தக்க சான்றுகளால் நிறுவினார். 'தாமஸ் பெஸ்கி' என்னும் பெயர் தாங்கிய இத்தாலி நாட்டுப் பாதிரியார், தமிழ்நாட்டுக்கு வந்து தமிழைக் கற்றதால் 'வீரமாமுனிவர்' எனத் தம் பெயரை மாற்றிக் கொண்டார் தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் செய்த பெருமை இவருக்கு உண்டு. டாக்டர் ஜி.யூ போப் ஐயர், திருக்குறளையும், நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தா

என்பதோடு, சைவ சமய நூலாகிய திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த மாண்பினர். அளவிறந்த தமிழ்ப் பற்றால், இலண்டனில் வாழ்ந்து மறையும் காலத்தில், தமது கல்லறையில் 'தமிழ் மாணவன்' என்று பொறிக்கும்படி வேண்டிக் கொண்ட பெருந்தகை!

அயரா உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பித் தமிழின் சீர்மையை உணரச் செய்த பெருமை, இக் கிறித்துவப் பாதிரிமார்களுக்கு உண்டு எனலாம். இவ்விடத்தில், கரந்தை, சிவ. சண்முகசுந்தரம் கூறுவது குறிப்பிடத்தக்கது.

"இவர்தம் (கால்டுவெல்) ஆய்வுரை, தமிழர்க்கு விழிப்புணர்ச்சியைத் தந்து, தமிழின் தொன்மை அருமை பெருமைகளையெல்லாம் உணரச் செய்தது முக்கியமாக ஆங்கிலம் பயின்ற தமிழர்களுடைய கண்கள் திறந்தன. அவர்கள் கண்முன் தமிழர்களது உயர்ந்த நாகரிகம், பண்பாடு முதலியவற்றைச் சித்திரித்துக் காட்டும் உயர்ந்த நூல்களைத் தாங்கி ஆட்சி செலுத்திய மனிதன் தோன்றிய காலத்தில் தோன்றிப் பல்லாயிரமாண்டுகளாகத் திருந்தி, செம்மையோடு வளர்ந்து சிறப்புடன் நிற்கும் தமிழ்த்தாயின் புகழ் உருவம் நின்றது. மறுபக்கம் ஐந்து கூறாகச் சிதைந்து சிதறி ஒளியிழந்து கிடந்த தமிழ்த்தாயின் உருவமும் அவர்கட்குக் காட்சியளித்தது; துடித்துப் போயினர்! தமிழன்னையின் சிதைந்த நிலையைச் சீர்செய்து அரியணையேற்றப் பலர் பலவாறு முயன்றனர்!"

அவ்வாறு முயன்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இருவர் ஒருவர், 'வள்ளல்' பாண்டித்துரைத் தேவர்; மற்றவர், 'தமிழவேள்' உமாமகேசுவரனார்.

### மதுரைத் தமிழ்ச் சங்கம்

"பாவேந்தர் காற்றில் இலவம்பஞ்சாய்ப் பறக்கையிலே தேவேந்திர தாரு ஒத்தாய்" என்று புலவர்களால் பாராட்டப்பெற்ற சேதுபதிகளின் மரபைச் சேர்ந்தவர்; இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தூயதமிழ்த் தொண்டாற்றியவர்; இராமநாதபுரச் சீமையை மேற்பார்த்து ஆட்சிபுரிந்த பொன்னுச்சாமித் தேவரின் அருந்தவச் செல்வர் – அவரே பாண்டித்துரைத் தேவர்!

பாண்டித்துரைத்தேவர், 'பாலவனத்தம்' என்னும் பகுதியை ஆண்ட சமீன்தார். எனினும் அவர், முறையாகத் தமிழ் பயின்றவர். 'சதாவதானம்' முத்துச்சாமி ஐயங்காரிடம், கம்பராமாயணத்தையும்;

மதுரை இராமசாமிப் புலவரிடம் காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம் முதலானவற்றையும், திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த பழனிக்குமாரத் தம்பிரானிடம் சைவநூல்களையும் முறையாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றவர்; கவிதை புனையும் ஆற்றலும் கைவரப் பெற்றவர். எப்போதும் புலவர் புடைசூழ இருப்பது இவரது வழக்கம்.

ஒரு சமயம் தேவர், மதுரைக்குவந்து சின்னாட்கள் தங்கியிருந்தார். இவரின் சொற்பொழிவைக் கேட்க, மதுரை மக்கள் விரும்பினர். எனவே தேவரும் சொற்பொழிவாற்ற இசைந்து, அதற்காகக் கம்பராமாயணம், திருக்குறள் எனும் இரண்டு நூல்களிலிருந்தும் சில குறிப்புகள் பார்க்க விரும்பினார். மதுரையில் பலரிடம் கேட்டும் ஒருவரது வீட்டில்கூட இவ்விரு நூல்களும் இல்லை. முடிவில் புத்தகக் கடையிலிருந்து விலைக்கு வாங்கி வரப்பட்டன. சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்த இத்தண்டமிழ் மதுரையில் தமிழுக்குக் 'கதி' என்று போற்றப்படும் கம்பருக்கும் திருவள்ளுவருக்கும் பஞ்சம் ஏற்பட்டதே என மனம் கவன்றார் தேவர். இம்மாபெருங் குறை, தேவரது உள்ளத்தைப் பெரிதும் வருத்தியது. இக்குறை நீங்க ஏதாவது செய்தாக வேண்டும் என்று மனத்தில் உறுதிபூண்டார்!

1901ஆம் ஆண்டு மேத்திங்களில், 'சென்னை மாகாண அரசியல் மாநாடு' மதுரையில் கூடியது. அதன் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தவர் தேவர்! அம்மாநாட்டின் முடிவில், 'மதுரையில் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவவேண்டும்' எனும் கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். வந்திருந்தோர் அனைவரும் கையொலி எழுப்பி, அக்கருத்தை வரவேற்றனர். 'எண்ணிய எண்ணியாங்கு எய்தும்' திண்ணியரான தேவர், அம்மாநாடு முடிந்த மறுநாளே, சேதுபதி பள்ளியில், ஒரு கூட்டத்தைக் கூட்டினார். கற்றுவல்லோரும் ஏனையோரும் வந்திருந்தனர் தேவர், தமது தலைமையுரையில், தமிழின் சீர்மைதனையும் தற்கால அவல நிலையினையும் எடுத்துரைக்க, அனைவருமே தேவரின் தமிழ்ப்பணிக்கு ஆதரவு தருவதாக உறுதியளித்தனர்

1901ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 14ஆம் நாளன்று, தமிழ்ப் புலவர்களும், செல்வர்களும் ஒருங்கு கூடியிருக்க, நான்காம் தமிழ்ச்சங்கம் தோன்றியது. அவ்விழாவிற்கு இராமநாதபுரத்து அரசர் பாஸ்கர சேதுபதியும் வருகை புரிந்து சிறப்பித்தார்!

தமிழ் மக்களிடையே மொழியுணர்ச்சி பரவிப் பெருகுதற்கு இச்சங்கம் செய்த தொண்டுகள் பலப்பல தனித்தமிழ்த் தேர்வுகளை

ஏற்படுத்தியும், 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' என்னும் பெயரால் மாணவர்கட்கு உண்டியும், உறையுளும் தந்து தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தும் வந்ததன் பயனாகப் பல மாணவர்கள் தமிழ்மொழியில் நிறைந்த புலமை பெறுவாராயினர். இப்போது நமது தமிழ்நாட்டில் தமிழ்த் தொண்டாற்றி வரும் புலவர் பெருமக்களுள் பலர் இச்சங்கத்தினின்றும் வெளிப்போந்தவர்களே. 'பாண்டியன் புத்தகசாலை' என்ற பெரியதொரு நூல்நிலையத்தை அமைத்து, அரிய பல ஏட்டுச்சுவடிகளைத் தொகுத்து அவற்றுள் சிலவற்றை அச்சேற்றி வெளிக்கொணர்ந்த பெருமை இச்சங்கத்திற்கு உண்டு. 'செந்தமிழ்' என்னும் திங்கள் ஏட்டின் வாயிலாகப் பெரும் பெரும் பேராசிரியர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுப் புலவர் உலகம் மகிழுமாறு செய்து வருகின்றது.

முன்னர் இம்மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டுவிழாக்கள் தமிழ்நாட்டின் பல்வேறிடங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றுவந்தன. அதன் பயனாய் ஆங்காங்கே பல சங்கங்களும், கழகங்களும் தோன்றலாயின.

## தஞ்சைத் தமிழ்ச் சங்கம்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 9–ஆவது ஆண்டுவிழா, தஞ்சை மாநகரில் சிறப்புற நடந்தது. அதனைக் கண்ட தமிழன்பர் சிலர், தஞ்சையிலும் ஒரு தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவிக்க உளங் கொண்டனர். அதன் பயனாய்த் 'தஞ்சைத் தமிழ்ச் சங்கம்' என்பதொன்று தோன்றியது. இதன் சார்பில் 'தமிழகம்' என்ற இதழும் வெளிவந்தது. எனினும் இச்சங்கம் நெடிது நிற்கவில்லை. போற்றுவாரும், கொண்டு செலுத்துவாரும் இல்லாமையால், சில ஆண்டுகள் நின்று தன்னாலியன்ற தொண்டுகளைச் செய்து மறைந்து போயிற்று.

தஞ்சைத் தமிழ்ச் சங்கம் மறைந்தாலும், தமிழைப் பற்றிய எண்ணமும் ஆக்கமும் தமிழன்பர் சிலரிடமிருந்து மறையவில்லை; மாறாக, வளரத் தலைப்பட்டன! தஞ்சையில் தூய பேதுருகல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர் விசுவலிங்கம்பிள்ளை என்பவராவர். அவருடைய மகன் புலவர் வி. சாமிநாதபிள்ளை என்பார். தமிழ் இலக்கண இலக்கியங்களில் பெரும் புலமை பெற்று இலங்கினார். 'இலக்கணக்கடல்' என எல்லோராலும் போற்றப்படும் அரசஞ் சண்முகனாரும் இவரும் நெருங்கிய நண்பர்கள்.

ஒருமுறை, அரசஞ்சண்முகனார், தமது 'தொல்காப்பியப் பாயிரவிருத்தி' நூலை அச்சிடுதற்கெனத் தஞ்சை வந்திருந்தார். அப்போது அவருடைய தூண்டுதலினாலும் புலவர் சாமிநாதபிள்ளை போன்றவர் முயற்சியினாலும், கரந்தையில் வடவாற்றங்கரையி லமைந்த 'பஞ்சநதப் பாவா மடத்'தில் தமிழ்ச்சங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. அக்காலையில், வங்காளத்தில், கவி இரவீந் திரரின் 'சாந்தி நிகேதனம்' புகழ்பெறத்தொடங்கிய காலமாதலின், அதனைப் பின்பற்றி இந்தத் தமிழ்ச் சங்கத்திற்கு 'வித்தியாநிகேதனம்' என்று பெயர் சூட்டப்பெற்றது.

அரசஞ்சண்முகனாரின் நண்பரும், தமிழ்வடமொழி, ஆங்கில நூலாராய்ச்சியே பொழுதுபோக்கும் விளையாட்டாகவுமுடையவரும், மருத்துவ நூற்பயிற்சி உடையவரும், பெருவள்ளலுமாகிய அரித்துவாரமங்கலம் வா. கோபாலசாமி இரகுபதி இராசாளியார் என்பாரே இச்சங்கத்தின் தலைவராவர் வி. சாமிநாத பிள்ளை செயலாளராவர். அரசஞ்சண்முகனார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், இராதாகிருட்டிணபிள்ளை, நீ. கந்தசாமி பிள்ளை, தட்சிணாமூர்த்தி பிள்ளை, கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, கலியாணசுந்தரம்பிள்ளை, பாலசுப்பிரமணியபிள்ளை முதலியோர் 'வித்தியா நிகேதனத்'தின் உறுப்பினர்களாவர். தமிழ்த் தாத்தா உ.வே சாமிநாதஐயர் அவ்வப்போது இச்சங்கத்திற்கு வந்து சிலகாலம் தங்கித் தமிழாராய்ச்சி செய்ததுண்டு. மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பாண்டித்துரைத் தேவரின் உறுதுணையும் இதற்கிருந்தது. இளைஞர்சிலர் முனைந்து நின்று உழைத்து வந்தனர் அதன் பயனாகச் சில காலம் இவ் 'வித்தியா நிகேதனம்' செவ்வையாக நடைபெற்று வந்தது.

## கரந்தைத் தமிழ்ச் சங்கம்

சங்கத்தலைவர் இராசாளியார் மிகவும் கண்டிப்பானவர். செயலாளர் சாமிநாத பிள்ளை, இளைஞர்களிடத்துத் தம் ஆணையைச் செலுத்தத் தொடங்கினார். இவற்றால் இளைஞர் சிலரின் மனம் வெதும்பியது. 'நாமே தனியாக ஒரு தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தால் என்ன?'என்ற எண்ணம் அவ்விளைஞரிடையே உருவெடுத்தது. அவ்வுருவே 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' ஆகும்

இவ் இளைஞர் குழுவிற்குத் தலைமை தாங்கியவர் இராதா கிருட்டிணபிள்ளையாவர். இவர், நம் தமிழவேள் உமா மகேசுவரனாரின் உடன்பிறந்த தம்பியாவார். 2-9-1885இல்

தோன்றிய இவர், இளங்கலைப்பட்டம் பெற்றவர்; அரசினர் அலுவலகத்தில் துணைப்பதிவாளராகச் சில ஆண்டுகள் இருந்து பின்னர்த் தனுக்கோடி கடற்சுங்க ஆய்வுக்கழகத் தலைமைத் தாளாளராகப் பணிபுரிந்தவர்; தமிழே தம் வாழ்வெனக் கொண்ட தகைமையாளர்; கலந்த கேண்மையும் காட்சியும் உடையவர்; எண்ணியன முடிக்கும் திண்ணியர்; அருங்கலை ஆய்ந்த பெருங்கலைவாணர்; தமிழ் நலங்கருதாமல் தந்நலமே கருதும் கீழ்மக்களைக் கண்டு உளம் பதைத்தெழுந்த உண்மைத் தொண்டர்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்தம் உறவை வெறுத்தொதுக்கும் உள்ளமுடையார்; கல்வியிற் சிறந்த கலங்கா நெஞ்சினர்; போலித் தமிழர் புகழ்வரிசை எள்ளிய புலவர்; கருத்தொருமித்த காதன் மனையொடுந் தாய்க்கடனாற்றலே தகுதியென்றோர்ந்து அவ்வாறே தமிழுக்குழைத்த தகவுசால் பெரியர்; அயர்வுறும் நந்தமிழ் அன்னை தன் தொன்னிலையுயர, உலகு உளங்குளிர உழைத்த சான்றோர்

'வித்தியா நிகேதனத்'தின்மீது வெறுப்புக்கொண்ட இராதா கிருட்டிணர், தம் நண்பர் குழாத்தை அழைத்தார். கரந்தையிலுள்ள கந்தப்பச்செட்டியார் சத்திரத்தில் சிறுகூட்டம் ஒன்றைக் கூட்டினார். வித்தியா நிகேதனத்தினின்றும் விலகிப் புதியதொரு தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவிப்பதன் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். இளைஞர் எல்லோரும் அவர்தம் கருத்தினை வரவேற்றனர்; ஆக்கம் அளிப்பதாக ஊக்கமுடன் உறுதியளித்தனர்; நல்லோர் எண்ணம் கைகூடியது. தமிழர் செய்த தவப்பயனாய்ப் புதியதொரு சங்கம் பிறந்தது!

## சங்கத் தொடக்கம்

1911-ஆம் ஆண்டு மேத் திங்கள் 14-ஆம் நாளன்று (விரோதிகிருது யாண்டு - வைகாசித் திங்கள் முதல்நாள்) நாவலர் பண்டித-ந.மு. வேங்கடசாமி நாட்டார் தலைமையில் சங்கத்தின் தொடக்க விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது, மதுரையில் தமிழ் வளர்க்கும் பணியினை மேற்கொண்ட 'மதுரைத் தமிழ்ச்சங்கத்'தைப் பின்பற்றியே இச்சங்கத்திற்கும் 'கரந்தைத் தமிழ்ச்சங்கம்' என்ற பெயர் சூட்டப்பெற்றது.

சங்கம் எந்நாளும் நிலைத்து நின்று பணிபுரிய வேண்டுமென எண்ணிய இராதாகிருட்டிணர், சட்டமுறையில் தலைவர், துணைத் தலைவர், செயலர் முதலானோரைத் தேர்ந்தெடுத்துச் செயல் புரிவதே

தக்கதென முடிவு செய்தார். அங்ஙனமே தொடக்கத்தில் பதினெண்மர் சங்கச் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் இதற்குத் 'தலைமை தாங்குதற்குரிய தகுதியுடைய ஒருவர் பற்றி ஆராய்கையில், ஆங்கிலத்துடன் அருந்தமிழையும் அமைவுறக் கற்று, நேர்மைக்கும் உண்மைக்கும் போராடும் பெருஞ்செயல் வீரர், உமாமகேசுவரனாரே உரியவர் எனப் பலரும் தெளிந்தனர். பலருடைய விருப்பத்திற்கிணங்கக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் உமாமகேசுவரனார்.

இக்கரந்தைத் தமிழ்ச்சங்கம் தோன்றிய பிறகு 'வித்தியா நிகேதனம்' சரியாகச் செயல்படாது போயிற்று. அதன் தலைவர் இராசாளியார், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தோடு மனவேறுபாடு எதுவுங் கொள்ளாது, தமிழ் வளரும் வகையை எவர் செய்யினும் சரியே எனும் உயர் கொள்கையினராய்த் தம்மாலியன்ற உதவிகளனைத்தையும் இச்சங்கத்திற்கு அளித்து வந்தார்

ஓராண்டு முடிந்தது. ஆண்டுவிழாவைச் சிறப்புறக் கொண்டாட விழைந்த சங்கத்தார், சென்னையினின்றும் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியாரை அழைத்து வந்து, ஆண்டுவிழாத் தலைமை பூணச் செய்தனர் இரண்டாவதாண்டில் சங்கத்தின் பணி மேலும் சிறந்தோங்கத் தலைப்பட்டது, சிவ. சோலைமுத்துப்பிள்ளை, உலகநாத பிள்ளை, சுப்பிரமணிய ஐயர், மகாதேவபிள்ளை முதலான தமிழறிஞர்களைக் கொண்டு பெரியபுராண ஆராய்ச்சிக் கூட்டங்களை (33) நடத்தியது. வணிகர்குலத் தலைவரும், கொடைவள்ளலுமாகிய கானாடுகாத்தான் சா.ராம. மூ. சித. பெத்தாச்சி செட்டியார் தலைமையின் கீழ் (23-2-1913) ஒரு பெருங் கூட்டத்தைக் கூட்டி, அரசியலாரால் தயாரிக்கப்பட்டு வந்த தமிழகராதி, கீழைத்தேய மொழிப் பட்டத் தேர்வு ஆகியவை குறித்து ஆராய்ந்தது தஞ்சைக் கலியாணசுந்தரம் உயர்பள்ளித் தலைமையாசிரியர் டி. இராசமையங்கார், பி ஏ ,எல்.டி தலைமையின் கீழ், சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வுகளில் தமிழ் கட்டாயப பாடமாக ஏற்படுத்தப்பட' வேண்டுமென்ற முடிவினைச் செய்து அதனை அப்பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியது. ஆனால், சென்னைப் பல்கலைக் கழகத்தாரோ, தமிழ்மொழி, கட்டாயப்பாடமாக இருக்க வேண்டியதில்லையென முடிவு செய்துவிட்டனர் அதைக் கண்டு வாளாவிருந்து விடாமல், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சாம்பமூர்த்தி, பி.ஏ.,பி.எல்., தலைமையில் ஒரு கூட்டத்தைக் கூட்டி, ஆங்கில ஆசிரியர் கூறும் கூற்றுக்களனைத்தையும் தக்க அடிப்படைச்

சான்றுகளுடன் மறுத்துத் தமிழைக் கட்டாயப் பாடமாகச் செய்ய வேண்டிய இன்றியமையாமையை எடுத்துரைத்தது.

இத்தகு முடிபுகள் பிற்காலத்தில் (1913-க்குப்பின்) பலனளிக்கத் தொடங்கின என்று எண்ணுகின்றபோது, இதன் தொண்டினை யாரும் மறந்துவிட முடியாது!

இச்சங்கத்தின் சார்பில், 'கரந்தைத் தமிழ்ச்சங்கக் கலாநிலையம்' என்ற பெயரில் நூலகம் ஒன்று, பரிதாபி ஆண்டு ஆனி 31-இல், இராசாளியாரால் திறந்து வைக்கப் பெற்றது. அப்போது, சங்கத்திற்கெனத் தனி இடம் இல்லை. எனவே, கரந்தை அப்பாவு செட்டியார் என்பவர், தமது சத்திரத்தில் சங்கக் கூட்டங்கள் நடத்த இடந்தந்து உதவினார். நூல் நிலையம், சங்கத் தலைவர் உமாமகேசுவரனாரது வீட்டில் இருந்து செயல்புரிந்தது.

## பதிவும் நோக்கமும்

எந்த ஒரு சங்கமும், பதிவு செய்யப்படாவிட்டால், அது சரியாக இயங்க முடியாது. அதனைக் கருத்திற்கொண்டே, தலைவர் உமாமகேசுவரனார், 1860ஆம் ஆண்டின் 21ஆவது சட்டப்படி, 1-5-1941இல் (ஆனந்த சித்திரை-10) கரந்தைத் தமிழ்ச்சங்கத்தைப் பதிவு செய்தார்.

சங்கத்தைப் பதிவு செய்தபோது. அதன் நோக்கங்களும் அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளும் தெளிவாக வகுக்கப்பட்டன.

## சங்கத்தின் நோக்கங்களாவன

(1) தமிழின் நிலையையும் தமிழரின் நிலையையும் சீர்பெறச் செய்து உயர்த்துவது;

(2) சங்க உறுப்பினர்களுக்குள் நட்புரிமையும் ஒருமைப்பாடும் உண்டாக்குவது;

(3) தமிழரின் அறநிலையங்களை மேற்கொண்டு காப்பது;

(4) உறுப்பினரின் உடல்நிலை, ஒழுக்கநிலை, சமூகநிலை, கல்வி நிலை, இவை செம்மையுறுதற்கான வசதிகளை அமைப்பது;

(5) தமிழரின் தொழிலும், பொருளாதாரமும் வளம்பெறச் செய்வது.

இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்குச் சங்கம் இயற்றும் பணிகளாகப் பின்வருபவை குறிக்கப்பட்டுள்ளன:

(1) சொற்பொழிவுகளும் (Lectures), சொற்போர்களும் (Debates) நடத்துதல்;

(2) படிப்பிடங்களையும் (Reading Rooms), நூல் நிலையங்களையும் (Libraries) தஞ்சாவூரிலும், பிற இடங்களிலும் நிறுவி நடத்துதல்;

(3) தக்க ஆசிரியர்களைக் கொண்டு போதனை வகுப்புகள் (Tuition Classes) நடத்துதல்;

(4) துண்டு வெளியீடு, நூல் வெளியீடு, தாள் வெளியீடு முதலியன செய்தல்;

(5) தமிழ் நூல் ஆராய்ச்சிகள், தமிழர் நாகரிகம் பற்றிய ஆராய்ச்சிகள், இலக்கண – இலக்கிய அறிவுநூல் முதலிய பிறமொழி நூல்களையும் தமிழில் ஆக்குதல், வெளியிடல்;

(6) கைத்தொழில் கலாசாலைகள் அமைத்து நடத்துதல்;

(7) உடற்பயிற்சிக்கான உள்ளிட (Indoor), வெளியிட (Outdoor) விளையாட்டுகளுக்கு (Games) வசதிகள் செய்தல்;

(8) தமிழ்க் கல்லூரிகளும் தமிழ்க் கலாசாலைகளும் வைத்து நடத்துதல்;

(9) தேர்வுகள் நடத்தல், உதவிச் சம்பளங்கள், பரிசுகள், பதக்கங்கள், நற்சாட்சிப் பத்திரங்கள், முதலியன கொடுத்துப் படிப்போர்களை ஊக்குவித்தல்;

(10) கலாசாலைகளில் எளிமை, தூய்மை, விரிந்த மனம், நல்லொழுக்கம் முதலியன மாணவர்களிடம் படியப் பழக்குதல்;

(11) தமிழரின் முன்னேற்றத்திற்கான அறநிலையங்கள், கல்வி நிலையங்கள், புகலிடங்கள் (Asylums), அனாதை இல்லங்கள் (Orphanages), ஏழையில்லங்கள் (Poor houses) மருத்துவ சாலைகள் முதலியன நடத்துதல்;

(12) கிளைச் சங்கங்கள், கல்வி நிலையங்கள் முதலியவற்றை நிறுவித் தாய்ச் சங்கத்துடன் இணைத்து அவற்றை நடத்துதல்;

(13) ஒப்புவிக்கப்படும் அறங்களை (Trusts) மேற்கொண்டு காத்தல்;

(14) சங்கத்தின் நோக்கங்கள் நிறைவேறுதற்கான காரியங்கள் யாவற்றையும் செய்தல்; மகாநாடுகள், பொதுக்கூட்டங்கள் முதலியன நடத்துதல்; பின்னும் அவசியமான தொண்டுகளைப் புரிதல்.

தமிழவேள் உமாமகேசுவரனார், தாம் வாழ்ந்த இறுதிமூச்சு வரையிலும் மேற்கண்ட நோக்கங்கள் நிறைவேறப் பாடுபட்டார்

## சங்க நூல்நிலையம்

சங்க நூலகத்திற்கென வள்ளல் பெத்தாச்சி செட்டியார், தம்பாலிருந்த ஆயிரக்கணக்கான அரிய நூல்களை நன்கொடையாக வழங்கினார். எனவே அவர் செய்த நன்றிக்கறிகுறியாகக் 'கரந்தைத் தமிழ்ச் சங்கக் கலாநிலையம்' என்ற பெயர் மாற்றப்பட்டுப் 'பெத்தாச்சிப் புகழ்நிலையம்' 'கரந்தைத் தமிழ்ச் சங்க நூல் நிலையம்' என்ற பெயர்கள் இடப்பெற்றன. முதன் முதலில் இருபது நூல்களுடன் தொடங்கப்பெற்ற இந்த நூல்நிலையம்–இன்று ஆயிரக்கணக்கான நூல்களைப் பெற்றுத் தமிழகத்திலேயே தலைசிறந்த நூல் நிலையம் என்ற பெயரைப் பெற்று விளங்குவதற்குத் தமிழவேள் உமாமகேசுவரனாரின் பெருமுயற்சியே காரணமாகும்!

சங்கத்தின் வயது வளர வளரத் தொண்டின் எண்ணிக்கையும் வளர்வதாயிற்று. இருபத்தைந்து ஆண்டுகளில்–அதாவது–தமிழவேள் உமாமகேசுவரனார் தலைமையின் கீழ்–இக்கரந்தைத் தமிழ்ச்சங்கம் செய்த செயல்களைச் சுருக்கமாகக் காண்போம் அவ்வாறு காண்பதன் வாயிலாகத் தமிழவேளின் செயற்றிறங்களையும் அறிந்தவர்க ளாவோம்.

## செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரி

சங்கச் சார்பில் 6–10–1916 (விசயதசமி) அன்று இராசாளியார் வாழ்த்துரையோடு தொடங்கப்பெற்றது இது. முதலில் நாற்பது மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தனர். எட்டுக் கல்வி மட்டுமே தொடக்கத்தில் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்தது கவியரசு வேங்கடாசலம் பிள்ளை இதன் தலைவராயிருந்தார். இக் கல்லூரி சிறிது சிறிதாக வளர்ச்சியுற்று 1924–25–இல் எட்டாம் வகுப்பை எட்டிப் பிடித்தது. அப்போது ஆசிரியராய் இருந்தோர் எண்ணிக்கை பதினொன்று ஆகும். இப் பதினொருவரில் தமிழுக்கெனத் தனித் தமிழாசிரியர் ஒருவரும் அக் காலத்திலேயே அமர்த்தப் பெற்றிருந்தார். (இச் செயலை நம் அரசியலார் தற்போது நிறைவேற்றிக்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது). நாளடைவில் எட்டுக் கல்வியுடன் தொழிற் கல்விகளான பஞ்சு நூற்றல், பாய் நெய்தல் முதலானவையும் மாணவர்க்குக் கற்றுக் கொடுக்கப் பெற்றன. இதனால் மாணவர் பெரிதும் பயன் பெற்று வந்தனர். 1930–31இல்

இக் கல்லூரியிற் பயின்ற மாணவர் தொகை 450 ஆகும். தலைமையாசிரியர் சிவ குப்புசாமி பிள்ளை உட்பட இருபது ஆசிரியர்கள் வேலை பார்த்தனர். மாணவர் எவரிடமிருந்தும் கல்விக்கெனக் கட்டணம் எதுவும் வாங்கப்படவில்லை; உண்மையான அறக்கல்லூரியாகவே திகழ்ந்தது. மாணவரிடையே பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி முதலியன நிகழ்த்தப் பெற்றுப் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப் பெற்றன. கல்லூரிக்கு மிகுதியான நாட்கள் வந்தவர்க்குத் தனிப் பரிசுகள் அளிக்கப்பெற்றன. மேலும் திக்கற்ற மாணவரில்லம் ஒன்று தொடங்கப் பெற்று, முதலில் பத்து மாணவர்க்கு உண்டி, உடை, உறையுள் முதலியன அன்பளிப்பாக வழங்கப் பெற்றன. 1928–29–இல் கட்டணமில்லா மருத்துவமனை (Free Dispensary) ஒன்று சங்கச் சார்பில் தொடங்கப்பெற்று, மாணவர்கட்கும், பொது மக்கட்கும் மருந்து முதலியன அளிக்கப்பெற்றன. இவையெல்லாம் இன்று நமக்குப் புதியனவாகத் தோன்றாவிடினும், அன்று புதியனவாக–மக்களால் போற்றத் தக்கனவாக–மாணவர்க்குப் பெருந்துணை புரிவனவாக இருந்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை அன்றியும், இன்றைய நிலைக்கு இவை, அன்று வழிகாட்டிகளாய் நின்றன என்று கூறினும் மிகையாகா.

## தமிழ்ப் பொழில்

சங்கம் தொடங்கிய நான்காவது ஆண்டிலேயே திங்கள் இதழ் (Monthly Issue) ஒன்றைத் தொடங்க வேண்டுமென்ற எண்ணம் தமிழவேள் உமாமகேசுவரனார் உள்ளத்தே முகிழ்த்தெழுந்தது. தம் நோக்கங்களைத் தமிழ்ப் பேருலகினர்க்குத் தெரிவித்து, அன்னார் உதவி பெற்று அவற்றினை நிறைவேற்றுமாறு காண்டலும, தமிழ் மக்களையும் அவர் தெய்வத் திருமொழியினையும் இழிதகவு செய்து, உண்மை வரலாற்று நெறிபிறழ எழுதிவரும் கருத்துக்களை நேரிய முறையில் கண்டித்தலும், மேல்நாட்டு வரலாற்றைத் தமிழில் மொழிபெயர்த்தமைத்துக் கொள்ளுதலுமாகிய இன்னோரன்ன நோக்கங்களோடு தமிழ்இதழ் ஒன்றை வெளியிட எண்ணிய தலைவர் உமாமகேசுவரனார், அதற்கான ஏற்பாடுகளைச் செய்தற்கென இராதாகிருட்டிண பிள்ளை, சோமநாதராவ், ஐ. குமாரசாமிப்பிள்ளை, பெரியசாமிப் பிள்ளை, நா. சீதாராம பிள்ளை ஆகிய ஐவர் கொண்ட குழு ஒன்றினை அமைத்தார். எனினும் பத்தாண்டுகட்குப் பின்னரே இவ்வெண்ணம் நிறைவேறியது. 'தமிழ்ப்பொழில்' எனும் தகவுறு பெயர் தாங்கிய இதழ் ஒன்று 1925–26 முதல், திங்கள்தோறும் மணம்

வீசத் தலைப்பட்டது. இதன் முதற் பொழிற்றொண்டராகப் (இதழாசிரியர்) பணிபுரிந்தவர் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை யாவர்.

இதன் ஒவ்வோர் இதழும் படிக்கப்படிக்கத் தமிழார்வத்தையும், தமிழ்ப்பற்றையும் தருவதாய்த் திகழ்வது காணலாம். தமிழ்மொழி வளர்ச்சிக்கு இப்பொழில் செய்த போற்றற்குரிய பணிகள் பலப்பல. அரிய தமிழாராய்ச்சிக் கட்டுரைகள், ஆங்கில மொழிபெயர்ப்புக் கட்டுரை-கவிதைகள், தமிழ்க் கலைச்சொல்லாக்கம், வரலாற்றுக் கட்டுரைகள், மறுப்புக்கட்டுரைகள் ஆகியவற்றைத் தாங்கி வெளிவரும் இப்பொழில், கற்போர் கரங்களில் நின்று களிநடம் புரிவதாயிற்று தமிழின் சென்ற கால வரலாற்றை ஆய்வோர் இத் 'தமிழ்ப் பொழிலை'த் துணையாகக் கொள்வதும், மேற்கோள் காட்டுவதும் வழக்காறாகக் கொண்டுள்ளனர் என்பது இவண் குறிக்கத்தகும்.

நல்ல தமிழ்மொழியில் பேசவும் எழுதவும் வேண்டும். வடமொழி கலந்து பேசுதலும் எழுதுதலும் தமிழ்மொழியின் ஆக்கத்தைக் குறைப்பனவாகும். தமிழர், வரலாறு காணமுடியாத காலந்தொட்டு நல்ல நாகரிகம் கொண்டு வாழ்ந்தவர். அவர்கள் நாகரிகம் தனித்த சிறப்பு வாய்ந்தது. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் கொணர்தல் வேண்டும்; இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்- என்பன போன்ற கொள்கைகளைத், தோன்றிய நாள்தொட்டு நிறைவேற்றி வந்துள்ளது இப்'பொழில்'. இவைகளை விளக்கப் 'பொழிலி'ல் இடம்பெற்ற கட்டுரைகள் பலவாகும் தமிழார்வம் சிறிதும் இல்லாத அக்காலத்துஞ்சரி, இக்காலத்துஞ்சரி, எவ்வித ஊதியமும் கருதாமல், கட்டுரை வரைவோர்க்குங்கூட அன்பளிப்புந்தர முடியாமல், ஓர் இதழை-அதுவும் தனித்தமிழ் இதழை-இத்துணைச் சிறப்போடு வெளியிட்டு வருதல் என்பது எத்துணை அரிய செயல்? சால்புடைப் பெருமகனாரான தமிழவேள் உமாமகேசுவரனாரின் உயர்ந்த உள்ளமே இதன் வெற்றிக்குக் காரணமாகும்!

இத்தகு 'பொழிலி'ன் ஆசிரியராக இருந்தவர்களில் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, தமிழவேள் உமாமகேசுவரனார், நீ. கந்தசாமி பிள்ளை, எல். உலகநாத பிள்ளை, கோ. சி. பெரியசாமிப் புலவர், எஸ். சுயம்பிரகாசம் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். தற்போது பேராசிரியர் ச. பாலசுந்தரம், பதிப்பாசிரியராக இருந்து வருகின்றார்.

பொதுவாக ஓர் இதழ் எனின், 'ஆசிரியர்' அல்லது 'பொறுப்பாசிரியர்' என்று போடுவது மரபு. ஆனால், தமிழவேளோ, 'பொழிற்றொண்டர்' என்று போட்டுக் கொண்டார். 'உறுப்பினர் கட்டணம்' என்பதற்கு மாறாகக் 'கையொப்பத்தொகை' என்பார். 'விலாசம்' என்பதை 'உறையுள்' என்றும்; ஆங்கிலத்தில் 'வி.பி.பி.' (V.P.P) என்பதை 'விலைகொளும் அஞ்சல்' என்றும் எழுதுவார். 'தமிழ்ப்பொழில்' உறுப்பினராக அவர் விடுத்த வேண்டுகோள் வருமாறு:

**கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை**
**தமிழ்ப்பொழில்**

**கருந்திட்டைக்குடி**
**விசு, சித்திரை, க**

**ஐயா,**

***இத்துடன் பொழிற் கையொப்ப விண்ணப்பம் ஒன்று இணைத்துள்ளோம். தங்கள் நண்பருள் ஒருவரையேனும் கையொப்பக்காரராகச் சேரும்படி வேண்டி, இணைத்துள்ள விண்ணப்பத்தில் அவர்கள் ஒப்பம் வாங்கி அனுப்ப வேண்டுகிறோம். ஒருவரைத் தாங்கள் சேர்த்தனுப்புவது, பொழிலின் பயனை ஆயிரவர்க்கு அளித்ததாகும் என்பதை நினைவூட்டுகிறோம். சிறுதொண்டு பெரும்பயன் விளைவிக்கும் வகைகளுள் இது ஒன்றெனக் கருத்திற் கொள்ள வேண்டுகிறோம்.***

தங்கள் அன்புள்ள
த.வே. உமாமகேசுவரன்
பொழிற்றொண்டர்

தமிழ்ப் பொழிலில் வெளிவரும் கட்டுரைகள், நல்ல—தூய இனிய தமிழில் வெளிவந்தன 'நடை கடினம்' என்றும்; 'புரிய—வில்லை' என்றும் அவ்வப்போது சிலர் குறைகூறியதுண்டு. அதற்குப் பொழிற்றொண்டராக இருந்த தமிழவேள் அளித்த விளக்கம், இன்றும் நம்மனோரால் எண்ணி எண்ணி இறும்பூது கொள்ளத் தகுவது :

"இறைவன் திருவருளாலும், தமிழ் மக்கள், தமிழ்ப்புலவர்கள் ஆதரவாலும், 'பொழில்', பதினாறு ஆண்டு, இப்பங்குனித் திங்களோடு, நிறையப் பெற்றுள்ளது 'பொழில்' தோன்றிய காலத்தும், பின்னும், எந்தெந்த வழிகளிலெல்லாம் 'பொழில்' தமிழகத்திற்குப் பயன்பட வேண்டுமென்று எண்ணினோமோ அந்தந்த வழிகளிலெல்—லாம் பயனளித்துள்ளது எனக் கூறுவதற்கில்லை! ஒருவாறு காலந்தள்ளி வந்தது என்றே நாம் கூறலாம்!

''ஆறாயிரம் மைலுக்கப்பாலுள்ள ஆங்கிலமொழியையும், ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பெழுந்த வடமொழி நூல்களையும் இடர்ப்பாடு சிறிதுமின்றிக் கற்கவும், கற்று மகிழவும், பிறர்க்குச் கூறிப்பரப்பவும் ஆற்றலுடைய நம் தமிழகத்துத் தமிழ்மொழியின் தூய சொற்கள் பொருள்விளங்கிப் பயன்தர ஆற்றாவாயின், அது யாவர் குறை? பயிற்சிக் குறையன்றோ? சொல்லாலும் பொருளாலும் பேசவும் எண்ணவும் இனிமை தரும் எம் தாய்மொழி, இன்று இவ்வாறாயிற்றே என்று யாம் வருந்துவதால் பயனென்? ஒரோவழி, தமிழோடு தொடர்புடைய வேற்று நாட்டாரும் இம்மொழியின் நன்மை உணர்ந்து போற்றுமிடத்து, நம்மவர் 'யாம் பொருளுணர மாட்டோம்; யாம் பொருளுணர ஆற்றேம்' எனக்கூறுவது, இதுகாறும் எழுவியப்போடு நின்ற இவ்வுலகத்து எழுந்த எட்டாவது வியப்பென்றே எண்ணுகிறோம்!... பொழிலின் நறுமணம் நாற்றிசையும் பரந்து உலகை மகிழ்விக்கத் தமிழ்த் தெய்வம் துணைசெய்வதாக!'' (பொழில் 16/12).

பிறமொழிக் கலப்பில்லாத தூய தமிழைப்பற்றித் தமிழ்மக்கள் அறியாதிருப்பது குறித்துத் தமிழவேள் கொண்ட துயரம் இதில் புலனாகின்றது

## நூல் வெளியீடு

சங்க வாயிலாகத் தமிழவேள் செய்த செயல்களுள் குறிப்பிடத்தக்கவொன்று, 'நூல் வெளியிடுதல்' ஆகும் தொடக்க காலத்தில் சங்க அறிக்கைகளையும், துண்டு வெளியீடுகளையும், சுந்தரம்பிள்ளை பாடிய தமிழ்த் தெய்வ வணக்கப்பாடல்களையும் அச்சிட்டுப் பொதுமக்களிடையே ஓரளவு தமிழறிவு பெருக அனைவர்க்கும் அன்பளிப்பாக வழங்க ஏற்பாடு செய்தார். பின்னர்ப் படிப்படியாகப் பல அரிய தமிழ் நூல்களை வெளியிடலானார். 1920-21ஆம் ஆண்டிலேயே ந.மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய 'நக்கீரர்' என்ற நூலை வெளியிட்டுச் சென்னைப் பல்கலைக்கழக இளங்கலை வகுப்புக்குப் பாடமாக வைக்குமாறு செய்தவர் தமிழவேளேயாவார்! இது தவிர, யாழ் நூல், தொல்காப்பியம்-சேனாவரையம் - தெய்வச் சிலையார் உரை, நெல்லை வருக்கக் கோவை, சிந்தரந்தாதி, சுருதி வீணை, தமிழரசி குறவஞ்சி, பரத சாத்திரம், கவியரசு நினைவுமலர், சிவமும் செந்தமிழும், சிலப்பதிகாரம்-புகார்க் காண்டம், கச்சிக் கலம்பகம், அப்பர் புகழ்மாலை, சுந்தரர் புகழ்மாலை, பாரதசார வெண்பா, யவன மஞ்சரி,

இந்தியத் தல யாத்திரை, புலவராற்றுப்படை, கரந்தைக் கட்டுரைக் கோவை முதலான நூல்கள், தமிழவேள் உள்ள காலத்தும் அதன் பின்னரும் சங்கத்திலிருந்து வெளியிடப் பெற்றவையாகும்.

## படிப்பகம்

சங்கப் பணிகளுள் மற்றொன்று, கட்டணமிலாப் படிப்பகம் (Free Reading Room) நடத்துதல் ஆகும். இதில், நாளிதழ்கள், கிழமை இதழ்கள், திங்கள் இதழ்கள் முதலியன வரவழைக்கப் பெற்றுப் பொதுமக்கட்குப் படிக்கத் தரப்பெறுகின்றன. இது 1915 முதல் இன்று வரையும் இயங்கிக்கொண்டிருக்கிறது.

## இடம் வாங்குதல்

சங்கத்திற்கெனத் தனி இடம் இல்லாமை கருதிப் பெரிதும் வருந்தினார் தலைவர் உமாமகேசுவரனார் சங்கத்தின் இடையறாப் பணிகளை நேரிற் கண்டு மகிழ்ந்த வள்ளல் பெத்தாச்சி செட்டியார், தமிழவேளின் விருப்பப்படி கரந்தையிற் பல இடங்களையும் சுற்றிப் பார்த்தார். ஆங்கே ஆற்றங்கரையின் வடபால் ஒரு வெளியிடத்தை விலைக்கு வாங்கக் குறித்ததோடு, அங்ஙனம் வாங்குவது பற்றியும், அவ்விடத்தே கட்டிடம் அமைப்பது பற்றியும் சங்கம் பொருட் கவலையடையாதவாறு பேருதவி செய்வதாகவும் வாக்குறுதியளித்தார் அவர் கூறியபடியே, கரந்தைப் 'பாவாமடத்' திற்கு உரியதொரு வெளியிடத்தை அரசினர் வழியாக, அம்மடத்திற்கு நிலைத்த பேரூதியஞ் செய்யுந் தொகை ஈடு அமைத்து விலைக்கு வாங்குதற் குரிய ஏற்பாடு செய்யப் பெற்று அவ்வாறே 1923–24–இல் வாங்கப்பெற்றது பெத்தாச்சி செட்டியார் கட்டிடத்திற்கென ஓராயிரம் ரூபாய் தந்து உதவினார்.

தலைவர் உமாமகேசுவரனார், சங்கத்திற்கெனப் பெருநிதிச் சீட்டு ஒன்றை ஏற்பாடு செய்து, அதன் வாயிலாக 1929–30–இல் 'கரந்தைத் தமிழ்ப்பெருமன்றத்'தைக் கட்டி முடித்தார். 1932–33–இல் வடவாற்றின் அருகே ஒரு பெரிய வெற்றிடத்தை அரசியலார் ஆணை பெற்று வாங்கி, மாணவர்கட்குப் பயனாகுமாறு விளையாட்டிடங் களும், தோட்டமும் அமைத்தார்.

## படிப்படி வளர்ச்சி

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் முதல் செயலாளராகப் பணிபுரிந்தவர் கலியாணசுந்தரம் பிள்ளை என்பவராவர் அவருக்குப்

பின்னர்க் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, அ. கணபதிப் பிள்ளை, நீ. கந்தசாமி பிள்ளை ஆகியோர் முதல் இருபத்தைந் தாண்டுகளில் செயலர்களாக அமர்ந்து இச்சங்க வளர்ச்சிக்குத் தமிழவேளோடு உடனிருந்து பாடுபட்டுள்ளனர். சங்கந் தொடங்கிய இரண்டாவதாண்டில் இதன் வரவு–செலவு ரூ. 300 ஆக இருந்தது; பத்தாவதாண்டி னிறுதியில் ஏறத்தாழ 3,000 ஆக இருந்து இருபதாவதாண்டினிறுதியில் ரூ. 10,000 ஆக உயர்ந்துள்ளது என்று அறியும் போது இதன் வளர்ச்சியை ஒருவாறு அறிந்து கொள்ளலாம். தொடக்க காலத்தில் சங்கத்தின் பொருளாதார வளர்ச்சியில் பங்கு பெற்றவர்கள் கோபால்சாமி இரகுநாத இராசாளியாரும், பெத்தாச்சி செட்டியாருமாவர்.

உமாமகேசுவரனார், முதல் ஐந்தாண்டுகளில் அத்துணைக் கவனத்தை இதன்பாற் செலுத்தினாரில்லை. ஆறாவதாண்டிலிருந்து, எண்ணும்போதும், எழுதும்போதும், உண்ணும்போதும், உறங்கும் போதும் சங்க வளர்ச்சியையே கொள்ளலானார். மணமான சில ஆண்டுகளுக்குள்ளாகவே பெறலரும் மனைவியை இழந்ததும், அதனையடுத்துத் தம் பெயர் துலங்கத் தோன்றிய திருமகன் பஞ்சாபகேசனை இழந்ததும் ஆகியவற்றை எண்ணுங்கால், இவருடைய காலமனைத்தும் கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்கே ஆக்கப்படவேண்டும் என எம்பெருமான் திருவுளம் போலும் என்றே நினைக்க வேண்டியுள்ளது. தாழ்ந்துகிடந்த தமிழகம் தலைதூக்க வேண்டும், அலமந்து திரியும் தமிழன்னை அரியணையேற வேண்டும் என்ற எண்ணம் இறைவன் திருவுள்ளத்திலும் தோன்றியிருத்தல் வேண்டும்! 'எல்லாம் இறையருள்' எண்ணி அமைதி கொண்டார் உமாமகேசுவரனார்.

வழக்கு உரைக்கச் செல்லும் வேளை தவிர எஞ்சிய பொழுதெல்லாம் சங்கத்திலேயே கழிந்தன. சங்கம் பங்கமிலாப் பணிகளைப் பகட்டேதுமின்றிச் செய்தது. இதுகாறும் கூறப்பட்ட சங்கத்துச் செயல்களனைத்தும் முதல் இருபத்தைந்தாண்டுக் காலத்திற்குள் சங்கத் தலைவர் உமாமகேசுவரராலேயே செய்து முடிக்கப்பெற்றன.

### வெள்ளி விழா

சங்கம், தன் வெற்றிப்பாதையில் 25 ஆவது ஆண்டெல்லையை எட்டிப் பிடித்தது. வெள்ளிவிழாவினைத் தமிழகம் முழுதும் போற்றும் வகையில் கொண்டாடத் திட்டமிட்டார் தலைவர் உமாமகேசுவரனார்.

இவ்வெள்ளிவிழாவைக் குறித்து, 27–2–1936–இல், விண்ணப்பம் ஒன்றையும் அச்சிட்டு வெளியிட்டார்; அதன் முன்னுரையில் கரந்தைத் தமிழ்ச்சங்கம் அதுவரை செய்து வந்த அருஞ்செயல்களைச் சுருக்கமாக உரைத்துள்ளார்:

''நம் சங்கம் தோன்றிய காலத்து, தமிழ்மொழியும் அதன்பால் தமிழ்மக்களுக்குள்ள ஆர்வமும் எந்நிலையிலிருந்தன என்பதையும், தோன்றி இருபத்தைந்தாவது ஆண்டு நிரம்பவும், இன்று எவ்வாறு உள்ளது என்பதையும், ஒரு சிறிது மேற்பார்வையாகக் காண எண்ணுவார்க்கும், நமது சங்கத்தின் முயற்சிகளால் தமிழ்நாடும் மக்களும் அடைந்துள்ள பயன் நன்கு தெரியலாவதோடு, இத்தகைய அருஞ்செயல்களை எவ்வகை ஆரவாரமுமின்றிச் செய்துவரும் எளிமையும் நன்கு புலனாகாமற் போகா! நமது சங்கம் தோன்றிய காலத்துப் பல்கலைக்கழகத்துள் தான் பெற்றுவந்த ஒதுக்கிடமும் இழந்து தமிழ்த்தாய் அல்லலுறுவாளாயினள். தமிழ்நாட்டில் பிறந்த அறிவுடை மக்கள் பலரும் தமிழகத்தே தமிழ்மக்களால் கூட்டப்பெற்ற கூட்டங்களில், தமிழ் மொழியிலே பேசுவதற்கு வன்மையற்ற கோழைகளாய்ச் சிறந்தனர் அக்கோழைகளின் நிலையைக் குறிக்கோளாகக் கொண்ட மக்கட்கூட்டமும் தாய்மொழியைப் புறக்கணிப்பதில் அவர்களையே பின்பற்றுவாராயினர் ஆங்காங்குச் சிற்சிலராய்க் கூடி, தமிழ்க்கலை மல்க விரும்பிய பெரியோரும், தமிழ்மொழி தனித்தியங்கும் ஆற்றலுடைய தென்னும் உண்மையை உளங்கொளாது உழப்பாராயினர்!

''தோன்றிய காலத்து இத்தன்மைத்தாக, இதுபோது யாம் எண்ணிய சிறப்பு எய்தாவிடினும் பல்கலைக்கழகங்களுள் ஒரு சிறிதாவது போற்றப்பெற்றுத் தமிழ்மொழியிலேயே பலகலைகளும் வரவேண்டுமென்னும் ஊக்கமும் பெற்று, ஒருசில நூல்களும் வெளிவரலாயின. இனி, பல நூல்களும் வெளிவருவதற்கு ஏற்ற முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன தமிழ்மொழியிலன்றிப் பிறமொழியில் பேசுவாரேல் எத்தகைய பெரியோரும் ஏளனம் செய்யப்படுவாராயினர். **நமது சங்கக் கூட்டங்களில் தனித்தமிழின் இன்னொலிகேட்ட செவிகள், பிறமொழிக் கலப்பால் நன்மையறியாது தாமே திரும்புவனவாயின!** இல்ல நலங்களின் பொருட்டு வெளியிடும் அழைப்பிதழுள்ளும் தனித் தமிழே பரவுவதாயிற்று அறிவியல் நூல்கள் மொழிபெயர்ப்பாரும், பொருள் தெரியாது பிறமொழிச் சொற்களை இருந்தன இருந்தனவாறே ஏற்றுக் கொள்வதினும், தன பொருளைத் தானே

தெரிக்கும் சொற்களைத் தமிழிலேயே ஆக்கிக் கொள்வது சிறந்ததெனக் கைக்கொண்டு முயல்வாராயினர். பள்ளிச் சிறாரும் பண்டைத்தமிழகப் பெருமையை ஒருவாறு தெரிந்து, தமிழகத்தையும் தமிழ் அன்னையையும் தங்கள் தனி உரிமையாகக் கருதிப் பெருமிதமெய்தி, மீண்டும் அப் பழம்பெருமையைக் காண அவாவுகின்றனர்.

"அன்பர்களே! **இம் மாறுதல்களெல்லாம் நம் சங்கத்தின் நன்முயற்சிகளின் பயனேயாகும்!** இம் மாறுதல்களால் தமிழகம் அடைந்த பயன் மிகச் சிறிதே எனினும், ஊக்கத்துடனும் உறுதியுடனும் உலையாது முயன்றால், உலகத்திலேயே நாம் ஒரு தனிச்சீர் எய்துவதோடு உலக முன்னேற்றத்திற்கும் நாம் உதவி செய்யக் கூடுமென்ற வன்மையுடையம் என நமக்குத் தெரிகின்றது. இதுபோது இவ்விருபத்தைந்தாண்டின் நன்முயற்சிகளால் தமிழ்ப்பயிர் தழைத்துக் காய்த்துப் பயன்தரத் தக்க தண்புலம் பண்படுத்தப் பட்டுள்ளது என்ற வகையிற்றான் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வாறு பண்படுத்தப்பட்ட நிலத்தை வறிதே விடாது தொடர்ந்து பயிரிடுவதற்காய முயற்சிகளை இச்சங்கத்தின் வெள்ளிவிழாவன்று ஒருவாறு ஒழுங்குபடுத்திப் பல பகுதியாய்ப் பிரித்துக் கொண்டு, எவ்வெப்போது எவ்வெவை செய்வது என்னும் ஒரு நிரல் செய்து தொண்டாற்ற முன் வருகின்றோம்!"

தமிழவேளின் இம்மடலால், கரந்தைத் தமிழ்ச்சங்கம் தோன்றுவதற்கு முன், தமிழின் நிலையும் தமிழர் தன்மையும் எவ்வாறிருந்தன; சங்கம் தோன்றியபின் அதன் தளராப் பணிகளால், தமிழர் நிலை எங்ஙனம் உயர்ந்தது, தமிழர் தன்மையில் எத்தகைய மாற்றம் நிகழ்ந்தது என்பது தெரியவரும்.

வெள்ளிவிழாவை முத்தமிழ் விழாவாக ஏழு நாட்கள் கொண்டாட வேண்டும்; தமிழ்ப் புலவர்களைத் தோற்றுவித்தற்கெனத் 'தமிழ்ப்புலவர் கல்லூரி' ஒன்றினை நிறுவவேண்டும்; அதில் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழியுடன் ஆங்கில மொழியையும் கற்கும் வழிசெயல்வேண்டும்; அம்மாணவர்கள் தங்கள் முயற்சியாலும், கைத்தொழிலாலும் தங்கள் வாழ்க்கையைப் பிறர் உதவியின்றித் தாங்களே நடத்தவேண்டும்; இவர்கள் தமிழ் இலக்கிய அறிவுடன், பயிர்த்தொழில், மருத்துவம், சிற்பம், இசை, ஓவியம், நாடகம், ஆடை நெய்தல் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றில் வன்மை-பெறவேண்டும்; வெள்ளிவிழாவின் போது, பல்வேறு காலங்களிலும் பல்வேறு

இடங்களிலும் தோன்றிய சிற்ப, ஓவிய, கைத்தொழில் வன்மைகளைப் பலரும் அறிந்து இன்புறற் பொருட்டுக் 'கண்காட்சிச் சாலையும்' 'பல்பொருட்காட்சியும்' வைத்தல் வேண்டும்; இலக்கண அகராதி, தமிழ்ப்புலவர் வரலாறு முதலான நூல்களை வெளியிட வேண்டும்; தமிழ்நாட்டுப் பேரறிஞர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்துக் 'கரந்தைக் கட்டுரை' என்னும் மலரை வெளியிட வேண்டும்; ஆங்கில நாட்டில் கலை வளர்ச்சிக்கெனப் பேரறிஞர் பேகனால் தோற்றுவிக்கப் பெற்ற கலைக்கழகம் போலவும், பிரெஞ்சு நாட்டில் மொழியைச் செம்மைப்படுத்துதற்கென அமைக்கப்பட்ட சங்கம் போலவும், முன்பு நம் நாட்டில் நிலவிய முச்சங்கங்கள போலவும், தமிழைப் பல்லாற்றானும் வளர்த்தற்கெனத் தமிழ் மன்றம் ஒன்றைத் தோற்றுவித்தல் வேண்டும், நாட்டுப்புறத் தொண்டர் குழு என்ற ஒன்றை உண்டாக்கிச் சங்கத்தைச் சுற்றிலும் இருபத்தைந்து சதுரக்கல் தொலைவிலுள்ள சிற்றூாகளுக்குச் சென்று பொதுமக்களிடையே தொண்டு செய்தற்கெனத் தனித் தொண்டர்களை அமைத்தல வேண்டும், இவையே உமாமகேசுவரனார் போட்ட திட்டங்களாகும்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின வெள்ளிவிழா 1938 ஏப்ரல் 15, 16, 17–ஆம் நாட்களில் மிகச சிறப்புறக் கொண்டாடப்பெற்றது சங்கத்தின் முன்றில் தொடங்கி வடவாற்றின் மாவிலக்குமி பாலக்கரை வரையில் புதுமணல் பரந்த பூம்பந்தர் அமைக்கப்பெற்றது இடந்தொறும் காட்சிச்செடிகள் கண்ணுக்கு விருந்தாய் வைக்கப் பெற்றிருந்தன; மின்செய் விளக்கினம் மீனினம் போற காட்சியளித்தன; வந்தவர் யாவரேயாயினும் அவரை இன்முகத்துடன் வரவேற்கும் தொண்டர்குழாம் ஒன்று ஏற்படுத்தப்பெற்றது

முதல் நாளன்று வெள்ளிவிழாத்தலைவராம் அருட்டிரு ஞானியாரடிகளைச் சங்கத் தலைவர் உமாமகேசுவரனாரும், ஏனைத் தண்டமிழ்ப் பெருஞ் செல்வரும், மங்கல முழக்கத்துடன ஊர்வலமாக அழைத்து வந்தனர் தவத்திரு. ஞானியாரடிகளார், சங்கத்தி லமைந்துள்ள தமிழ்ப்பெரு மன்றத்தின தலைமை மேடையில் அமர்ந்தபின், உமாமகேசுவரனார், தமக்கு இயல்பாக வாய்த்துள்ள செந்தமிழ்ப் பெருநலத்தால், அனைவரையும் தென்னுண்தேனில் தேக்கிய செஞ்சொற்பெருமழை பொழிந்து வரவேற்றார் நிகழ்ச்சி நிரலிற் குறித்தாங்கு வணக்கமும் வாழ்த்தும் அறிக்கையும வரவேற்பும் வளம்பெற முடிந்தன விழாத்தலைவர் குறிப்பின்படி, நாவலர் ச. சோமசுந்தரபாரதியார், சங்கத் தலைவராம், உமா மகேசுவரனாருக்குத் 'தமிழவேள்' என்னும் பட்டமொன்று வழங்கப்

பெறுகிறதென முன்மொழிந்தார்; பலர் வழிமொழிய அப்பட்டம் வழங்கப்பெற்றது.*

**கரந்தைக் கவியரசு**

பின்னர்ப் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், இச்சங்கந் தோன்றிய நாள்தொட்டு அமைச்சராய்த் தொண்டாற்றியதோடு, செந்தமிழ்த் தீஞ்சொற்களாகிய இன்கவித் தொண்டு புரிந்த ஆர். வேங்கடாசலம் பிள்ளையவர்கட்குக் 'கரந்தைக் கவியரசு' என்னும் தமிழியற் பட்டமொன்று இவ்விழாப் பேரவைப் பெருமக்களால் வழங்கப் பெறுகிறதென முன் மொழிந்தார். அப்போது, அவர் ''கரந்தைக் கவியரசு, பிள்ளையவர்களின் கவிநலம் கூறுமிடத்து இக்காலத்து, நிலவும் தமிழ்ச் சந்தப்பாக்கள் பலவும் வடசொற்களே பரவியிருக்கின்றன; தூய தமிழ்ச்சொற்களாவன இல்லை. என்னையும் பலர் சந்தப்பாக்கள் ஆக்க வேண்டுமென்பர்; யானும் தூய தமிழ்ச்சொற்களால் சந்தப்பாக்கள் அமைக்க முயன்றதுண்டு; ஆனால், யான் அத்துறையில் தோல்வி யடைந்ததேயன்றி அதுமுடியாது என்ற துணிவும் கொண்டேன். நம் திரு. வேங்கடாசலம்பிள்ளையவர்கள் தூய தமிழ்ச் சொற்களால் எல்லா அழகும் நிரம்ப அமைந்த சந்தப்பாக்கள் பல செய்திருக்கின்றார்'' என்று கூறினார். கரந்தையைச் சார்ந்து இனிய கவிகளியற்றி வரும் பிள்ளையவர்கட்கு வெள்ளியின் மறுபெயராகிய 'கவி' என்னும் பெயரோடு சார்ந்த பட்டமளித்தல் புலமைக்கும் நாளுக்கும் ஒத்திருக்கிறதென்று கூறி வாழ்த்தினார்.

பிறகு பண்டித, ந.மு. வேங்கடசாமி நாட்டார், சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆகியோர் வேங்கடாசலம் பிள்ளையின் கவித் திறனைப் பலவாறு பாராட்டிப் பேசினர். தலைமை தாங்கிய அடிகளார், பிள்ளையவர்களை வாழ்த்திய போது, அவர் இயற்றியுள்ள ஆசானாற்றுப்படை, தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்புப் பாக்கள் முதலியவற்றின் பல்வகை நயங்களைப் பாராட்டிக் கூறுமாற்றால் அவர்தம் தகுதிப்பாட்டினைத் தீவிய சொற்களால் நன்கு விளக்கி அதற்கு அறிகுறியாகப் பொற்பதக்கத்தால் அணி செய்யப் பெற்ற 'கரந்தைக் கவியரசு' எனும் பட்டத்தை வழங்கினார்.

வெள்ளிவிழாவின் நினைவுமலராகப் புலமைமிக்க அறிஞர்கள் எழுதி உதவிய கட்டுரைகளைத் தொகுத்து இலக்கியப் பூங்கொத்து

---

* *இதன் விரிவைத் 'தமிழவேள் என்னும் தகவுறு தலைவர்' என்னும் தலைப்பில் காணலாம்.*

என மிளிரும் 'கரந்தைக் கட்டுரை' எனும் நூலைச் சங்கத்தார் வெளியிட்டனர். புலவர் க வெள்ளைவாரணனார், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோர் சிறந்த விரிவுரைகளாற்றினர். இரவில் 'திருநாளைப் போவார்' எனும் நாடகமும் நடத்தப்பெற்றது.

## புலவர் கல்லூரித் தோற்றம்

16-4-1938 சனிக்கிழமையன்று காலையில் அடிகளார் தலைமையில் வெள்ளிவிழாவின்போது இரண்டாம நாள் நிகழ்ச்சி தொடங்கியது அன்றைய விழாவில் குறிப்பிடத்தக்கது. 'கரந்தைத் தமிழ்க் கல்லூரி'யின திறப்புவிழா நிகழ்ச்சியாகும சங்கததலைவா தமிழவேள் உமாமகேசுவரனார், கல்லூரியின் குறிக்கோள்களைக் குறித்துப் பேசுமிடத்துப் பின்வரும் கருத்துககளை வெளியிடடார்

"(1) தமிழிற்கெனத் தனியே அமைககப்படும் இககல்லூரியில், சென்னைப்பலகலைக் கழகத்தார் ஏற்படுததியிருககும புகுமுகம், முதனிலை, இறுதிநிலை எனற தேர்வுகட்கு மாணவர்கள் தமிழ் பயிற்றப் பெறுவர்

(2) குறைந்தது நான்காவது படிவமாவது கற்றுள்ள மாணவர்களே இக் கல்லூரியிற் சேர்க்கப்பெறும் தகுதியுடையவராவர்

(3) தனித் தமிழேயன்றி, மருத்துவம், இசை, ஓவியம், கைத்தொழில் முதலியவை துணைப்பாடமாகக் கற்பிக்கப் பெறும்

(4) மாணவர்கட்கு உண்டியும் உறையுளும் பிறகலவி நலங்களும் அளிக்கப்பெறும்

(5) மாணவர்கள் ஐந்தாண்டுகள் கலலூரிப் பயிறசி பெறறுத் தேறியபின், இரண்டாண்டுகள சிற்றூர்த்தொண்டில் பயிற்சி பெறுவர்

(6) இக்கல்லூரியிற் பயின்று வித்துவான் பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்கள், ஆசிரியர்களாவதொன்றையே நாடாது, வேறு தத்தமக்கேற்ற தொழில் ஒனறினைத திறமபட மேற்கொண்டு தன்மதிப்புடன் வாழ்க்கை நடத்துபவர்களாதல் வேண்டும்

(7) வரும் 1939-ஆம ஆண்டு புகுமுகத தேர்வுக்கு ஏறத்தாழ முப்பது மாணவாகளைச் சோத்துப் பயிற்சி தந்து, தேர்வுக் கனுப்புதல் வேண்டும்

இன்னோரன்ன சீரிய கருத்துக்களை மேற்கொண்டு தொடங்கும் இக்கல்லூரிக்கு அருட்செல்வர்கள் முன் நின்று பொருளுதவி புரியவேண்டும்!''

இவ்வாறு தமிழவேள் உமாமகேசுவரனார் எடுத்துரைத்த பின், தென்னார்க்காடு மாவட்டக் கல்வித்தலைவர் சச்சிதானந்தம் பிள்ளை, தமிழரல்லாதார்க்கும் நம் தமிழ்மொழிக்கண் ஆர்வமும் அதன் வளர்ச்சிக்கண் பேருக்கமும் கிளர்ந்தெழுமாறு தமது திறப்புப் பெருமொழியினைச் செய்து முடித்தார். பின்னர் இக்கல்லூரித் திறப்புப் பொருளாகத் திருச்சி, திவான்பகதூர் டி.எம். நாராயணசாமிப்பிள்ளை, திருவையாற்று அரசர் கல்லூரித் தலைவர் சுப்பிரமணிய சாத்திரியார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, தென்னூர்ப் பொறி வல்லுநர் பொன்னுசாமிப் பிள்ளை, சாத்தூர் வழக்கறிஞர் தூ சு கந்தசாமி முதலியார், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், நாவலர் நாட்டார், சேதுப்பிள்ளை ஆகிய தமிழ்ப் பெருமக்கள், கல்லூரியின் இன்றியமையாமை, இக்கால நிலைக்கேற்பத் தமிழர் வாழ்க்கை திருத்த வேண்டிய நெறி, தமிழ் கற்பித்தற்குரிய முறை, அம்முறை அறிதற்குரிய பயிற்சி முதலிய பொருள்களை வற்புறுத்தினராக, அடிகளார் அவர்தம் பொருளுரைகளை அழகுமிகத் திரட்டி, கல்லூரியைத் திறந்தருளினார். அப்போது, நாவலர் ந.மு.வே. நாட்டார்,

> *''நன்மா ணவராகும் வண்டர் நனிபயின்று*
> *பன்மாண் கலைத்தேன் பருகுமா — மண்மாண்*
> *கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரிப் பூங்காப்*
> *பரந்தொளிர்ந்து வாழியர்இப் பார்''*

எனப் பாடி வாழ்த்தினார்.

கல்லூரிக் கட்டிடத்தில் எழுந்தருளப் பெற்றிருந்த தமிழ்க் கடவுளாகிய முருகன் திருவுருவத்துக்கு வழிபாடியற்றப் பெற்றது. வித்துவான் வெள்ளை வாரணனாரை ஆசிரியராக நிறுத்தி, அது– போது கூடியிருந்த மாணவர்க்குத் தமிழ் கற்பிக்கத் தொடங்குமாறு பணித்தலும், அவர் நம் தெய்வப்புலவர் திருவள்ளுவர் வழங்கிய திருக்குறளின் தலைக்குறளாகிய 'அகரமுதல' என்னும் அருமைத் திருக்குறளைக் கற்பித்தார். பின்னர் அடிகளார், புதிதாய்த் தோன்றிய கல்லூரியை வாழ்த்தி, அகர முதலவெனத் தொடங்கும் திருக்குறளின் பருப்பொருளும், நுண்பொருளும் இனிது விளக்கினார்.

வேலூர் வே. ஆழ்வார் இராமாநுச நாயகியார், ந.மு.வே நாட்டார், மு கதிரேசச் செட்டியார் ஆகியோர் சொற்பெருக்காற்றினர்

அடிகளார் முடிப்புரைக்குப் பின் திருவனந்தபுரம் டி. இலக்குமணப் பிள்ளையின் இசைநிகழ்ச்சி நடந்தது. விழா முடிவுற்றது

வெள்ளிவிழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சி 17-4-1938 ஞாயிற்றுக்கிழமையன்று காலையில் தொடங்கியது. தோரமங்கலம் புலவரேறு அ. வரதநஞ்சயபிள்ளை, 'தமிழரசி குறவஞ்சி' எனத்தாம் இயற்றிய சீரிய கூரிய தீந்தமிழ்ச் சொற்களாற் றொடுக்கப்பெற்ற இன்னிசைச் செய்யுணூலை அரங்கேற்றம் செய்தார். குறவஞ்சி நூலின் பாட்டினங்களை வித்துவான் பொன்னுசாமி முதலியார், தமது இனிய தீங்குரலெடுத்துச் சந்தமுறப்பாடிவர ஆசிரியர் அப்பாக்களின் பொருள் நலங்களைத் தம் கண்ணினும் மொழியினும் எண்மையின் விளங்க எடுத்துக் காட்டினர்.

பின்னர்த் துடிசைகிழார் அ. சிதம்பரனார், பெரியபுராண உரையாசிரியர் சி.கே சுப்பிரமணிய முதலியார், பெருஞ்சொல் விளக்கனார் அ.மு சரவண முதலியார், சேதுப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தலைமைப் பெருமைமிகக அடிகளாரின் முடிப்புரை, மன்றத்தின் அகத்தும் புறத்தும் குழுமியிருந்த பெருமக்களின் செவிப்புலம் புகுந்து, மனவயலைத் தோய்ந்து, அறிவுப் பைங்கூழ்க்கு ஆக்கம் தந்தது. முடிவில் சங்க அமைச்சர் நீ கந்தசாமி பிள்ளை நன்றி கூறியபின், சங்கமாணவர் 'கரிகாலன்' என்ற நாடகம் நடிக்க வெள்ளிவிழா, அனைவரும் வியந்து போற்றும் வண்ணம் இனிது முடிந்தது.

## தமிழ்ப் புலவர் கல்லூரி

தமிழவேள் உமாமகேசுவரனாரின் இடையறா உழைப்பின் பயனாய் வெள்ளிவிழாவின் இரண்டாம் நாளாகிய 16-4-1938இல் அருட்டிரு ஞானியாரடிகள் தலைமையில் தோற்றுவிக்கப் பெற்ற 'கரந்தைப் புலவர் கல்லூரி' கோடை விடுமுறைக்குப் பின் 30-6-1938 முதலே செயல்படத் தொடங்கிற்று. அவ்வாண்டு, கல்லூரியில் வித்துவான் முதல் வகுப்புக்குரிய பாடங்கள் மட்டுமே சொல்லிக் கொடுக்கப்பெற்றன.

என்றும் நிலைத்த அளவில் கல்லூரி ஒன்றைச் செயற்படுத்த வேண்டுமானால் போதிய பொருள் வருவாய் வேண்டுமன்றோ? சங்கத்தை நடத்துவதற்கே போதிய பொருள் இல்லாதபோது, கல்லூரியை நடத்துதல் எங்ஙனங்கூடும்? ஆனால், தொடங்கிய பணியை இடையில் நிறுத்தி விடுதல் இழுக்கன்றோ?

உள்ளமுரமுடைய உமாமகேசுவரனார், கீழ்க்கண்ட விண்ணப்பத்தைத் தமிழ்ப் பெருமக்களுக்கு விடுத்தார்:

''கரந்தைத் தமிழ்ச்சங்கம் இதுபோது தமிழ்நாடு முற்றுமே மதிக்கத்தகும் அரும்பணியை மேற்கொண்டிருக்கிறது. கரந்தைத் தமிழ்க் கல்லூரி, முதல்வகுப்புடன் அரும்பியிருக்கின்றது. மேலும் நான்கு வகுப்புகள் நாளடைவிற்றோன்றி முற்றுப்பெற வேண்டிய நிலையிலிருக்கின்றது. இதன் இன்றியமையாத அங்கங்களாகிய இசை, ஓவியம், மருத்துவம், சிற்பம் போன்ற தொழிற் கலைகளும் ஈண்டு முகிழ்த்துப் பிஞ்சு, காய், கனிகளாகிய நற்பயன் நல்க வேண்டும் இவ்வெண்ணங்கள் சிறு அளவிலாவது உருப்பெற வேண்டுமானால் நூறுமாணவர்க்காகிலும் உண்டியும் உறையுளும் தருதற்கான மாணவர் இல்லமும், பத்து ஆசிரியர்களாகிலும் பணி செய்தற்குரிய வசதிகளும் அமைக்கப்பட வேண்டும் ஆண்டுதோறும் ரூபாய் ஐயாயிரத்திற்குக் குறையாத வருவாய் தட்டில்லாது வந்துகொண்டே இருத்தல் வேண்டும். இதுபோது தொடங்கியிருக்கும் முதல் வகுப்பில் பதினைந்து மாணவர்கள் சேர்ந்திருக்கின்றனர். திருச்சி, நெல்லை, கோவை, வடதென் ஆர்க்காடுகள் ஆய பிற மாவட்டங்களிலிருந்து வந்தவர் ஒன்பதின்மர் ஆவர். யாழ்ப்பாணத்து மாணவர் ஒருவர் வருவரென எதிர்பார்க்கப்படுகின்றது மலேயா நாட்டிலிருந்தும் விண்ணப்பம் வந்துள்ளது. இவர்களில் பன்னிரு மாணவர்கள் சங்கத்தார் அமைத்திருக்கும் இல்லத்தே இருந்தும், ஏனோர் வெளியே இருந்தும் கல்வி பயின்று வருகின்றனர். இதனை உய்த்து நோக்குவோர் இக்கல்லூரி தமிழ்நாட்டிற்கே உரியதொன்றெனவும், இதனைப் பேணி வளர்த்தல் தத்தம் கடமை எனவும் தமிழன்பர்கள் கருதுவர் என்று எண்ணுகிறோம்.

''தமிழ்ப்புலமையும் தொழிற்கலையும் ஒருங்கே பயிற்றப்படும் கல்விமுறை சாலச்சிறந்த நன்முயற்சியாம். இம்முயற்சி உரம்பெறு தற்கு இலக்கிய இலக்கண நூல்களேயன்றிக் கலைநூல்களையும் தமிழில் எளிய விலைக்கு வெளியிடுதல் வேண்டும். இத்தகைய பொறுப்புள்ள வேலைகளை மேற்கொள்ளவும், செவ்வனம் இயற்றவும் அறிவாளிகள், செல்வர்கள், அன்பர்கள் ஆகிய அனைவரின் துணையும் இன்றியமையாது வேண்டப்படுகிறது''.

## மற்றுமொரு விண்ணப்பம்

இவ்வேண்டுகோள் விரும்பியவண்ணம் பயனளிக்கவில்லை யாயினும், கல்லூரி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் வந்தது

கோடை விடுமுறைக்குப்பின் (1940–41) கல்லூரி இயங்க முடியாதவாறு பேரிடர் வந்துற்றது. கல்லூரிக்கென ஐம்பதாயிரம் ரூபாய் பெருமான முதற்பொருள் இன்மையின், சென்னைப்பல்கலைக் கழகத்தின் இணைப்புப் பெறமுடியாதாயிற்று. எனவே, இக்கல்லூரியிற் பயின்று கொண்டிருந்த மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வு எழுதுவதற்குத் தகுதியற்றவராயினர்! மாணவர் மனமுடைந்தனர்; திக்குக்கொருவராகச் சிதைந்து விட்டனர்; சிலர் தொழிலில் அமர்ந்தனர்; சிலர் வேலையின்றி வாளாவிருந்தனர். கல்லூரி வாழ்வில் இருள் சூழத் தலைப்பட்டது, எண்ணியன முடிக்கும் அண்ணலாரான உமாமகேசுவரனார் மட்டும் மனம் தளர்ந்தாரிலர்.

''இச்செந்தமிழ்க் கல்லூரிக்குப் போதிய முதற்பொருள் இன்மையான் சென்னைப்பல்கலைக் கழகத்தார் ஒப்ப மறுக்கின்றனர். தமிழ்நாட்டின் எல்லைக்குள் ஆங்கிலம் போன்ற பிறமொழிகளின் வளர்ச்சியைக்கருதி உழைக்கும் கலைக்கூடங்கள் எத்தனை? அவற்றிற்காகப் பணி செய்து செழுமையுடன் தருக்குற்றுவாழும் கணக்காயர் எத்துணையர்? இந்நிலையில் தமிழ்மொழி ஒதுக்கிடம் பெறுவதும், தமிழ்ப்புலவர்கள் வீணர்கட்கு எளியராய் அஞ்சி வாழ்வதும் இழிவன்றோ? தமிழ்மக்கள் இப் புலவர் கல்லூரிக்குப் பொருளுதவி புரிந்து தம் கடனாற்றுவார்களாக!'' என்ற விண்ணப்பத்தை விடுத்தார்!

## செயலாற்றும் கல்லூரி

இதனோடு நின்றுவிடாமல் சென்னைப் பல்கலைக்கழகத்திற்குத் தம் கல்லூரி நிலையை விளக்கி முடங்கல் ஒன்றினை விடுத்தார் உமாமகேசுவரனார் இவரது அயரா முயற்சியால் 1941–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில், சென்னைப் பல்கலைக் கழகத்தார் இக்கல்லூரியை ஏற்றுக் கொண்டு, தனித்தமிழ் வித்துவான் தேர்வுக்குப் பயிற்றுதற்குரிய ஒப்புதலைத் தந்தனர். 'கல்லூரிக்குப் புத்துயிர் வந்தது, கவலை விட்டது!' என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையில், காலன் என்னும் கண்ணிலி, கன்னித் தமிழ்க்காவலர் உமாமகேசுவரனாரின் அரிய உயிரை எவருமறியாமற் கவர்ந்து கொண்டுவிட்டான்! எனினும் தமிழ்த்தாயின் தண்ணருளால் கல்லூரி செயல்படத் தொடங்கிற்று.

பல்கலைக்கழகத்தோடு இப்புலவர் கல்லூரி இணைந்தபிறகு 1942 முதல் வித்துவான் புகுமுகத்தேர்விலும், 1943 முதல் முதனிலைத் தேர்விலும், 1945 முதல் இறுதி நிலைத் தேர்விலும், மாணவர் கலந்து கொள்ளலாயினர் இறுதி நிலைத் தேர்வில் முதன்

முதலாகச் சென்ற கல்லூரி மாணவர் அறுவரும் ஒருங்கே வெற்றிபெற்றனர். இங்குப் படித்தவர்களில் அ.மா. பரிமணம் என்பாரும், இரா. கலியபெருமாள் என்பாரும் வித்துவான் இறுதி நிலைத்தேர்வில் முதல்வகுப்பில் முதல் தரத்தில் தேறி ஓராயிரம் ரூபாய்ப் பரிசைப் பெற்றுள்ளார்கள் என்றால் இக்கல்லூரியின் தகுதிப்பாட்டை எங்ஙனம் எடுத்துரைப்பது? மேலும் புலவர் இராமநாதனும், வித்துவான் மாயாண்டி பாரதியும் இக்கல்லூரியிற் பயின்று, முதல்வகுப்பில் வெற்றிபெற்ற சிறப்புக்குரியராவர்!

1945ஆம் ஆண்டுமுதல் இக் கல்லூரியின் பெருமையைத் தமிழகம் உணரத் தலைப்பட்டது. எனினும் போதிய வருவாய் இன்றியே நடந்து வந்தது. அப்போது இக்கல்லூரியிற் பயின்ற மாணவர்தொகை எண்பத்துமூன்றாகும். இம்மாணவர்கள் சாதி, சமய வேறுபாடின்றி, எல்லாரும் தமிழ்க்குடியினரே எனும் எண்ணத்தால் ஒன்றி உறைவாராயினர். இக்கல்லூரியாலாம் பயனைத் தமிழக முழுமையுமுள்ள மக்கள் துய்த்துக் கொண்டிருந்தனர் என்று கூறலாம். தேர்விற்குச் செல்வோரும், நூற்றுக்கு நூறு பேரும் தொண்ணூற்றொன்பதின்மரும் தேர்ச்சி பெற்றே வந்தனர். அக்காலையில், இக் கல்லூரியைக் கண்காணித்தற்கெனப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரறிஞர் ஏ. இலக்குமணசாமி முதலியார் வந்தபோது சங்கத் தலைவர் இராவ்சாகிப் ஐ. குமாரசாமிப்பிள்ளை, சங்கத்திற்குற்ற பொருள் முட்டுப்பாட்டால் கரந்தைப் புலவர் கல்லூரிக்கெனத் தனிக் கட்டிடம் அமைக்க இயலவில்லை என இரங்கிக் கூறினார். அதற்குத் துணைவேந்தர், ''பெருஞ்செல்வர்களும், பெருநிலக்கிழார்களும் குறுநில மன்னர்களும் குழுமி வசதியும் இத் தஞ்சை மாநாட்டில் நாட்டப் பெற்றுள்ள தமிழ்ப்புலவர் கல்லூரியொன்று சிறப்புற வளர்ந்தோங்க ஈண்டுள்ளோர் பொருள் உதவி புரிந்து புரக்காதிருக்கின்றனர் என்பதனைக் கேட்க யான் வியப்பும், வருத்தமும் அடைகின்றேன். எதிர்காலத்திலேனும் இச் செல்வர்களின் ஆதரவைப் பெற்று, இக்கல்லூரி சிறந்தோங்க வேண்டுமென வேண்டுகிறேன்'' என்றார்.

ஆனால், இவ்வேண்டுகோள் பதினைந்தாண்டுகள் கழித்தே பயனளித்தது. கல்லூரிக்கெனத் தனிக்கட்டிடம் ஒன்று தஞ்சைப் பெருவணிகர் முயற்சியால் கட்டப்பெற்றுள்ளது. இத்தகு கல்லூரியைத் தோற்றுவித்த தமிழவேள் உமாமகேசுவரனார் இன்று நம்மிடையே இல்லாவிடினும் ஆண்டுதோறும் இக்கல்லூரியினின்று வெளியேறும்

நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர் – தமிழ்ப்புலவர் உள்ளங்களி லெல்லாம் உலவிக்கொண்டிருக்கிறார் என்பதில் ஐயமுண்டோ?

இப்புலவர் கல்லூரி தவிரத் தற்போது இராதாகிருட்டிணர் உயர் தொடக்கப்பள்ளி ஒன்று நன்முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்தொடக்கப்பள்ளியோடு தொடர்புடைய ஓர் உயர்நிலைப்பள்ளியும் இருத்தல் நலம் எனக்கருதிய தமிழவேள் உமாமகேசுவரனார் அதற்கான முயற்சிகள் அனைத்தும் செய்து அரசினர் ஒப்புதலும் பெற்றார். ஆனால், இவ்வுயர் நிலைப்பள்ளி செயல்படுவதற்கு முன் உமாமகேசுவரனார் இறந்து விட்டார்! இவர்தம் மறைவுக்குப் பின் இவருடைய பெயராலேயே 'உமாமகேசுவரர் உயர்நிலைப்பள்ளி' தோற்றம் பெற்றுத் தற்போது மேனிலைப்பள்ளியாக மேன்மை பெற்று விளங்குகினறது

## தமிழவேளின் அருஞ்செயல்கள்

இத்துணை அரிய செயல்களைச் செய்து, இன்று தமிழகத் திலேயே தலைசிறந்த தமிழ் நிலையமாக இச்சங்கம் திகழ்வதற்கு முதற்காரணராயிருந்தவர் தமிழவேள் உமாமகேசுவரனாரே யாவர்! சங்கத்தைத் தோற்றுவித்தவர் இராதாகிருட்டிண பிள்ளையேயாயினும், தொடக்க கால முதற்கொண்டு வாழ்வின் இறுதிக்காலம் வரையிலும், எண்ணம், சொல், செயல இம்மூன்றாலும் இச்சங்கத்திற்காகப் பாடுபட்டுத் தம் இன்னுயிரைத் துறந்தவர் சங்கத்தலைவர் உமாமகேசுவரனாரே யாவர்!

சங்கம் இப்பொழுது ஆற்றிவரும் பணிகளைவிட உமாமகேசுவர–னார் உள்ள காலத்து ஆற்றிய பணிகளே மேலானவை; சிறந்தவை, பெரும் பயனளித்தவை! பேச்செல்லாம் தமிழ்ப்பேச்சாக மூச்செல்லாம் தமிழ்மூச்சாகத் தமிழ்ப்பணிக்கே செலவிட்ட உமாமகேசுவரனாரால் இச்சங்கம் ஆற்றிய செயலகள் எண்ணிறந்தனவாகும் அவற்றின் சுருக்கமாகச் சில சொல்லலாம்

கடந்த கால் நூற்றாண்டில் தாய்மொழியின் நிலைமையும், தரமும் பல துறைகளிலும் பல படித்தானும், சீரும் செப்பமும அடைந்துள்ளனவென்றால், அதற்குக் காரணம் நீறுபூத்த நெருபபுப் போல ஆரவாரமின்றி இச்சங்கம் தன்னிலை திரியாது ஐம்பது ஆண்டுகளாகப பலதுறைகளிலும் ஆற்றிவரும் தொணடுகளேயாகும் எனக்கூறுதல் மிகையாகாது கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ்மொழிக்கும், தமிழ்மக்களுக்கும் ஏறபட்ட பறபல துனபமான

காலத்தும், தலைநிமிர்ந்து நின்று, தமிழ் உரிமைகளையும், தமிழர் உரிமைகளையும் காத்துக் கொடுத்தது இச்சங்கம். பண்டு மதுரை நகரில் நடந்த தமிழ்ச்சங்கங்கட்குப் பிறகு, முறையாகத் தக்க கரத்தில் தன்கன்னித்தன்மை மாறாது தமிழன்னை வளர்கின்றாள் என்பதை இச்சங்கமேடையிற் காணலாம். தமிழ்மொழி, தன் வளப்பத்திலும், தூய்மை, சிறப்பு முதலியவற்றிலும் குன்றாது மிளிர்வது இங்கே காணலாம். ஆதலின் தமிழ்நாட்டுப் பலப்பல சங்கங்கட்கும், தொன்மையிலும் குறையாதது இச்சங்கம் எனலாம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவர்க்கு அளிக்கப்பெற்ற 'வித்துவான்' என்ற பட்டத்தை மாற்றித் தனித்தமிழ்ப் பெயராய்ப் 'புலவர்' என்ற பட்டத்தை வழங்கும் வண்ணம் அப்பல்கலைக் கழகப் பேரவையில் சிறந்த முடிவினைக் கொண்டு போய்த் தமிழ்மொழி பயின்றோர்க்குப் பிற மொழிப் பட்டமளித்தல் கூடாதென வாதிட்டது இச்சங்கமேயாகும். ''ஆந்திரர் தங்கள் மொழிக்கெனத் தனிப் பல்கலைக் கழகம் கண்டாற்போல, வங்காளிகள் தங்கள் மொழிக்கெனத் தனிப் பல்கலைக் கழகம் பெற்றாற்போல, உசுமானியர் தங்கள் மொழிக்கென உசுமானியப் பல்கலைக்கழகம் கண்டாற்போலத் தமிழரும் தங்கள் மொழிக்கென ஒரு தனிப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்து நடத்த வேண்டும்'' என முழக்கமிட்டது இச்சங்கமேயாகும். அன்று தமிழவேள் கண்ட கனவு, நீண்ட காலத்திற்குப் பின் பலித்தது; தஞ்சையில் 'தமிழ்ப் பல்கலைக்கழகம்' உருவாயது. சுருங்கச் சொன்னால், இப்பகுதியின் தொடக்கத்திற்கூறியவாறு, தமிழன் தமிழனாகவே வாழவும் தனித்தமிழுணர்ச்சியும் நாட்டு உணர்ச்சியும் கொண்டவனாக விளங்கவும் பாடுபட்ட ஒரே தமிழ்ச் சங்கம் 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' ஆகும்!

தமிழவேளின் அருஞ்செயல்கள் குறித்துக் கரந்தை, சிவ சண்முக சுந்தரம் கூறுவது இவண் குறிக்கத்தகும்:

''தமிழ் நாடெங்கணும் குடத்துள் விளக்குப் போல் கிடந்த புலவர்களையெல்லாம் தேடி, இச்சங்கத்துக்கு அழைத்தார்கள்; சொற்பொழிவுகள் செய்வித்தார்கள்; தமிழ்ப் பெரும் புலவர்கள் கூடுவதற்குக் கரந்தைத் தமிழ்ச்சங்கம், பெருமன்றமாயிற்று. தமிழைத் தமிழர்களே கல்லாமற் புறக்கணித்த காலத்தில், தமிழிற் பேசுவதே குறைவு என்ற கருத்து வேரூன்றத் தலைப்பட்ட காலத்தில், அழகிய பொருள் பொதிந்த தமிழ்ச்சொற்களைப் போக்கி வடசொற்கள்

அவற்றின் இடங்களைக் கைப்பற்றித் தமிழைச் சிதைத்து வந்த காலத்தில் இக்கரந்தைத் தமிழ்ச்சங்கம், தமிழ் மக்கள்மாட்டு ஒரு புரட்சியை உண்டாக்கியது தமிழிற் சொற்பொழிவாற்றிப் பழக்கமில்லாதவர்கள் வருந்திக், கூடியுள்ள மக்களின் மன்னிப்பைக் கோரியாக வேண்டிய நிலை, தமிழ்நாட்டில் ஏற்பட்டது வடமொழிச் சொற்களைக் கலந்து பேசுவது குறைவானதாகவும், குற்றமானதாகவும் கருதப்படலாயிற்று தனித்தமிழ் நடை சிறப்பிக்கப்படலாயிற்று தனித்தமிழ் நடைக்குக் 'கரந்தை நடை' என்றே பெயராயிற்று! ஒரு சில புலவர்களே அறிந்திருந்த சங்க இலக்கியங்களைத் தமிழ்மக்கள் அறியவும் பயிலவும் செய்தது பன்மொழிப் புலவர்களான திருவாளர்கள் மாணிக்கவேல் நாயக்கர், சோமசுந்தர பாரதியார், மறைமலையடிகள் முதலியவர்கள் தமிழ் இலக்கியங்களைப் பயிலும் முறையில் மாறுதலை உண்டு பண்ணினார்கள் இலக்கியங்களுக்கு உரையாசிரியர்கள் எழுதி வைத்துள்ள உரைகளை அப்படியே உட்கொண்டு வெளியிடும் முறைக்கு விடை கொடுத்தார்கள் மூலங்களுக்குச் சரியானதுதானா உரை என்பதைச் சிநதித்து ஏற்கவோ தள்ளவோ செய்யலாம் என்ற உரிமையை எடுத்துக் காட்டினார்கள் உரைகளைப் பயபக்தியோடு ஏற்றுக்கொள்ளும் முறை ஒழிந்து, ஆராய்ச்சிமுறை தமிழுலகத்தே எழுநதது கரந்தைத் தமிழ்ப் பெருமன்றம் இத்தகைய புரட்சிக்கு நல்லாதரவு தந்து வளர்த்தது!''

கடவுளாகிய உமாமகேசுவரர், கழகமோடு அமர்ந்து, பைந்தமிழை ஆய்ந்த பான்மை போலத் 'தமிழவேள்' உமா மகேசுவரனாரும், கரந்தைத் தமிழ்ச்சங்கததின் தனிப்பெருந்தலைவராக அமர்ந்து தண்டமிழை வளர்த்தார் எனின அது மிகையாகாது!

# 5

# நற்றமிழ் நாவலர்

உலகின்கண் விளங்கும் உயர்கலைகள் பலவாகும். அவற்றுள் ஒன்று பேச்சுக்கலை. கற்றல் எளிது; கற்றவற்றைப் பிறர்க்கு மொழிதல் அரிது; அங்ஙனம் மொழியுங்காலும், கேட்டார்ப் பிணிக்கவும், கேளாரும் வேட்பவும் மொழிதல் அதனினும் அரிது! அவ்வருமைப்– பாட்டின் திறன் உணர்ந்தே திருவள்ளுவர் 'நாநலம்' என்று இதனை நன்கு மொழிவாராயினர். அம்மட்டோடு அவர் நின்றாரிலர்; "நலங்கள் பலவற்றுள்ளும் மேலானது நாநலம்; இதனை நன்கமையப் பெற்றார்தம் சொல்வழியேதான் இவ்வுலகமும் இயங்கும்; பல நூல்களை நன்றாகக் கற்றறிந்து பிறர்க்கு எடுத்துச்சொல்ல முடியாதார், மலர்ந்தும் மணந்தாரா மலரையொப்பர்" என்றெல்லாம் சொல்வன்மை என்ற தலைப்பில் பலபடக் கூறுகின்றார். இத்தகு நாநலம் பெற்றவரையே 'நாவலர்' என நந்தமிழறிஞர் போற்றிப் புகழ்வர்.

தமிழகத்தில் நாவலர் பலர் அவ்வப்போது தோன்றி நமது தமிழ்மொழிக்கு ஆக்கமும் ஆதரவும் தந்துள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்க பெருமை சான்ற தலைவர்களில் நம் உமா மகேசுவரனாரும் ஒருவர்.

இவரது நாவன்மை குறித்து 'வழக்குத் தொழில் வித்தகர்' என்ற தலைப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## நற்றமிழ் நாவலர்

உமாமகேசுவரனார் சிறந்த நாவலராக விளங்குதற்கு வழக்கறிஞர் தொழில் காரணமாயமைந்தது போலவே, கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைமைப் பொறுப்பும் காரணமாயமைந்தது எனலாம். முன்னது ஆங்கிலப் பேச்சாற்றலுக்கும், பின்னது தமிழ்ப் பேச்சாற்றலுக்கும் பெருந்துணை புரிந்தன.

கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைமைப்பொறுப்பேற்ற பின்னர்ப் பல தமிழ்க் கூட்டங்களில் இவர் பேசவேண்டிய நிலை வந்துற்றது.

இதனால், இவர்பால் இயற்கையாகவே அமைந்திருந்த நல்ல தமிழறிவு மேலும் பெருகத் தலைப்பட்டது. சங்க கால இலக்கியம் முதல் பிற்கால இலக்கியம் வரையிலும் தாமே முறையாகக் கற்றுக்கொண்டார். போதிய புலமை பெற்றார்; மேடையில் தமிழ் முழக்கம் செய்து தமிழ் 'நாவலர்' ஆனார்.

தமிழ்மொழியில் சொற்பொழிவாற்றுவதில் ஒரு தனிநிலையை அடைந்திருந்தார் உமாமகேசுவரனார். எத்தகைய கருத்துக்களையும் பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் எவரும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் வகையிற் பேசுவதில் ஒரெடுத்துக்காட்டாகவே இவர் விளங்கினார். இவர் பேச்சுக்களெல்லாம் உண்மையும், உணர்ச்சியும் ததும்பியனவாகவே இருக்கும். தமிழுலகத்தில் எதற்கும் அஞ்சாத ஒரு வீரர் இவர் என்று இறுமாந்து இயம்பலாம்.

தமிழகத்தில் அக்காலையில் நடந்த பல்வேறு மாநாடுகளிலும், பிற கூட்டங்களிலும் உமாமகேசுவரனார் தலைமை தாங்கியும் வரவேற்புரை நிகழ்த்தியும், சொற்பெருக்காற்றியும், சிறந்த முடிபுகளை முன்மொழிந்து வழிகாட்டியும் – இன்னோரன்ன செயல்களால் 'பெருநாவலர்' என்னும் அருநிலையடைந்துள்ளார். அங்ஙனம் இவர் பேசிய பேச்சுக்கள் பல, குறிப்பெடுப்பார் இன்மையின் காற்றொடு கலந்து வீணே போயின. எனினும் சிற்சில குறிப்புகள் மட்டும் கிடைத்துள்ளன அவற்றுள் எடுத்துக்காட்டாக இரண்டைக் குறிக்கலாம்.

## தமிழர் மாநாட்டு வரவேற்புரை

தஞ்சை – திருச்சிராப்பள்ளி மாவட்டத் தமிழர் மாநாடு ஒன்று 7–8–1932–இல், துறையூரில் பெருஞ்சிறப்புடன் கொண்டாடப் பெற்றது. அதன் வரவேற்புரை தமிழவேள் உமாமகேசுவரனாருக்குக் கொடுக்கப்பெற்றது அப்போது அவர் ஆற்றிய பேருரையின் சுருக்கம் வருமாறு:

''மொழி வளத்தால் ஒருநாடு நன்னிலை பெறும்; மொழி வளங்குன்றின் வீழ்ச்சியுறும். தமிழ்மொழி பழமையானது; இலக்கண இலக்கியச் செறிவு மிக்கது. அரசரும் குடிகளும் தமிழைப் போற்றிப் புரந்தனர். அதுகாறும் அவர்கள் வெற்றிக்கு வீழ்ச்சியில்லை; பின்னர் அடிமை வாழ்வில் அகப்பட்டு மொழியை மறந்தனர்; மீளும் வகையின்றி ஆளாத் துயரில் உழல்கின்றனர். எனவே இவ்விழிநிலை மாறத் தமிழ் இலக்கியங்களையும், பிறநாட்டாரின் கலைத்திறனையும்

கற்று முன்னேற வேண்டும்; பட்டம் பெற்ற பட்டதாரிகளுள் பலர், தாம் கற்ற கலைத்திறனை, ஆங்கிலம் அறியாத கோடிக்கணக்கான மக்களுக்குப் பயன்படுமாறு செய்வதில்லை. நமது நாட்டுமக்கள் கல்வியில் முன்னேற வேண்டுமாயின், தம்நாட்டு மொழியிலேயே அனைத்தையும் கற்றல் வேண்டும். மேனாட்டினரும் வியக்கும் வண்ணம், சப்பானியர், மிகக்குறுகிய காலத்திற்குள்ளாகவே, மதி நலமும், படைவலமும், பொருள்வலமும் பெற்றுத்திகழ்வது, அவர்தம் நாட்டுமொழி அளித்த மதுகையேயாம்! தாய்மொழிப் பயிற்சியால் ஆங்கிலமொழித் திறன் குன்றிவிடுமென்று கூறுவது தவறுடைத்து. இசுலாமியா பல்கலைக்கழகத்தினர், தோற்றிய காலமுதல் அருங்கலையனைத்தையும் நாட்டு மொழியாகிய 'உருது'வில் மாணவர்க்குக் கற்றுத்தரும் தனிச்சிறப்பைப் பெற்றுள்ளனர். மற்றொரு சாரார், கலைநூல்களைக் கற்றுத்தரத் தாய்மொழியில் கருவி நூல்கள், மரபுச்சொற்கள், வாய்பாடுகள் இல்லையென்கின்றனர். ஆங்கிலத் திலும், தமிழிலும் புலமை மிக்க தமிழறிஞர் சிலரை ஒன்றுசேர்த்துப் பணவுதவி புரிந்தால் இக்குறைபாடு மிக எளிதில் நீங்கிவிடும்! கலைநூல்களைத் தாய்மொழியில் எழுதுவோர்க்குச் சிறந்த பரிசுகள் வழங்கப்படுமென விளம்பரம் செய்யின் எத்துணை நூல்கள் விரைவில் வெளிவருந்தெரியுமா? எனவே, குறைபாடுகளை நீக்கிவிட்டுத் தமிழ்மொழியில் ஆக்கம் பெறுதற்குரிய வழி வகைகளைக் காண வேண்டுவது தமிழர்களின் தலையாய கடமையாகும்!''

## தமிழர் மாநாட்டுத் தலைமையுரை

நெல்லைப்பாலம் இந்துக் கல்லூரி ஆங்கில மண்டபத்தில், 'சென்னை மாகாணத் தமிழர் முதலாவது மாநாடு' கூடிற்று தமிழவேள் உமாமகேசுவரனார், தலைமையேற்றுத் தம் தலைமைப் பெருஞ்சொல்லை நிகழ்த்தினார். அவ்வுரையின் சுருக்கம் வராறு:

''பழந்தமிழ்க் காலமுதல் வடசொற்களும், திசைச்சொற்களும் தமிழில் இன்றியமையாதவிடத்து வழங்கி வந்திருக்கின்றன. ஆனால், அவ்வாறு வந்திருக்கின்ற போது, அவை தமிழ் இயலுக்கு ஏற்ப உருமாறித் தொழில் புரிய வேண்டுமென்பது ஆன்றோர் வகுத்த தமிழ் மரபு. 'வடசொற் கிளவி வடவெழுத்தொரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே' என்பது நூற்பா. வடவெழுத்துக்களிற் பல, தமிழியலுக்கு முரண்படுதலின் அவற்றை நீக்கி எழுதுவதே முறையென மூதறிஞர் கண்டனர். வடசொற்கள் பெரிதும் வழங்கத்

தலைப்பட்ட பிற்காலத்திலும் இவ்வியலுக்கு மாறுபடா வண்ணம் நன்னூலார் வகுத்தனர் சங்க கால முதல் இதுகாறும் தோன்றி வரும் சிறந்த நூல்கள் யாவும் இம்மொழி மரபு வழுவாமல் பாதுகாத்து வருகின்றன! ஒரு சிலர், தமிழ் எழுத்திலக்கணத்தில் குறைபாடுகள் மலிந்துள்ளனவென்றும் அவற்றை அகற்ற வேண்டுமென்றும் கூறுகின்றனர். 'லார்டு கிரோமர்' என்ற ஆங்கிலப் புலவர், தம் மொழியின் எழுத்திலக்கணத்திற் காணப்பெறும் சில குறைகளைத் தொகுத்து ஒரு கவியில் விளக்கியுள்ளார் எனினும், ஆங்கில மொழியின் வளர்ச்சி சிறிதும் குன்றவில்லை! அச்சுக்கோப்பாரின் துன்பத்திற்காகச் சிலர், தமிழ் எழுத்துக்களிற் சிலவற்றை அகற்ற விரும்புகின்றனர். வேறு சிலர் 'f' என்ற ஆங்கில எழுத்தையும், தமிழில் இல்லாத பிறமொழி எழுத்துக்களையும் தமிழிற் சேர்க்கக் கருதுகின்றனர். இவை எம் மொழியாளரும் கைக்கொள்ளாதவை! வீரமாமுனிவர், போப்பையர் போன்ற அயல்நாட்டவர் கூட இவ்வாறு சொல்லத் துணியவில்லை! வடகலை, தென்கலை உணர்ந்த நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றோர், வடநூலார் கொள்கையில் அடிப்பட்டிருந்தும் தமிழ் மரபு இழுக்காவண்ணம் உரைநூல்கள் இயற்றினார்களே! ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் சீர்திருத்தம் செய்ய நிரம்ப இடமிருந்தும் அவற்றைத் திருத்தத் துணியாது, தமிழ்மொழியைத் திருத்துவோமென்பது பேதைமை யாகும்! கலைநூல்களில் வழங்கும் குறியீட்டுச் சொற்களுக்கு, ஏற்ற தமிழ்ச் சொற்கள், நூலிலோ வழக்கிலோ கிடைத்தால் அவற்றைப் பயன்படுத்த வேண்டும்; இல்லாதபோது. தமிழில் படைத்துக் கொள்ள வேண்டும்; இதுவும் இல்லாவிடில், தமிழ் மரபிற்கு ஏற்பத் திரித்து அமைக்க வேண்டும். ஆங்கிலேயர், அரிசி, இஞ்சி என்பவற்றை "Rice', "ginger' என ஆக்கிக் கொண்டனர் செர்மானியர், அறிவு நூற்பொருள்களைக் குறிப்பதற்கான சொற்களைத் தம் தாய்மொழியிலேயே ஆக்கிக்கொண்டனர் எனவே, இம்முறையைத் தமிழர்களும் பின்பற்றலாம்!''

தமிழவேள் உமாமகேசுவரனார் இத் தலைமை உரையில் கூறியன யாவும் இக்காலத்துக்குங்கூட எத்துணை ஏற்றனவாய், விழுமியனவாய் மிளிர்கின்றன என்பதை ஊன்றி நோக்குவார் உணர்தல் கூடும்.

## ஆங்கிலப் பேச்சாற்றல்

இவ்வாறு தமிழவேள் உமாமகேசுவரனார் ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் அழகுறப் பேசும் ஆற்றல் பெற்றதனோடமையாமல

ஆங்கிலப் பேச்சினை அழகு தமிழில் மொழிபெயர்த்துப் பேசும் ஆற்றலும் கொண்டு விளங்கினார் என்பதைப் பின்வரும் நிகழ்ச்சியால் அறியலாம்.

ஒருமுறை சென்னை மாநில ஆளுநர் மேதகு–ஆர்தர்கோப், தஞ்சை நகருக்கு வந்தபோது, 'இராமநாதஞ் செட்டியார்' மன்றத்'தில் ஆங்கிலத்தில் அரைமணிநேரம் விரிவுரையாற்றினார். அப்பேச்சினை மொழிபெயர்க்கும் பொறுப்பு உமாமகேசுவரனாருக்குக் கிடைத்தது. ஆளுநர், தம் உரை முழுவதையும் பேசிமுடித்தபின் உமாமகேசுவர–னார் எழுந்தார். அதே அரைமணிநேரத்தில், ஆளுநர் பேசிய முறையிலேயே, எவ்வெவ்விடங்களில் உணர்ச்சிததும்பப் பேசினாரோ, பாராட்டுதல்களைப் பெற்றாரோ, அவ்வவ்விடங்களில் உமாகேசுவரனாரும் உணர்ச்சியுடன் பேசிப் பாராட்டுதல்களை, ஆரவாரக் கை தட்டல்கள் முதலியவற்றைப் பெற்றார் எனின் இவர்தம் நாவன்மையை நாம் எந்நாவால் நவில்வது? எந்த வித மொழி மாறுபாடுமின்றித் தெளிவும், ஆற்றலும் பெறத் தூய தமிழில் இவர் பேசிய பேச்சினை வியவாதார் இலர். கூட்டமுடிவில் ஆளுநர் இவரைப் பலபடப் பாராட்டிச் சென்றார்.

**பிற கூட்டங்கள்**

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தார், தேசிக விநாயகம் பிள்ளைக்குக் 'கவிமணி' எனுங் கவினுறு பட்டம் தந்து சிறப்பித்தனரன்றோ? அஃது உமாமகேசுவரனார் தலைமையில்தான் வழங்கப்பெற்றது!

கொண்டல் போலப் பெருஞ் சொன்மழை பொழியும் பேராசிரியர் அ.மு. சரவணமுதலியார், திருச்சிராப்பள்ளிச் சைவ சித்தாந்த சங்கத்தில் இரண்டு ஆண்டுகளாகப் பெரியபுராண விரிவுரையாற்றியமைக்காக அவருக்குப் 'பெருஞ்சொல் விளக்கனார்' என்னும் பெருமைமிகு பட்டம் (5–12–1937–இல்) கொடுக்கப் பெற்றது அப்போது அவரைப் பாராட்டிப் பேருரை நிகழ்த்தியவர்–களுள் உமாமகேசுவரனாரும் ஒருவராவார்.

இவைதவிர மதுரைத் தமிழ்ச்சங்க விழாக்களிலும், நாகைச் சைவசித்தாந்த சபையிலும், இன்னும் தமிழகத்தின் பல்வேறு இலக்கிய மன்ற விழாக்களிலும், தலைமையரளராகவும் சொற்பொழிவாளராக வும் சென்று, இவர் நிகழ்த்திய விரிவுரைகள் எண்ணிறந்தனவாம்.

கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாக்காலங்களிலும், அதன் கணக்கற்ற கூட்டங்களிலும் உமாமகேசுவரனார் பேசிய பேச்சுக்கள்

பலப்பல. அவற்றையெல்லாம் தொகுத்து நூலாக்கினால் தமிழ்ப்பெருமக்கட்கு அறிவுக் களஞ்சியங்களாக விளங்கியிருத்தல் கூடும்!

இன்னோரன்ன செயல்களால் உமாமகேசுவரனாரை 'நற்றமிழ் நாவலர்' என நாவார ஏத்தலாமன்றோ?

நல்ல தமிழில் பேசும் தமிழவேளின் சொற்பொழிவைக் கேட்டுத் தமிழின்பால் பற்றுக்கொண்டதோடன்றி மேடைகளில் சிறப்பாகப் பேசவும் வல்லோராய் விளங்கியவர்களும் உண்டு பிற்காலத்தில் 'உரை வேந்தர்' எனப் போற்றப்பட்ட வித்துவான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை பெருமையுடன் கூறும் கருத்து வருமாறு:

''கூட்டங்களில் கலந்து கொண்டு பேசுதல் எங்களுடைய பழக்கமாகும். பேசுகின்ற பொழுது உள்ளக்கிளர்ச்சியோடு பேசுவோம்.. 22–ஆம் வயதின் போது 'இண்டர்மீடியட்' படித்துவிட்டு இங்கு (கரந்தைத் தமிழ்ச்சங்கம்) வந்தேன். அவர் (தமிழவேள்) தமிழில் பேசிய பேச்சுக்கள் எங்கள் உள்ளங்களைக் கவர்ந்தன. எங்களைத் தமிழில் பழக ஊக்குவித்தவர் அவரே! .. ஆண்டறிக்கையைத் தூய தமிழில் எழுத முடியும் என்று எடுத்துக் காட்டினார். அவர் பேச்சில் வேற்றுமொழி கலக்கவே கலக்காது.. சிலப்பதிகாரத்தைப் பற்றி ஐந்துவாரம் கே.எஸ். இராமசாமி சாஸ்திரிகள் தலைமையில் தமிழவேள் சொற்பொழிவாற்றினார் ஒரு சமயம், முதலமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன் வருவதாக இருந்தது. அவர் காலந்தாழ்த்தி வந்த சமயம், வரவேற்புரையில் இனிய, எளிய தமிழில், காலந்தாழ்த்தும் குற்றத்தைப் பற்றிக் கண்டித்துரைத்து, அவரது உள்ளத்தைச் சல்லடைக் கண்கள் போல், துளைத்து வருத்தினார் எவரையும் கண்ணோட்டமின்றிக் கண்ணறப் பேசுவதில் தமிழவேள் தலைசிறந்தவர்!''

## எழுத்தாற்றல்

இவ்வாறு 'நற்றமிழ் நாவலரா'ய் விளங்கிய உமாமகேசுவரனார், சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்து பெரும் புகழுற்றார் என்பதும் அறியற்பாலது.

கரந்தைத் தமிழ்ச்சங்கம் வெளியிடும் 'தமிழ்ப்பொழில்' என்னும் இதழின் ஆசிரியராகப் பல்லாண்டுகள் இருந்து பணிபுரிந்த காரணத்தால், தமிழவேள்பால் எழுத்தாற்றலும் இயல்பாக அமையலாயிற்று.

தம் எழுத்தாற்றலை விளக்குமுகத்தான் நூல் எதுவும் எழுதவில்லை யெனினும் 'தமிழ்ப்பொழிலி'ல் காலத்துக்கேற்பத் தமிழ் மொழியும், தமிழ்நாடும், தமிழினமும் முன்னேறுவதற்கான வகையில் இவர் தீட்டிய தலையங்கங்கள் எத்தனை? வரைந்த விண்ணப்பங்கள் எத்தனை? விடுத்த வேண்டுகோள்கள் எத்தனை? ஆய்ந்த நூல் மதிப்புரைகள் எத்தனை? இவற்றையெல்லாம் கணக்கிட்டுத் தொகுத்தால் எண்ணில்பல நூல்களாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

இவருடைய எழுத்தில் அன்பு தவழும்; அறம் தலைநிற்கும்; வீரம் பெருகும்; விளங்கிய அறிவு சிறந்து தோன்றும்! அது நாட்டுப்பற்றைத் தரும்; மொழிப்பற்றை ஊட்டும்; இனப்பற்றைப் பெருக்கும்.

குணங்கண்டவிடத்துப் போற்றியும், குற்றங்கண்டவிடத்து இடித்துரைத்தும் – இவ்வாறு பட்டதைப் பட்டாங்கு எழுதும் வன்மை இவர்பாலுண்டு. 19–1–1941–இல், மதுரையில் நடந்த தமிழ் இலக்கிய மாநாட்டில், தலைமை தாங்கிய வையாபுரிப் பிள்ளை, தம் தலைமையுரையில் கூறியவற்றுள், நல்லனபோற்றி, அல்லன மறுத்துத் தம் 'தமிழ்ப் பொழிலி'ல் (துணர் 16–மலர் 11) இவர் எழுதிய தலையங்கம் ஒன்றே இதற்குச் சான்றாகும்.

தமிழ்மொழியில் மட்டுமன்றி ஆங்கில மொழியிலும் கட்டுரை எழுதுவதில் வல்லவர். ஆங்கிலப் பேரறிஞர் பைரன்பிரபு எழுதும் நடையை யொப்ப, இவர்தம் ஆங்கில நடை அமைந்திருக்கும் எனக் கற்று வல்லோர் கூறுவர். ஆங்கிலத்தினின்றும் தமிழில் மொழிபெயர்த்து எழுதுவதில் இவர் வல்லவர் என்பதற்கு ஓர் ஆங்கிலக் கட்டுரையைக் (Voyage) 'கடற்செலவு' எனப் பெயரிட்டு மொழிபெயர்த்து எழுதினமையே சான்றாகும்.

### தமிழவேளின் எழுத்தாற்றலுக்குச் சில சான்றுகள்

''மொழிநூற் புலவர்களில் முதலணியில் வைத்தெண்ணக்கூடிய 'உவிட்னி' என்னும் பேராசிரியர், எண்ணவும் பேசவும், தானறிந்த ஐரோப்பிய மொழிகளைவிடத், தமிழ்மொழியே சிறப்புடையது என்று உயர்ந்த கல்வியும், பேசுவதிலும் எழுதுவதிலும் சிறந்த வன்மையுமுடைய ஒரு அமெரிக்கர் பாராட்டிக் கூறியதாகக் கூறுகிறார். (The Life and Growth of Language by William Dwight Whiteney, p. 244-5).

''நம்மவரோ வேறுவகையாகக் கருதுகின்றார். இது நிற்க. இனி ஒருவாறு மனவெழுச்சி கொண்டு முன்னோக்குவாம். பொழிலின் தொண்டு, நம்மவரை நம் மொழியில் ஆர்வம் கொள்ளச் செய்வதிலிருந்து, மக்கட்டொகுதியின் அறிவு நிதிக்கு நம்மவர் கொடையும் செம்பாகமாகச் சேர்க்கப்பெற வேண்டுமென்பதுவரையும் ஆகும். இவற்றினிடையே யுள்ள நிலைகள் பல. நம் பழைய வரலாறுகளை அறிதல் வேண்டும். பரந்த உலகத்தின் பழைய நிலை, இன்றைய நிலை, இடையிடையே இருந்த இயக்கங்கள், அவற்றின் நலந்தீங்குகள் முதலியவற்றைத் தெரிதல் வேண்டும் நம்மிலக்கியத்தோடு பிற இலக்கியத்தின் நயங்களையும் உணர்ந்து மகிழ்தல் வேண்டும் உலக இலக்கியங்களில் உயர்ந்தவற்றோடு ஒரு படியில் வைக்கத்தக்க இலக்கியங்களை நாம் ஆக்கவேண்டும். அறிவு நூல்களின் பல பகுதிகளையும் நம்மவர் நம் மொழியிலேயே கற்பதற்கு வகை தேடுவதோடு, நம் மொழியிலிருந்து, பிறமொழியில் ஆக்கிக் கொள்ள வேண்டிய உயர்ந்த கருத்துக்களையும் நூல்களையும் ஆக்கும் நிலைக்கு வரவேண்டும். அறிவு நூல்களில் உலகம் போற்றும் பேரறிஞர்கள் தமிழகத்தில் பிறந்துள்ளார்கள். அவர்களைப் போற்றும் உலகம், தமிழைப் போற்றவில்லை!'' –இவ்வாறு தமிழ்ப் பொழிலில் (துணர் 16 மலர் · 12) எழுதியுள்ளார்.

மறைமலையடிகளாரின் மகளார் தி. நீலாம்பிகை அம்மையார் இயற்றிய வரலாற்று நூல் 'எலிசபெத் பிரை பெருமாட்டி' என்பது இதற்குப் 'புத்தக மதிப்புரை'யாகத் தமிழவேள் எழுதியது வருமாறு:

''மக்கட் பணியே வாழ்க்கைப் பயனாகக் கருதி உழைத்த மேனாட்டுப் பெண்மணியின் உண்மைச் சரிதம் நல்லாரைப் பற்றிப் படிக்க, கேட்க, சிந்திக்க, அன்னாரின் குறிக்கோளை உளங்கொண்டு போற்ற, மக்கள் தூண்டப்படுதலே நல்வாழ்வு பெறுதற்குரிய அறநெறி. இவ்வரிய நூலைச் செவ்விய நடையில் இயற்றி உதவிய ஆசிரியரின் நன்றி போற்றற் பாலது!'' (தமிழ்ப்பொழில் துணர் 15; மலர்: 11)

இவ்வாறு தமிழவேள் எழுதியன பலவாகும்! அவற்றை ஊன்று நோக்கினால், தமிழவேளின் எழுத்தாற்றல் மட்டுமன்று, ஆழ்ந்த தமிழ்ப்பற்றையும் அறிதல் கூடும்!

இவற்றால், தமிழவேள் உமாகேசுவரனார், 'நற்றமிழ் வல்ல நாவலராக' விளங்கினார் என்பதோடு, சிறந்த எழுத்தாளராகவும் விளங்கிப் பெரும் புகழ்கொண்டவர் என்பது புலனாகும்!

# 6

## சிவநெறிச் செல்வர்

**'சை**வம்' மிகமிகத் தொன்மையானது; சிவவழிபாடும் அத்தகையதே. சைவம் நிலைதளர்ந்த காலத்தில் அருளாளர்கள் தோன்றி, அதற்குப் புத்துயிரூட்டியுள்ளனர். சைவத்தை வளர்த்த பெருமையில் சோழநாட்டுக்குப் பெரும் பங்கு உண்டு. ஞானசம்பந்தப்பெருமானால் பாண்டியநாட்டில் சைவம் தழைத்தது என்பது உண்மை. ஆனால், அதற்கு அடிகோலியவர் மங்கையர்க்கரசியார் ஆவர் இவர், சோழமன்னனின் மகளாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

''*மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை*'' என்பது சம்பந்தர் திருவாக்கு!

### அணிசெய்யும் ஐயாறு!

இஞ்சிசூழ் தஞ்சையைச் சூழப் பல சிவத்தலங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் தஞ்சைக்கு வடபால் ஏழுகல் தொலைவில் உள்ள ஊர் திருவையாறு ஆகும். சோழநாட்டு வடகரைத் தலம். 'சப்த தானத் தலங்களுள் ஒன்று. மூவர் பாடல் பெற்ற சிறப்பினது. இத்தலத்திற்குப் பதினெட்டுப் பதிகங்கள் உள்ளன. காவிரியன்னையின் திருக்கரத்தால் அணைக்கப்பெற்ற ஐயாற்றின் அழகினைக் கண்டு மகிழ்ச்சியுற்றோர் பலராவர். காவிரியாற்றில் இறைவனுக்குரிய துறைகள் பல; அத்துறைகளில் அமைந்த திருக்கோயில்களும் பல. எனினும் திருவையாற்றுக் கோயில் ஒன்றே 'காவிரிக்கோட்டம்' எனத் தேவாரத்தில் சிறப்பிக்கப்படுகின்றது

ஐயாற்றுக் கோயிலைச் சூழ்ந்து சோலைகளும், கழனிகளும் கண்ணுக்கு விருந்தாய்க் காட்சியளிக்கும். ஆங்கே கலையும், பிணையும் களித்துத் திரியும்; களிறும் பிடியும் காதல் புரியும்; மந்தியும் கடுவனும் மரங்கள் நோக்கும்; மயிலும், குயிலும், ஆடிப்பாடி அகமகிழும்; மடவார் பலர் ஐயாறப்பனை அகங்குளிர

வலம் வருவர்; முழவுக்கேற்ப நடனமாடுவர்; அம்முழவின் ஒலி, முகிலின் ஒலிபோன்றிருக்கும். உண்மை உணராத மந்திகள் சில இடியின் ஒலியென அஞ்சி, மழைபொழியுமோ என்ற ஏக்கத்தால் விரைந்து மரம் ஏறும்; முகிலினைப் பார்த்து முழக்கமிடும்! இத்தகு இயற்கை எழில் மிகுந்த ஐயாற்றில், அடியார் பலர், ஆண்டவனை வழிபடுவர். அருளுளங்கொண்ட ஆண்டவன் 'அஞ்சேல்' என்று அங்கை காட்டுவான் இக்காட்சியினை ஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடலில் காட்டுகிறார்.

ஆண்டவன் அருள் பெற்ற அப்பரடிகள் ஐயாற்றிலேதான் கயிலைக் காட்சியினைக் கண்டு களித்தார். இப்பழவிறல் நகரம், முத்தமிழறிஞர்களைத் தம்பாற் கொண்டிலங்குவதாம். காசி நகரம், வடமொழிப் புலவர்களைப் பெற்றமையால் பெயர் போயது என்பர் அறிஞர். அத்தகு நகரத்து அம்மொழி வல்லாரும் இத் திருவை-யாற்றிற்கு வந்து தம் ஐயத்தினைப் போக்கிக் கொள்வர் எனின் இதன் சிறப்பை என்னென்பது? இயற்றமிழோடு, இசையும் கூத்தும் ஈண்டு இணைந்து நின்றன எனும் செய்திகளைத் தேவாரப்பாக்களால் அறியலாம். இன்னிசைவாணர் தியாகையர் தெலுங்கில் இசையமைத்து ஏற்றம் பெற்ற தன்மையை உலகம் நன்கறியும்; இத்தகு இன்னிசை ஏந்தல்கள் இனிதுறைந்த இடம் திருவையாறே

ஐயாற்றில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஐயாறப்பருக்குப் பல திருவிழாக்கள் நடத்தப் பெறுவதுண்டு. இவற்றுள் எத்திக்கும் பெயர் பெற்றது 'ஏழூர்த்திருக்கோயில் திருவிழா'வாகும். திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம்—என்னும் ஏழு தேவாரப்பாடல் பெற்ற ஊர்களைச் 'சப்ததானத் தலங்கள்' என்று கூறுவர். இக்கோயில்கள், காவிரி, குடமுருட்டி என்ற ஆறுகளின் கரையில் அமைந்தவை எனவே, எங்கு நோக்கினும் நெற்கழனிகளும், கமுகந் தோப்புகளும், இன்ன பிறவும் அணியாய் அமைந்துள்ளன.

திருவையாற்றுப் பெருமான் திருக்கோயிலில் சித்திரைத் திங்களில் பெருவிழா நடைபெறும். அத்திங்கள் நிறைமதியன்று ஐயாறப்பர் சிறந்த பல்லக்கில் புறப்படுவர் ஆயிரக்கணக்கான அடியவர் பின்தொடரத் திருப்பழனம் அடைவர்; அவ்வூர் இறைவர், சிவிகையில் வருவர்; இவ்விரு பல்லக்கும் திருச்சோற்றுத்துறை சேரும்; அவ்வூர் இறைவர் உடன் சேர்வர்; பின் மூன்று பல்லக்கும்

திருவேதிகுடி வரும்; அவ்வூர் இறைவர் பங்குபெறுவர்; நான்கு பல்லக்கும் கண்டியூர் அடையும்; அவ்வூர் இறைவர் சேர ஐந்து பல்லக்கும் திருப்பூந்துருத்தி சேரும்; அவ்வூர் இறைவர் பங்குபெற ஆறுபல்லக்கும் பொழுது புலரும் போதில் திரு நெய்த்தானம் வரும்; அவ்வூர் இறைவர் கலந்து கொள்ள, ஏழு பல்லக்கும் திருவையாற்று ஐயாறப்பர் கோயிலை உச்சிப்போதில் அடையும். ஒரே வேளையில் எல்லா இறைவர்க்கும் பூசை, வழிபாடு நிகழும். இவ்விழாவில் கடவுள் நம்பிக்கை, சமய உணர்ச்சி, மக்கள் சாதிப்பாகுபாடின்றிப் பழகுதல், ஒப்புரவாண்மை முதலியன உண்டாவதில் வியப்பில்லை! இதன் பயனுணர்ந்த தஞ்சை மன்னர்கள் இதனைப் பெருஞ்சிறப்போடு நடத்தி வந்தனர்.

## சிவநெறிச் செல்வர்

தமிழவேள் உமாமகேசுவரனார் ஆழ்ந்த, ஆனால் உண்மையான கடவுட்பற்றுக் கொண்டவர்; சிந்தை முழுதும் சிவன்பாலே வைத்தவர்; நீறுபொலியும் நெற்றியுடன் என்றும் விளங்கும் இவர், உயர்ந்த சைவப்பற்றுடையவராகத் திகழ்ந்தார்.

வாலையானந்த அடிகளார் என்பவர் ஒருவர் சைவத் துறவியாய் அக்காலத்து விளங்கிவந்தார். காரைக்காற் பகுதியிலுள்ள பஞ்சாட்சரபுரம் என்ற ஊரில் தோன்றியவர்; வேளாண் மரபைச் சேர்ந்தவர்; பிரெஞ்சு மொழியைக் கல்லூரி இடைக்கலை வகுப்பு வரையிற் கற்றவர். இளமையிலேயே சிவப்பற்று, யோகமுறையில் ஆர்வம் முதலியனகொண்டு துறவுமனப்பான்மை கொண்டிருந்தார். எனவே ஊரைவிட்டு வெளியேறினார். ஆண்டவன் அருளைப் பெற்றார். பன்னிரண்டு ஆண்டுகள் வாய்பேசாமல் கடுந்தவம் மேற்கொண்டார். தருமபுர ஆதீனத்தில் சிறிது காலம் அருட்டலைவராய் இருந்தார். பிறகு கொறடாச்சேரியடைந்து நிலையாகத் தனிமடம் ஒன்று கண்டு அதில் தாம் உணர்ந்த சைவ சித்தாந்த அறிவு நூல்களை எல்லாம் தெள்ளத் தெளிய ஆய்ந்தார். தமிழ்நூல்களையும் சைவப்புராணங்களையும் ஆழ்ந்து நோக்கினார். தாம் அறிந்த சைவ சித்தாந்தத்தின் அரிய உண்மைகளை மாணவர் பலருக்குத் தெள்ளத் தெளிய எடுத்துரைத்தார். சைவ மெய்யன்பர் சிலர் இவரைத் தம் ஆசிரியராகக் கொண்டனர். சிவஞானபோதம், சித்தியார் முதலிய பாடங்களைக் கேட்டனர். தமிழகச் சைவ அவைகள் இவரைத் தம் ஆண்டுவிழாக்காலங்களில் தலைமை தாங்க அழைப்பதுண்டு. இத்தகு அருளாளரிடம் சித்தாந்த நூல்களைப்

பாடங்கேட்டும் சிவதீக்கை பெற்றும் அடிகளானவர்களில் நம் தமிழவேளும் ஒருவர்.

## ஏழூர்த் திருவிழா

'சைவத்தின் மேற் சமயம் வேறில்லை' என முழு மூச்சாக நம்பி, அதற்காகப் பாடுபட்ட பெரியர் உமாகேசுவரனார்! எனவே, ஏழூர்த் திருவிழாவில் இவருள்ளம் ஈடுபட்டதில் வியப்பேதுமில்லை. இவர் வெண்ணீறும், உருத்திராக்க மாலையும் கொண்டு புன்முறுவல் பூத்த பொன்மேனியராய் இடையிற் கட்டிய வேட்டியும். அதன் மேற்சுற்றிய துண்டும் கொண்டு, ஏறத்தாழ இருபத்தைந்து கல், கால்நடையாகவே அன்பர்புடைசூழ இவ்விழாவிற் பங்கு பெறுவார். ஆங்காங்கே இவர்க்குக் கீழ்ப் பணிபுரியும் பலர் அஞ்சிய நெஞ்சினராய்க் கைகட்டியிருப்பர். ஆயினும் சிவப்பற்றின் பொருட்டு நாள்தோறும் காவிரியில் நீராடிப் பக்தியுடன் இவர் செல்வார். உடன் வருவோர்க்குச் சிறந்த உண்டி வகைகளைத் தம் இல்லத்திலேயே செய்வித்து, வண்டியில் கொண்டுவரச் செய்வார். அன்பரும் அடியவரும் உண்ணத் தாமும் உண்பார். சிவனடியாரை அழைத்துக் கொண்டு செல்வார்; சமயச் சொற்பொழிவுகள் ஆற்றச் செய்வார்; ஆண்டவன் அருட்டிறத்தைத் தாமும் உரைப்பார். விழா நடக்கும் இரண்டு நாட்களிலும் வேறு எப்பணியிலும் ஈடுபடார். பல நூறாயிரக்கணக்கான மக்களால் கொண்டாடப்பெறும் இப்பெருவிழா உமாமகேசுவரனாரால் மேலும் சிறப்பெய்தியது.

வேறு எந்த விழாவிலும் பங்கு பெறாத இவர், இவ்வேழூர்த் திருவிழாவில் மட்டும் ஆண்டுதோறும் பங்குபெறத் தவறுவதில்லை. இறக்கும் வரையிலும் கூட இப்பணியில் ஈடுபட்டிருந்தார் அக்காலத்தில் இறைவனை எடுத்துச் செல்லும் பல்லக்குகளைக் கொண்டு செல்வதற்குக்கூடச் சரியான பாதைகள்கிடையா! அதனால் பல்லக்குச் சுமப்பவரும் அதன்பின்னே செல்லும் ஆயிரக்கணக்கான ஆடவர் பெண்டிரும், பெரிதும் தொல்லையுற்றனர். அத்தொல்லை–யினைக் கண்ணாற்கண்டு கசிந்துருகிய உமாகேசுவரனார், தாம் தஞ்சை வட்டக் கழகத் தலைவராயிருந்த காலத்து, இவ்வேழூர்கட்கும் அழகான பாதைகளை அமைத்தார்; நறுநிழல் தரும் நன்மரங்களை நட்டார் எனும் செய்தி முன்னரும் குறிப்பிடப்பட்டது. திருவை யாற்றிலிருந்து திருப்பழனம் செல்லும் வரையிலுள்ள தென்னை மரங்கள் பல, இன்றுங்கூட உமாமகேசுவரனாரின் திருப்பெயரை ஒலித்துக்கொண்டு நிற்கின்றன! இத்தகு அருஞ்செயலால்

தஞ்சைமாவட்டத்தார் அனைவரும் உமாமகேசுவரனாரை உள்ளத்துட் கொண்டு போற்றி வருவாராயினர்.

சைவசமயத்தில் நம்பிக்கைகொண்ட இவர், தம் கல்லூரியிற் பயிலும் மாணவர்க்கும் அவ்வெண்ணம் உண்டாகவேண்டுமென விழைந்தார். அதற்காகச் சைவ சித்தாந்த மகாசமாசத்தைச் சேர்ந்த பெரியார்களை அடிக்கடி வரவழைத்துச் 'சித்தாந்த வகுப்பு' நடத்தச் செய்தார்; அதற்கெனத் தேர்வுகள் வைத்து வெற்றி பெற்றோர்க்கு 'இளம்சைவப் புலவர்' 'முதுசைவப்புலவர்' எனும் பட்டங்கள் வழங்கினார் அருட்டிரு விபுலானந்த அடிகளார் ஒருமுறை கரந்தைக் கல்லூரியில் தங்கிச் சைவப்பாடம் நடத்தினார் எனக்கூறுவர் சிலர்

'சைவசமயத்தைச் சார்ந்த ஒருவர், வேறு எந்தச் சமயத்துடனும் தொடர்பு கொண்டவராக இருப்பார் எந்தக் கோயிலுக்கும் போவார் சைவசமயத்திற்கு இத்தகு இயல்புண்டு!' என்பது உமாமகேசுவரனார் அடிக்கடி கூறும் விளக்கமாகும்

இதை இவர், தம் வாழ்க்கையிலும் கடைப்பிடிததொழுகி வந்தார். பழுத்த சைவப்பற்றுடைய இவர், பழுத்த கிறித்தவர்களுடனும் முகம்மதியர்களுடனும் நெருங்கிப் பழகி வந்தார் தமக்குரிய நெருங்கிய நண்பர்களாகக் கருதிப் போற்றி வந்தார.

## சைவத்தில் ஆழ்ந்த பற்று

'தமிழவேள்' உமாமகேசுவரனார், தண்டமிழ்க் குடும்பத்தில் – சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ள குடும்பத்தில தோன்றியவராதலின், அவருக்குச் சைவத்தில் ஈடுபாடு இருந்ததில் வியபபில்லை சைவ சமயத் தலைவரான ஞானியார் அடிகளின் நட்பும் கொணடவர் தமிழவேள்!

தமிழவேளின் வேண்டுகோளுக்கு இணங்கக் கரந்தையில், சேர்வைகாரன் தெருவில், த பா சிவகுருநாதபிள்ளை என்பவர், திருவிளையாடற் புராணத் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வந்தார். ஒவ்வோர் இரவிலும், நகரின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் பெருந்திரளாகக் கூடி அச்சொற்பொழிவைக் கேட்டு இன்புற்றனர். சொற்பொழிவு முடிந்த இறுதிநாளன்று, தமிழவேள் அவருக்கு ஒரு பாராட்டிதழ் வழங்கிப் போற்றினார்.

சமயப்பற்றுடையவராகத் தமிழவேள் இருந்தபோதும், மூடநம்பிக்கைகளில் சிறிதும் பற்று இல்லாதவர் என்பது குறிப்பிடத் தக்கது. தொடக்க காலத்தில் 'சமய தீக்கை' செய்வதுகூட

மூடநம்பிக்கை என்றுதான் கருதினார். ஆனால், அதன் உண்மைத் தன்மை உணர்ந்தபின் அவர், தீக்கைபெற்று, அனுட்டானம் செய்துவந்தார்; நாள்தோறும் திருவாசகம் ஓதிவந்தார்!

இவண் மற்றொரு நிகழ்ச்சியையும் குறிப்பிடுவது பொருந்தும்.

தமிழவேள் உமாமகேசுவரனார், நீதிக்கட்சியைச் சார்ந்தவர்; சுயமரியாதை இயக்கத்திலும் மிகுந்த தொடர்புடையவருமாவார்!

1929ஆம் ஆண்டில், செங்கற்பட்டில், சுயமரியாதை முதல் மாநாடு நடந்தது. அதில், நீதிக்கட்சித் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். தமிழவேளும் சென்றிருந்தார். "கடவுள் பெயரால் ஒரு காசுகூடச் செலவிடக்கூடாது" என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தமிழவேள் உள்ளிட்ட ஒரு சிலர் அத்தீர்மானத்தை எதிர்த்தனர். எனினும், வாக்கெடுப்பின்போது, பெரும்பாலான வாக்குகளால், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடவுளைப்பற்றிய இந்தத் தீர்மானம் நிறைவேறியபின், சுயமரியாதை இயக்கத்தில் இருந்த தமது தொடர்பை நிறுத்திக் கொண்டார் எனில், இவரது சமயப்பற்று எத்தகையது என்பதை அறிந்து கொள்ள இயலும்.

தமிழவேள், சைவசமயப் பற்றாளர் எனினும், பிற சமயங்களை வெறுக்கவோ, எதிர்க்கவோ செய்யாததோடல்லாமல், அவ்வச் சமயங்களின் வளர்ச்சிக்கு உதவியுமுள்ளார் என்பதால் இவரது பரந்த மனப்பான்மையை அறியலாம்

"எங்கு போய்ப் பணி செய்தாலும் சமயத் துறையில் பின் வாங்காதீர்கள்; சமயந்தான் மக்களை ஒன்று கூட்டுவது என்று அழுத்தமாகச் சொல்வார். இவ்வாறு செய்தால், உங்கள் நாடு உயரும்; மொழி உயரும்; நீங்களும் உயரலாம். தன்னைச் சேர்ந்தாரை—தன்னை அடைந்தாரை, அன்பு கொண்டாரை நன்னெறியில் நிறுத்திய ஒரு பெருந்தலைவர் தமிழவேள்!" என்று ஔவை சு. துரைசாமிப் பிள்ளை கூறுவது கொண்டு தமிழவேளின் மெய்யான சமயப்பற்றை உணரலாம்.

'தமிழவேள்—ஒரு சிவநெறிச் செல்வர்' என்பதால்தான், தவத்திரு ஞானியாரடிகள், "நான் முருகனைத் தினந்தோறும் வழிபடும் போது, தமிழவேள் உமாமகேசுவரனும் கரந்தைத் தமிழ்ச்சங்கமும் நல்ல பொலிவுடன் விளங்க வேண்டும் என்று வழிபடுவேன்" என்று சொன்னாராதல் வேண்டும்!

# 7

## நற்பண்பின் நாயகர்

அவர் ஒரு தண்டமிழ்ப் புலவர்; குளிர்காலத்தில், பருந்தின் சிறகைப் போல் சிதைந்திருந்தது உடுத்திய ஆடை; தன் சுற்றத்தாருடன் எங்கெங்கோ சுற்றியும் பலன் இல்லாமல், மிக்க வருத்தத்தோடு, ஒரு பலாமரத்தின் அடியில் தம்மையும் மறந்து படுத்திருந்தார். அப்போது, கையில் வில்லும், வேட்டையாடிய மானுமாக ஒருவன் வந்தான். அவனை வணங்கி, எழுந்திருக்க முயன்றார்; அவனோ, கைச்சாடையால் 'அமர்க' என்றனன். அவனுடன் சேர்ந்த இளைஞர் பலர்; ஆனால், அவர்கள் வருவதற்கு முன்பே, அவன் தன்கைப்படவே அம் மானின் தசையைச் சுட்டு 'உண்க' என்றனன். பசி நெருப்பினால் துடித்துப் போன அவர்கள், அனைவருமே அவ் இறைச்சியைப் பசியார உண்டு, அருகில் இருந்த அருவி நீரையும் பருகினர். பின்பு, அவனிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட ஆயத்தமானார் அப்புலவர்; அவனோ, ''நாங்கள் காட்டில் இருக்கின்றோம்; நுமக்குத் தர, வேறு ஒரு சிறந்த பொருளும் எம்மிடம் இல்லையே!'' என்று சொல்லிக்கொண்டே, தன் கழுத்தில் கிடந்த முத்துமாலையையும், கையில் இருந்த கடகத்தையும் கழற்றி, அவருக்குத் தந்தனன். அவற்றைப் பெற்றுக் கொண்டு ''நீ யார்? நும் நாடுதான் யாதோ?'' என்று கேட்டார் புலவர். அவனோ எதுவுமே கூறாமல் சென்று விட்டான்! அவனது நாடும், பேரும், பின்பு, போகும் வழியில் பிறர்பிறர் கூறக் கேட்டார் புலவர். அவன்தான், மிக்கபுகழும் பெருநாடும் கொண்ட 'தோட்டி' மலைக்குத் தலைவனான நள்ளி!

வறுமையால் வாடியவர்—வன்பரணர்; கொடுத்த கொடை வள்ளல்—கண்டீரக் கோப்பெரு நள்ளி!

***''எந்நா டோஎன நாடும் சொல்லான்!***
***யாரீரோ எனப் பேரும் சொல்லான்!''*** (புறம்:150; 22-23)

என்னும் புறநானூற்று அடிகள், 'நள்ளி'யின் உயர்ந்த பண்பாட்டைக் காட்டுவதாம்!

இத்தகைய 'நற்பண்பின் நாயகரா'க விளங்கியோர் பலர். அவருள் 'தமிழவேள்' உமாமகேசுவரனாரும் ஒருவர் எனின் மிகையன்று!

''அவர் (தமிழவேள்) என்னுடைய ஆசிரியர் பல படிப்பினையை அவரிடத்தில் பெற்றுக்கொண்டேன் சங்க ஆண்டு விழாவிற்கு வருவோரனைவருக்கும் சோறு வழங்கல், அவர் மனைவியார் கடன் தமிழ்த்தொண்டு வழங்கல்—இவர் கடன்! 1921ஆம் யாண்டு என எண்ணுகிறேன். பித்தளைத் தாம்பாளத்தில் சோறு போடுகிற வழக்கத்தை அவர் வீட்டில்தான் யான் முதலில் கண்டேன் இதை யான் அவரிடம் கற்றேன். மற்றொனறு. பணபாடு . இல்லாத பொழுது ஒருவரைப் பற்றிப் பேசக் கூடாது; 'புறங்கூறல் தவறு'' என்பதை இவரிடத்தில் கண்டேன்

''சங்க உறுபபினர்பால் அளவற்ற அனபுடையவா அவர்! ஒருகால் ஓர் உறுப்பினரின் மூன்றுமாதக் குழந்தை இயறகை எய்தியது அறிந்து திருச்சிக்கு ஓடோடி வந்தார்!

''படிப்பைவிட—பட்டத்தை விட—சங்கத்தைவிட—ஒழுக்கத்தைச சிறப்பாக மேற்கொண்டார்!'' —இவ்வாறு 'முத்தமிழ்க் காவலா' கி ஆ பெ விசுவநாதம் கூறுவது கொண்டு தமிழவேளின் உயர்நத பண்பாட்டைப் புரிந்து கொள்ள முடியும்

சங்கச்சார்பில் தொடங்கபபெறற 'புலவா கல்லூரி'யின் முதல் ஆசிரியராக இருந்த பெருமைக்குரியர் வித்துவான் க வெள்ளைவாரணனார் ஆவர்!

அப்போது அண்ணாலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த துறைப பேராசிரியராக இருந்தவர் நாவலர் ச சோமசுந்தர பாரதியார் அவரின் நன்மாணாக்கரே வெள்ளை வாரணனார் நாவலா பாரதியாரின் மடலைப் பெற்றுக் கொண்டு, கரந்தைக்கு வந்து. தமிழவேளிடம் அதனைக் கொடுக்க. அவரும். ''தொடங்க இருக்கும் புலவர் கல்லூரிக்கு நீங்களே ஆசிரியர் தங்களுக்கு நிறைந்த ஊதியம் கொடுக்கும் நிலையில் சங்கத்தில் பொருள் இல்லை எனவே. இயன்ற அளவு ஊதியம் கொடுப்போம். கல்லூரி வளர. உங்கட்கும் வளர்ச்சி உண்டாகும்'' என்று அன்புடன் கூறி, ''வெள்ளிவிழா நிகழ ஒருமாதம் இருக்கும் நிலையில் வெளளிவிழா மலரின் அச்சுபபணி நடந்துவருகின்றது. நீங்கள் அதனைப் பொறுப்பாகக கவனித்துக கொள்ள வேண்டும்'' என்று கூறினார் மேலும், தமது இல்லத்தில், தம் சின்னம்மா முதலியவர்களிடம். ''இவர் எபபோது வந்தாலும் தாமதமின்றி உணவு படைத்துச சங்கத்திற்கு அனுப்பிவிடவேண்டும்''

என்று சொல்லி வெள்ளைவாரணனாரையும் தமிழவேள், தம் குடும்பத்தில் ஒருவராக ஈர்த்துக் கொண்டார்!

மற்றுமொரு நிகழ்ச்சி பற்றி வெள்ளைவாரணனார் கூறுவது இவண் குறிக்கத்தகும்:

''தஞ்சையில் 1939ஆம் ஆண்டு பெருவெள்ளம் ஏற்பட்டது. யான் கரந்தையிலுள்ள ஜைனத் தெருவில் வடவாற்றங்கரை ஓரமாக ஒருவீட்டில் குடும்பத்துடன் குடியிருந்தேன். தெருவெல்லாம் வெள்ளம் பரவிய நிலையில் நான் அங்கிருத்தல் பாதுகாப்பு இல்லை என்று என்னைக் குடும்பத்துடன் அழைத்துத் தங்கள் வீட்டு மேல்மாடியில் தங்கவைத்து, எங்களை விருந்தோம்பிய திறம், சங்ககால வள்ளல்கள், தமிழ்ப்புலவர்களிடத்திலே கொண்ட பேரன்பின் திறத்தினை நன்கு புலப்படுத்துவதாயிற்று!''

இவற்றால், தமிழவேளின் விருந்தோம்பும் பண்பை அறிந்து கொள்ளலாம். தமிழவேள், இளமையிலே, தம் பெற்றோரை இழந்து, சிற்றன்னை வீட்டில் வளர்ந்தவர்; எனவே தம்மைப் போல் பெற்றோரை இழந்த ஏழைச் சிறுவர்களின் நிலையை எண்ணி அவர்கள் கல்விநலம் பெறுதற்கென்றே கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் 'திக்கற்ற மாணவர் இல்லத்'தைத் தோற்றுவித்து வளர்த்து வந்தமை, ஏழை பங்காளராகவும் திகழ்ந்த அவர்தம் அருளுடைமை எனும் பண்புக்குச் சான்றாகும்!

தமிழவேள், தம் முப்பதாம் அகவையளவில் தம் இனிய வாழ்க்கைத் துணை நலத்தை இழந்தவர்; தம் பிள்ளைகளின் உயர்வுகருதியாவது இரண்டாவது மணம் செய்ய வற்புறுத்தினர் நெருங்கிய குடும்பநண்பர்கள் என்பது முன்னரே சொல்லப் பட்டுள்ளது. 'ஒருவனுக்கு ஒருத்தி' எனும் உயர்பண்பு, தமிழர்களுடையது; 'தமிழ்த்தென்றல்' திரு.வி.க வும் இப்பண்பைக் கைக்கொண்டவர்தாம்! மனைவி, இயற்கை எய்தியபின்னும் ஒருசிறிதும் மனக்கோணல் இன்றித் தம் வாழ்வு முழுதையுமே சங்கப் பணிக்கு—தமிழ்த் தொண்டுக்கு என்று ஆக்கிக்கொண்டார். மனைவி இல்லாத அவருக்குத் தமிழ்த்தொண்டே கை கொடுத்து உதவியது எனலாம்!

'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பது அனைவரும் அறிந்த ஒன்று கரந்தைத் தமிழ்ச் சங்க வளர்ச்சிக்குப் பொருள் வேண்டியிருந்தது. தமிழவேள் எண்ணியிருந்தால், வட்டக் கழகத் தலைவராக - வழக்கறிஞராக—இன்னும் பலபதவிகளில் இருந்தவர்;

எனவே தம்பால் வருபவர்களிடம் விரும்பிக் கேட்டால் பணம் குவிந்திருக்கும். ஆனால், அவ்வாறு அவர் செய்யவில்லை. "அப்படிப் பணம் பெறுவதைவிடத் தமிழ் வளர வேண்டும் என்ற விருப்பத்தினால், யாரேனும் ஒரு காசு கொடுத்தாலும் அதனைப் பெருந் தொகையாக ஏற்போம்" என்று சொல்லிய தூய பண்பினர்!

தமிழவேள், தமக்குத் துன்பம் வந்தபோதெல்லாம், அதனை முற்றிலும் மறக்கப் பொதுத்தொண்டில் ஈடுபட்டு விடுவார். அதற்கு ஒரு சான்று:

1925 ஆம் ஆண்டில், சென்னை மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெறத் தமிழவேள் அரும்பாடுபட்டார் அவ்வேளையில்தான், அவரின் அருமைத் திருமகன் பஞ்சாபகேசன், இறந்துபோனான். மகன் மறைவால், அளவற்ற துயரத்தில் ஆழ்ந்து போனார்; அவனது உடம்பை இடுகாட்டில் அடக்கம் செய்து, வீடு திரும்பிய உடனேயே, தேர்தல் அலுவல்களைப் பார்க்கத் தொடங்கி விட்டாரெனின் அவரின் பரந்த உள்ளப்பாங்கு எத்தகையது என்பது புரியும்!

மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களையும் மதித்துப் போற்றுவது தமிழவேளின் தனிப்பண்பு. அவர், ஒரு சமயம் நீதிக்கட்சியின் சார்பில் தேர்தலுக்கு நின்றார்; அவரின் மைத்துனர் சாம்பசிவம் பிள்ளை என்பவர், தீவிரக் காங்கிரசுக்காரர் எனவே இவர், தமிழவேளை எதிர்த்துப் போட்டியிட்ட பூவராக ஐயங்கார் என்பவருக்காகக் காங்கிரசுக் கட்சி வேலைகளைக் கவனித்தார் தமிழவேளும் சாம்பசிவம்பிள்ளையும் ஒரேவீட்டில், அருகருகே அமர்ந்து இனிதுபேசி மகிழ்ந்து உணவருந்துவர். ஆனால், உணவுவேளை முடிந்ததும், அவரவரும் தத்தம் கட்சிக்காகத் தேர்தல் வேலைகளைக் கவனிப்பர். இதற்காக ஒருபோதுகூடச் சாம்பசிவம் பிள்ளை மீது தமிழவேள் வருத்தமோ, பகைமையோ பாராட்டவில்லை!

மன்னவனுக்குரிய மாண்புகளை மொழிய வந்த முப்பாலின் ஆசிரியர்,

*"அஞ்சாமை யீகை அறிவூக்க மிந்நான்கு*
*மெஞ்சாமை வேந்தர்க் கியல்பு"* (குறள் : 382)

என்கின்றார் இந்நான்கு பண்பும் தமிழ் வேந்தராகிய உமாமகேசுவரனாரிடம் இயல்பாயமைந்திருந்தன.

உள்ளம் உணர்வதை உரைப்பதிலும், அதனை அச்சமேது மின்றிப் பிறர் மனங்கொள்ள மொழிவதிலும் சிறிதும் பின்வாங்கியவரல்லர் உமாமகேசுவரனார். அங்ஙனங் கூறுங்கால், உயர் அலுவலர் என்றோ, பெருஞ்செல்வர் என்றோ, உள்ளத்தை வருத்துமென்றோ பார்க்கமாட்டார்.

**அஞ்சாமை**

ஒருமுறை, துறையூரில் தமிழ்ப்புலவர், தமிழ் மாணவர், தமிழர் மாநாடுகள் நடந்தன. அவற்றின் வரவேற்புக் கழகத் தலைவராக உமாமகேசுவரனார் பொறுப்பேற்றிருந்தார். மாநாட்டின் தலைவராய் வந்தவர்கள், பேரறிஞர்கள்; பெருஞ் செல்வாக்குப் பெற்றவர்கள். ஆயினும் அவர்கள் நடந்து கொண்ட முறை பொருத்த மற்றதென உணர்ந்த உமாமகேசுவரனார், தம் 'தமிழ்ப் பொழில்' தலையங்கத்தில் பின்வருமாறு கண்டித்து எழுதியுள்ளார்:

"...இம்மூவரில் இருவர் மிகவும் காலந் தாழ்த்து வந்தமையால் மாநாடுகள் குறிப்பிட்ட நேரத்தில் தொடங்க முடியாமற் காலமும் அவலமாய்க் கழிந்தது. இருவருள் ஒருவர் காலங் கடந்து வந்ததோடமையாது, மாநாட்டை விரைவில் முடித்துவிட்டு வேறு அலுவல்களில் படரும் கருத்துடையராயுமிருந்தனர். மாநாட்டில் நிறைவேற்றுதற்பொருட்டு வந்த முடிபுகளைக் கண்ணுற்று அவற்றினைச் செப்பஞ் செய்வதும், கொள்வன தவிர்வனவற்றை ஆய்வதும் தமது கருமமெனத் தலைவர்கள் கருதினாரல்லர். வரவேற்புக் கழகத்தின் ஆராய்ச்சிக் குரியனவென்று தேர்ந்து கொடுத்த முடிபுகளைத்தானும் பேரவையில் வைப்பதற்கு நேரமில்லையெனக் கூறித் தமிழர் மாநாட்டின் தலைவர் மிகப் பல முடிபுகளைப் புறக்கணித்துப் போந்தது போற்றத்தகும் முறைமையன்று. மாநாட்டின் நோக்கத்தினை நன்குணராத ஒருசிலர் முறை பிறழ்ந்து அடாதன செய்ய முற்பட்டதைக் கடிந்து பாதுகாவாதும், அன்னார் தொடுத்த அழிவழக்குகளை வாதிக்க இடந்தருதற்கு அஞ்சி நடுநில்லா தொதுங்கியும், தலைவரவர்கள் மாநாட்டின் உரிமைகளை நெகிழவிடுத்தது வருந்தத்தக்கதொன்றாம்". (பொழில்: துணர்–8, மலர்–4).

ஒருகால், கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளியைப் பார்வையிடக் கல்வி அலுவலர் ஒருவர், காலை பத்து மணிக்கு வருவதாக முன்னமே அறிவித்திருந்தார். உமாமகேசுவரனார் குறிப்பிட்ட வேளையில் அவரை வரவேற்க ஆயத்தமாக இருந்தார். ஆனால்,

அவ்வலுவலரோ காலங்கடந்து வந்து சேர்ந்தார். வாயிற் கதவைக் கூடத் திறக்காமல் அவரை 'வெளியேறுக' என்று சொல்லி அனுப்பி விட்டார். அவ்வலுவலர் பெருஞ்சினங் கொண்டு, பள்ளியைப்பற்றித் தவறுதலாக எழுதி அரசினர் உதவித் தொகையை நிறுத்த ஏற்பாடு செய்தார். உமாமகேசுவரனார் வாளாவிருந்துவிடவில்லை; தக்க ஏற்பாடுகளைச் செய்தார். அதே அலுவலரைப் பள்ளிக்குத் தாமாக வருமாறு செய்ததோடமையால், கூட்டத்தில் அவர் மன்னிப்புக் கேட்குமாறும் செய்துவிட்டார்; அம்மட்டோ? அவ்வலுவலர், பள்ளி உதவித் தொகையில் முன்பைவிடக் கூடுதலாகக் கிடைத்தற்கும் வழிவகுத்துச் சென்றார்.

இதே போன்ற நிகழ்ச்சி ஒன்று, மற்றொரு முறையும் நடந்தது கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளிக்குரிய உதவித்தொகை தருவதில் கல்வியலுவலர் ஒருவர், தம் மனம் போனவாறெல்லாம் நடந்து கொண்டார் இதைத் தக்க முறையில் எடுத்துக்காட்ட வேண்டுமெனத் துணிவு கொண்ட உமாமகேசுவரனார் அதற்குரிய காலத்தை நோக்கிக் கொண்டிருந்தார். அப்போது, சென்னைக் கல்வியமைச்சராக இருந்த திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினைப் பார்வையிட வந்தார். இதுவே தக்க வாய்ப்பெனக் கருதிய உமாமகேசுவரனார், தம் வரவேற்புரையில், கல்வியலுவலர் செய்த தவற்றைத் தக்க காரணங்களுடன் எடுத்துக் கூறி ஆவன செய்தார்.

தஞ்சையிலிருந்து மாவட்டக் கூட்டுறவுப் பதிவாளர் ஒருவர், மாற்றலாகி வேற்றூருக்குச் சென்றார் அப்போது நண்பர் சிலர் அவருக்கொரு பாராட்டு விழா நடத்தினர் உமாமகேசுவரனாருக்கு அது பிடித்தமில்லையாயினும் பலர் விருப்பத்திற்கிணங்க அக் கூட்டத்தில் கலந்து கொண்டார்; அவரைப் பாராட்டிச் சிலர் பேசினர் ஆனால் இவரோ, ''இப்பதிவாளர் மிகவும் பொல்லாதவர்; இனியேனும் சரியான முறையில் நடந்து கொள்வார் என நம்புகிறேன்'' என அஞ்சாமற் பல சான்று காட்டி உரைத்தார்.

## தளராத் தமிழ்ப்பற்று

இத்தகு உயர்ந்த உள்ளமுடைய இவர், தமிழ்மொழிக்குக் கேடு எனின் விடார்! உறவினராயினும் நண்பராயினும் நொதுமலாயினும் இறுதிவரை எதிர்ப்பார். இவர் தம் மூச்சே, தமிழ் மூச்சன்றோ? சைவத்தில் எத்துணை ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தாரோ, அத்துணையளவு, ஏன் அதனைவிடப் பன்மடங்கு தாய்மொழியாகிய தமிழின் மீது பற்றுக்கொண்டிருந்தார் இதனை முன்னைய

தலைப்புக்களில் பரக்கக் கண்டுள்ளோம். "ஒரு காலத்தில் நாடுகள் பலவற்றை வென்று ஆட்சி செய்தான் தமிழன். அதுபோல் தமிழ்மொழியும் இன்று பல நாடுகளிலும் வீறுபெற்று விளங்கவேண்டும். தமிழ்நாட்டிலுள்ள தமிழ்ச்சங்கங்கள் பல இதற்கென ஒன்றுபட்டுழைக்க வேண்டும். தமிழ்ப் புலவர் பலரும் தொழிற்கல்வியிலும் தேர்ச்சி பெற்றவராக விளங்கவேண்டும். தமிழின் நிலை உயரத் தமிழ்–தனித் தமிழாக விளங்கவேண்டும்!" – இவை உமாமகேசுவரனாரால் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகள்.

இக் கொள்கைகட்காக இவர் செய்த தொண்டுகள் அளப்பில. இவர்தம் சீரிய முயற்சியில்லையேல் தமிழகம் இன்று இந்த அளவுகூட விழிப்புணர்ச்சி பெற்றிருக்க முடியாது எனத் துணிந்து கூறலாம்!

உமாமகேசுவரனார், தமிழறிவு பெற்றவர் என்று சொல்வதைவிடத் தமிழ்ப் புலமை பெற்றவர் என்று கூறுவதே பொருந்தும். தமிழ் இலக்கியங்களை – சிறப்பாகச் சங்க இலக்கியங்களை – இரண்டு அல்லது மூன்று முறை படித்துத் தேர்ந்தவர். தமக்கெனத் தனி நூல்நிலையம் ஒன்றைத் தம் இல்லத்திலேயே வைத்திருந்தார். தமிழ் நூல்களைத் தாமே விலைகொடுத்து வாங்குவார்; அவற்றை நாள்தோறும் இரவு ஏழு மணிமுதல் ஒன்பது மணிவரையிற் படிப்பார்; ஆங்காங்கே குறிப்புக்களை நூலிலேயே எழுதிவைப்பார்; பிறகு கரந்தைத் தமிழ்ச் சங்க நூல்நிலையத்திற்கு நன்கொடையாகத் தந்து விடுவார்; இவ்வாறு இவர், முதல் இருபத்தைந்தாண்டுக் காலத்திற்குள் 810 நூல்கள் விலைக்கு வாங்கித் தந்துள்ளார். சங்க நூல்கள் முழுமைக்கும் அட்டவணை (Index) ஒன்று தொகுத்து வைத்திருந்தார்.

காலை வேளையை வழக்குத் தொழிலுக்கெனவும் மாலை வேளையைச் சங்க வேலைக்கெனவும் பகுத்துக் கொள்வார் உமாமகேசுவரனார். இதில் மிகவும் கண்டிப்பாகவே இருந்துவந்தார். கட்சிக்காரர் யாரேனும் மாலை நேரத்தில் வந்தால் முகங்கொடுத்துக் கூடப் பேசமாட்டார்; அவ்வாறே சங்க வேலையாகக் காலை நேரத்தில் யாரேனும் வந்தால் பேசமாட்டார் நடுவுமன்றத்திலிருந்து நேராக வீடு செல்வார்; உடைகளை மாற்றி, வேட்டி, துண்டுடனே சங்கம் வருவார்; அதன் வேலைகளைக் கவனிப்பார். சங்கத்திற்கு வரும் புலவர் யாராயிருந்தாலும், தம் வீட்டிற்கழைத்துச் சென்று உணவளிப்பார்;

விழாவிற் பங்கு பெறும் புலவர் பெருமக்கட்குச் சிறந்த முறையில் வரவேற்று விருந்து பேணுவார்; வேட்டி முதற்கொண்டு சலவை செய்வித்து அன்புடன் அவர்க்குத் தருவார். தமிழறிஞரிடத்தும் இவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவர்கள் முகத்தில் ஒரு தனிக் கவர்ச்சி காணப்படுவதுண்டு. தமிழ் இலக்கியங்களையும் நயங்களையும் எவர் எடுத்துக் கூறினாலும் மிகவும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருப்பார் இவர்.

உமாமகேசுவரனாரின் தமிழ்ப்பற்றுக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாகத் திகழ்வது கரந்தைத் தமிழ்ப் புலவர் கல்லூரியாகும். இக்கல்லூரியைத் தோற்றுவித்தற்கும் பல்கலைக் கழகத்தாரின் ஒப்புதல் பெறுதற்கும் இவர் பட்டபாடுகள் சொல்லுந்தரத்தனவல்ல! எவரிடத்துப் பேசினும் இக்கல்லூரியின் வளர்ச்சி பற்றித்தான் பேசிக் கொண்டிருப்பார் இவர். ஒருநாள், கல்லூரியின் வாயிற்படியில் உட்கார்ந்து கொண்டு, "ஏதோ கல்லூரியைத் தொடங்கி விட்டோம். என் உடல்நலம் குன்றிவருகிறது. இக்கல்லூரியினின்று பல்கலைக் கழகத் தேர்வுக்கு ஒரு மாணவன் சென்று பட்டம் பெற்று வந்தான் எனக் கேட்டு மகிழ்ந்தபிறகு இறப்பேனானால் என் வாழ்க்கை ஒருவாறு பயன்பெற்றது என்னும் நினைவோடு செல்லலாம்" எனக் கூறினாரென்றால் இவர்தம் பரந்த நோக்கத்தையும் தமிழ்ப் பற்றையும் எங்ஙனம் இயம்புவது?

சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் தனித் தமிழ்ப் புலமையும், ஏனைய மொழிக் கலையோடு சேர்ந்த தமிழ்ப் பயிற்சியும் மேம்படுதற்கு இவர் செய்த செயல்கள் பலவாகும். இவரது அரிய முயற்சியாலேயே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து ஆட்சிமன்றத்திலும் (Syndicate) கலை மன்றத்திலும் (Academic Council), சென்னைப் பல்கலைக்கழகத்திலும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு ஓர் இடம் கிடைத்தது. இவற்றில், பல ஆண்டுகள் இவரே உறுப்பினராயிருந்து வந்துள்ளார்.

### தமிழுக்கு ஆக்கம்

தமிழ்மொழியில் தக்க புது நூல்கள் வெளிவர வேண்டு மென்பதும், பிறமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்பதும், தமிழ்மொழி நூல்களைப் பிற மொழிகளில் ஆக்க வேண்டுமென்பதும் இவர் நோக்கமாகும். இதனைச் செயற்படுத்த விரும்பிய இவர், ஆங்கில மொழியில் வெளிவந்துள்ள ஆங்கிலப் புலவர் வரிசை (English Men of Letters) போன்று தமிழிலும்

வெளியிடத் துணிந்து பல ஆண்டுகட்கு முன்பு நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரைக் கொண்டு எழுதுவித்து 'நக்கீரர்' என்ற வரலாற்று நூலை வெளிப்படுத்தினார்.

தமிழில் கலைச்சொற்கள் இல்லையென்னும் குறையைப் போக்க உளங்கொண்ட உமாமகேசுவரனார், தமிழும், ஆங்கிலமும் வல்ல சாமிவேலாயுதம் பிள்ளை என்பாரைக் கொண்டு, கணக்கு, அறிவியல் ஆகியவற்றிற்கு நல்ல தமிழ்க்கலைச் சொற்களை உருவாக்கச் செய்தார்; அவற்றைத் 'தமிழ்ப் பொழிலி'ல் வெளியிட்டுப் பலருமறியச் செய்தார். உமாமகேசுவரனாரின் பேருழைப்பினாலேயே நல்ல தமிழ்ச் சொற்கள் தமிழர் நாவில் நடமாடத் தொடங்கின. 'தமிழ்ப்பொழிலி'ன் பொழிற்றொண்டராய் (ஆசிரியராய்) இறக்கும் வரையும் இருந்து, ஆயிரக்கணக்கான அரிய தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், சமயக் கட்டுரைகள், அறிவியற் கட்டுரைகள், இலக்கண இலக்கிய விளக்கக் கட்டுரைகள், புலவர் செய்யுட்கள் ஆகியவற்றை வெளியிட்டுள்ளார். இவை, இன்றும் தமிழ் கற்பாரனைவர்க்கும் பெரும் பயன் தரவல்லன.

நீதிக் கட்சித் தலைவர்களில் ஒருவராய் இருந்த இவர், தம் ஆட்சிக் காலத்தில், தமிழர் பலர்க்கும் பெருளவில் வேலைகள் தந்து பாதுகாத்துள்ளார். பிராமணர்களிடம் தனிப்பட்ட முறையில் அன்பும், ஆதரவும் உடையவரேயாயினும், அவர்கட்கு நிறைந்த அளவில் வேலைகள் தந்து உதவினாரில்லை. இதனால் இவர் 'வகுப்புவாதி' என்ற பெயரையும் ஏற்கவேண்டியதாயிற்று. ஆனால், அது குறித்து இவர் கவலைகொள்ளவில்லை. தாம் பிராமணர்க்கு வேலைவாய்ப்புப் பெருமளவில் அளிக்காமைக்குரிய காரணங்களை, அவர்கள் மனங்கொள்ளுமாறு தெளிவாகவும், வெளிப்படையாகவும் கூறிவிடுவார். இதனால் உயர்ந்த பதவிகளிலுள்ள பிராமணர்கள்கூட இவர்பாலமைந்த நேர்மையைக் கண்டு, அன்பு பாராட்டியே வந்துள்ளனர்.

**ஐயாற்றுக் கல்லூரியில்!**

உமாமகேசுவரனார் செய்துமுடித்த அரியவற்றுள் குறிப்பிடத் தக்கது ஒன்று உண்டு. அதுவே, திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழுக்கும் இடந்தேடித் தந்தது.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் திருவையாற்றில் காவிரியின் வடகரையில் ஒரு பெரிய அழகிய மூன்று மாடிகள் உள்ள

அரண்மனை அமைத்துள்ளனர். ஆற்றங்கரையிலமைந்த அவ்வரண்மனை அழகிய அறச்சாலையாக விளங்கியது. ஆங்குப் பிராமணர்கட்கு மட்டும் வடமொழி கற்றுக்கொடுக்கப்பட்டு வந்தது. அவர்கட்கு உணவும் உறைவிடமும் அன்பளிப்பாகத் தரப்பட்டு வந்தன. ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான பிராமண மாணவர்கள் வடமொழி இலக்கண, இலக்கிய, தருக்க நூல்களைக் கற்றுக்கொண்டு வந்தனர்.

இதனைக் கண்ட உமாமகேசுவரனார், ஏனையோரும் இதிற் பங்குபெற்றுப் பயனடையுமாறு செய்தல் வேண்டும் எனக் கருதினார். கரந்தைத் தமிழ்ச்சங்கம் தோன்றிய ஆறு ஆண்டுகளிலேயே இவ்வெண்ணம் இவருள்ளத்தே கால் கொள்ளத் தொடங்கிற்று. எனவே, தி. செல்வக்கேசவராய முதலியார் எம்.ஏ., தலைமையில் கூடிய சங்கத்து ஆறாவது ஆண்டு விழாவின்போது, கீழ்க்கண்ட தீர்மானத்தைத் தாமே முன்மொழிந்து பேசினார் உமாமகேசுவரனார்.

''பழமை பெருமைகளிற் சிறந்த நம் தமிழ்மொழி வழங்கும் தமிழகத்தில், இத் தஞ்சை மன்னரால் அறத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கும் பொருளின் பயனைக் கல்வி நெறியில் தமிழர்கள் அடையுமாறு இளைஞர்களின் கல்விப்பயிற்சிக்கு வேண்டியாங் குதவவும், திருவையாறு வடமொழிக் கல்லூரியில் தமிழையும் முதன்மைப்பாடமாக வைத்து நடத்தவும், இன்னும் அக் கல்லூரியை இச் சில்லாவின் தலைநகராகிய தஞ்சையில் வைத்து நடத்தவும், தஞ்சாவூர்ச் சில்லா இறைத் தண்டற்றலைவர் (Collector) அவர்களுக்கும், நாட்டாண்மைக் கழகத்தார்க்கும் (District Board) விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும்''

தீர்மானம் மட்டும் நிறைவேற்றி வாளாவிருந்து விடாமல், அது செயலுக்குவரப் பெரும்பாடுபட்டார் இவர். பன்னீர்செல்வத்தின் பெருந்துணை கொண்டு பலரும் பயில்வதற்குரிய இடமாக அதனை ஆக்கினார் கல்லூரியில் ஏனையோரையும் வடமொழி கற்கச் செய்தார் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் வித்துவான் பட்டத்திற்குரிய வகுப்புகளை ஏற்படுத்தினார்; படிப்படியாக ஏனைய மாணவர்க்கும் உணவு, உடை, கல்வி முதலியன அன்பளிப்பாக அளிக்க வழிவகுத்தார். இவ்வாறே ஒரத்தநாடு, இராசாமடம் முதலிய இடங்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் எல்லா மாணவர்க்கும் பலவகையான கொடைகளைப் புரியச்செய்து அரும்பணிகளை ஆற்றினார். இவற்றால், தமிழ் பயிலும் மாணவர்களின் உள்ளங்களில்

என்றும் உறையும் உயரிய இடத்தைப் பெற்றுவிட்டார் உமாமகேசுவரனார்.

### ஊறுபோக்கிய உரவோர்

தமிழ்மொழி ஆக்கத்திற்குப் பாடுபட்ட இவர், தமிழ்நாட்டு உயர்நிலைப்பள்ளிகளில் இளஞ்சிறார்கட்கு, இந்திமொழி, கட்டாயப் பாடமாக்கப்பட்டபோது அதனை முழு மூச்சாக எதிர்த்தார். இந்திமொழிக் கட்டாயத்தினால் தமிழுக்கு ஊறு நேருமென்பதைச் சொற்பொழிவுகள் வாயிலாகவும், கட்டுரைகள் வாயிலாகவும் தக்க காரணங்கள் காட்டித் தமிழ்ப் பெருமக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தினார். உண்மைநிலையை அக்கால அரசினர் அறிதற் பொருட்டுப் பல முடிபுகள் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பிவைத்தார்.

பல மொழிகள் பயிலவேண்டும் எனக் கருதுபவராயினும், கட்டாயமாக ஒரு மொழியைக் கற்கச் செய்வது தவறு எனத் தமிழவேள் கருதினார். எனவே தமிழகத்தின் பல்வேறிடங்கட்கும் சென்று இந்திமொழிக் கட்டாயப்பாடத்தை எதிர்த்துப் பல சொற்பொழிவுகள் ஆற்றினார்; தீர்மானங்கள் பல நிறைவேற்றி அரசுக்கு அனுப்பினார். இவற்றாலும், தமிழரின் இடைவிடா முயற்சியாலும் கட்டாய இந்திமொழிப் படிப்புக் கைவிடப்பட்டது!

### சங்கக் காவலர்

எடுத்த பணியை இடைவிடாமல் செய்து முடிப்பதில் வல்லவர் தமிழவேள் உமாமகேசுவரனார். சங்கத்திற்கென ஒரு கட்டிடத்தை உருவாக்கினார்; பரந்த வெளியிடத்தையும் அதனோடு சேர்த்தார். இவர்தம் பெரு முயற்சியால் தொடக்கப்பள்ளி, மருத்துவச்சாலை, திக்கற்ற மாணவரில்லம் தோன்றின. சங்கக் கூட்டம் நடத்தத் தமிழ்ப் பெருமன்றத்தை அழகுற அமைத்தார். சங்கத்தைச் சூழவும் சோழன் பூங்கா, பாண்டியன் நீழல், சேரன் விளையாட்டரங்கம் என எல்லாவற்றையும் தமிழிலேயே வழங்கினார். சங்கத்துக்குப் பல பேரறிஞர்களை வரவழைத்து விரிவுரையாற்றச் செய்தார்; விழாவிற்கு வருவோரனைவர்க்கும் எவ்விதக் குறைபாடுமின்றி எல்லா வசதிகளையும் செய்து வைத்ததோடு தாமே அனைத்தையும் நேரிற் கவனித்தார்; தனித் தனியாக ஒவ்வொருவருடனும் அன்புடன் அளவளாவி மகிழ்ந்தார். இவற்றால் கரந்தைத் தமிழ்ச்சங்க விழா, பெருவிழாவாகத் தமிழகம் போற்றும் திருவிழாவாகக் காட்சியளித்தது!

கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளியிற் பயின்று வெளியேறுவோர் நிறைந்த புலமை பெற்றவராயிருத்தல் வேண்டும் என விரும்பிய இவர், அரசினர் பாடத் திட்டத்துடன் தாமாகச் சில நூல்களை மிகுதியாகச் சேர்த்துப் பயிலச் செய்வார். அக்காலத்து, இப்பள்ளியில் எட்டாம் பகுப்புப் பயில்வோருக்குப் பள்ளியிறுதி வகுப்புப் (S.S.L.C) பாடங்களும் சேர்க்கப் பெற்றிருந்தனவெனின் உமாமகேசுவரரின் உயரிய எண்ணத்தை எங்ஙனம் அளவிட்டுரைக்க முடியும்? இம் முறையால், கரந்தைத் தமிழ்ச்சங்கப் பள்ளி மாணவர்க்குப் பெருமதிப்பு உண்டாயிற்று. எனவே இப் பள்ளியிலிருந்து வெளியேறும் மாணவர் ஒவ்வொருவரையும், தஞ்சையிலுள்ள ஒவ்வோர் உயர்நிலைப்பள்ளியும் விரும்பியழைத்துப் பயிலச் செய்தல் வழக்கமாயிற்று. தூய பேதுரு உயர் பள்ளி இலேம்துரை, தம் பள்ளிக்கே மாணவர்களை அனுப்பி வைக்குமாறு உமாமகேசுவர னாரைக் கேட்டுக் கொள்வாராம்! இக்காலத்தில், பள்ளிகளில் கைத்தொழிற் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன வல்லவா? இவற்றை முதன்முதல் தம் தொடக்கப்பள்ளியிலேயே அறிமுகப்படுத்திச் செயன்முறையிற் கொண்டுவந்தவர் நம் தமிழவேளேயாவார்!

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் புலவர் கல்லூரியைத் தோற்றுவித்த உமாமகேசுவரனார், தாமே வகுப்பாசிரியராகவும் இருந்து பாடஞ் சொல்லுவார். கால்டுவெல் ஒப்பிலக்கணத்தையும், பரிதிமாற் கலைஞரின் தமிழ்மொழி வரலாற்றையும் மிக இனிமையாகக் கேட்போர் உளங் களிக்குமாறு எடுத்துக் கூறுவார். ஆங்கிலத்திலுள்ள கால்டுவெல் ஒப்பிலக்கணத்தைக் கையில் வைத்துக்கொண்டு தமிழில் பாடம் நடத்துவார்.

பள்ளிகளின் தலைமையாசிரியராகத் தமிழாசிரியரும் வரவேண்டும் என அடிக்கடி சொல்லிவந்த உமாமகேசுவரனார், தம் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியராகத் தமிழாசிரியர் ஒருவரை அமர்த்தினார் எனின் இவர்தம் நெஞ்சுரத்தை என்னென்பது? தண்டாயுதபாணிக் காடவராயர் என்ற புலவர், குத்தாலம் உயர்நிலைப்பள்ளியிலும், தஞ்சை அரசினர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணி புரிந்தவர். அவரைக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளிக்குத் தலைமையாசிரியராக அமர்த்தினார் தமிழவேள். கல்வியலுவலர் ஒருவர் இப்பள்ளியைப் பார்வையிட வந்தபோது, 'இத் தலைமையாசிரியருக்கு ஆசிரியப் பயிற்சி இல்லையாதலின் இவர் தகுதியற்றவர்' எனக் கூறிவிட்டார் உடனே

உமாமகேசுவரனார், "ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் இருந்து, பல ஆசிரியர்களை உருவாக்கிய ஒருவர் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியராக ஏன் இருத்தல் கூடாது?" என வினாவி, அவ்வலுவலரின் ஒப்புதல் பெற்றார்.

## கொடை வள்ளல்

உமாமகேசுவரனார், தம் வழக்குத் தொழிலின் வாயிலாக வந்த வருமானத்தின் பெரும் பகுதியைச் சங்கத்துக்கென்றே வழங்கி யுள்ளார். கரந்தைப் புலவர் கல்லூரிக்கெனத் திங்கள்தோறும் இருபத்தைந்து ரூபாய் கொடுத்துதவினார். அவ்வப்போது நடக்கும் விழாக்களின் முழுச் செலவையும் தாமே ஏற்று வந்தார் தம் வாழ்நாளின் சுருங்கிய காலத்தில், சங்கத்துக்கென முதல் இருபத்தைந்தாண்டுகளில் பணமாகக் கொடுத்தது மட்டும் ஏறத்தாழ ரூ. 7,200 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இது தவிர வந்தோர்க்கு உணவு வழங்கியதும், திக்கற்றோர்க்கு உதவியதும், நூலகத்திற்கு நூல்கள் வழங்கியதும் ஆகிய இவற்றைக் கணக்கெடுத்தால் ஒரு நூறாயிரத்திற்கும் மேற்பட்டே இருக்குமென்பதில் ஐயமில்லை. இத்தகு நல்லாரைக் 'கொடைவள்ளல்' எனக் கூறுவது பொருத்தமன்றோ!

## பண்பின் உறைவிடம்

உமாமகேசுவரனார், வஞ்சமிலா நெஞ்சமுடையவர். எண்ணுதல்–சொல்லுதல்–செய்தல் இம்மூன்றும் ஒரே தன்மையனவாகவே இருக்கும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் இழிதகைமை இவர்பால் யாண்டும் இருந்ததில்லை. உள்ளம் போன்றே கையெழுத்தும் தெளிவாக இருக்கும். எழுதுவதற்கு முன் சிறிது பொழுது சிந்திப்பார்; உடனே அடித்தல் திருத்தல் இன்றி விரைவாக எழுதி விடுவார். தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் அவ்வாறே எழுதுவார். இரு மொழிகளிலும் இவரது நடை சிறிது கடினமாகவே தோற்றும்.

பிறரிடம் கடன் வாங்குவது குற்றம்; அவ்வாறே பிறர்க்குக் கடன் கொடுப்பதுங்குற்றம் எனக் கருதுபவர் உமாமகேசுவரனார். யாராவது தம்மிடம் கடன் கேட்டால் அதை அன்பளிப்பாகவே கருதிக் கொடுப்பாரன்றிக் கடன் எனக் கருதமாட்டார். இப்பழக்கத்தை மற்றவரும் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துவார்

தமிழவேளோடு நெருங்கிய நட்புக் கொண்ட நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், தமிழவேளின் உயர்பண்புகள் பற்றிக் கூறுகையில், "யாவர்க்கும் இன்னா செய்யாமையும், எளியார்பால் இரக்கம் கோடலும், கற்றாரைக் காதலித்தலும், நட்டாரை உயர்வு கூறலும், பெரியாரைப் பேணியொழுகலும் முதலிய இவர் பண்பனைத்தும் உரையில் அடங்குவவல்ல. சுருங்க உரைக்கின் இவரது வாழ்க்கை ஒரு கல்விக்கூடம்; உயர்நிலை விரும்புமொருவன் அதனிற் புகுந்து பயிறல் வேண்டும்!" என்று குறிப்பிடுகின்றார். சிந்தனை, சொல், செயல் மூன்றையுமே தமிழுக்கென ஆக்கிய நற்பண்பின் நாயகர் உமாமகேசுவரனார்.

*"செந்தமிழை உலகமெல்லாம் பரப்ப எண்ணிச்*
*சிந்தனைசொல் செயல்மூன்றும் அதற்கேயாக்கி*
*இந்தநிலம் புகழ்கரந்தைச் சங்கம் தன்னில்*
*இனியதமிழ்க் கல்லூரி நாட்டி மக்கள்*
*வந்துணவு கொண்டுறைந்து கல்வி கற்க*
*வழிசெய்தாய்! அவையென்றும் நிலைத்து வாழ*
*எந்தலைவா! நீ பட்ட கவலை எண்ணின்*
*யாரேதான் மனங் கசியார் உமாமகேசா?"*

என்று சாமி சிதம்பரனார் போற்றிப் புகழ்வதும் எண்ணத்தக்கது.

# 8

## தமிழர் ஏத்தும் 'தமிழவேள்'

'வெள்ளெருக்கிலையார்' என்பவர் பெண்பாற் புலவர்; பரணர் காலத்தில் வாழ்ந்தவர். இவர், தம் இல்லத்தில் வழக்கம் போல் துயின்றவர், விடியற்காலையில் எழுந்தார்; தெருவில் போவோர் வருவோர் அனைவரும் ''எவ்வியின் மார்பில் தைத்த வேலால் உண்டாய புண்களோ பல; அவற்றால் அவன் மாண்டுபோனான்!'' என்று கூறக் கேட்ட வெள்ளெருக்கிலையார், ''பாணர்களின் சுற்றத்திற்கு ஒரு பெருந்தலைவனன்றோ 'எவ்வி'! அவனைப்பற்றி இவர்கள் கூறும் சொற்கள், பொய்யாகிப்போக, பொய்யாகிப்போக!'' என்று கூறிக் கண்ணீர் சிந்தினார்.

***''பொய்யா கியரோ பொய்யா கியரோ...***
***வைகுறு விடியல் இயம்பிய குரலே!''*** (புறம் : 233 : 1 : 8)

'**வேள்** எவ்வி' என்பவன், வேளிர் குலத்துத் தோன்றிய ஒரு குறுநில மன்னன். 'மிழலை'க் கூற்றத்து 'நீழல்' என்ற ஊரின் தலைவன்.

புறநானூற்று வள்ளல்களில் 'வேள்' எனும் சிறப்புப் பெயருக்குரியோர் இருவர். ஒருவன் '**வேள்** பாரி'; மற்றவன் '**வேள்** எவ்வி'.

'வேள்' என்ற சொல்லுக்குத் ''திருமணம், விருப்பம், மன்மதன், கந்தன், வேளாளர் உரிமைப்பெயர்'' எனப் பல பொருள் உண்டு. இவ் 'வேள்' என்று சொல்லிலிருந்து பிறந்தவையே, 'வேளிர், வேளாளர், வேளாண்மை' என்னும் சொற்கள்.

'வேள்' என்னும் அருமைத் தமிழ்ச் சொல்லைச், சங்ககாலத்திற்கு நெடும் பல்லாண்டுகட்குப் பின், தமிழுக்காகத் தொண்டு செய்த ஒருவருக்குச் சிறப்புப்பட்டமாக வழங்கினர் எனின், அது, உமாமகேசுவரனாராகத் தான் இருக்க முடியும்!

உமாகேசுவரனாரின் உண்மைத் தொண்டினை உணர்ந்து பாராட்டத் தமிழறிஞர் சிலர் தலைப்பட்டனர். அத்தகு நல்லறிஞருள் ஒருவரே அருட்டிரு ஞானியாரடிகள்!

இத்தலைமுறையில் தமிழகத்திற்குப் பெருஞ்சிறப்பையளித்த தலையாய சான்றோர் ஞானியாரடிகள். 1873–இல் தோன்றிய இவர், 1942 வரை இந்நிலவுலகில் வாழ்ந்தார். தூய சிவநெறிச் செல்வர்! சிவவேடப் பொலிவுடன் முருகவேளை நாளும் தொழும் நல்லடியவர்; ஒழுக்கத்தால் உயர்ந்த உரவோர்; எத்தகையாளரையும் தம்பால் ஈர்க்கும் இன்முகங் கொண்டவர்; தமிழ், வடமொழிக் கடல்களை நிலைகண்டுணர்ந்த பெரியர்; ஆங்கிலத்திலும் போதிய அறிவுத்திறம் பெற்றவர்; சைவசமயத் தலைவரேயாயினும் பிறநாட்டு நல்லறிஞர்தம் உண்மைக் கருத்துக்களை உளமாரப் போற்றும் விரிந்த பண்பினர்; கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும் ஆற்றல்பெற்றவர்; தம்மிடம் வந்த மாணவர்க்குப் பாடங் கற்றுத் தருவதில் தமக்கிணை தாமேயெனத் திகழ்ந்தவர். அளவற்கரிய நினைவாற்றல் பெற்றவர்; அறிவுமலையாக– அருட்கடலாக விளங்கியர்; பாண்டித்துரைத் தேவரைக் கொண்டு மதுரைத் தமிழ்ச்சங்கத்தையும், மறைமலையடிகள், நல்லசாமிப்பிள்ளை முதலியோரைக் கொண்டு சைவசித்தாந்த மகாசமாசத்தையும் தோற்றுவித்த பெருமைக்குரியவர்; சைவவானிற் கொருதனி ஞாயிறாகத், தமிழுலகிற்கொரு தனி மதியமாக விளங்கியவர்; ஊர்தோறும் தமிழ்ச்சங்கங்களை உண்டாக்குவித்தும், மாணவர் பலர்க்குப் பாடங்கற்பித்தும், இளைஞர் பலரை இன்றமிழ்ப் பேச்சாளராகச் செய்வித்தும் இவ்வடிகளார் செய்த தொண்டுகள் அளப்பில.

## செந்தமிழ்ப் புரவலர்

இத்தகு பெருமைபெறு அடிகளாருக்குச் சீமுக ஆண்டு வைகாசித்திங்கள் மூலநாளுடன் (1933 மே) அறுபது ஆண்டுகள் நிறைவுற்றன. அப்பெருநாளைத் திருநாளாக இவர்பாற்பயிலும் புலிசைத் திருமடத்து மாணவர் அனைவரும் கொண்டாடினர். பண்டிதமணி கதிரேசச்செட்டியார் தலைமை தாங்கப், பேரறிஞர் பலர் சொற்பொழிவாற்ற, அடிகளாரின் மணிவிழா மாண்புடன் கொண்டாடப் பெற்றது.

அடிகளார்க்கு நூற்றுக்கணக்கான தமிழ்ச்சங்கங்கள் வாழ்த்துரை வழங்கின; புலவர்பலர் வாழ்த்துபபாக்கள் பாடிப் பரவினர்; அன்பர் பலர் இன்னுரை கூறி ஏத்தினர் இம்மணிவிழாவுக் கறிகுறியாக அடிகளார் செய்த செயல்கள் பல அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இரண்டு. முதலாவது, தமிழ் மாணவர் செந்தமிழ் பயிலுதற்கெனத்

தமிழ்க்கல்லூரி ஒன்றைத் தோற்றுவித்தமை. இதற்காகப் பத்தாயிர ரூபாயை முதலீடாகக் கொடுத்துதவினார். இக்கல்லூரியினால், திருப்பாதிரிப் புலியூர், பழைய வண்டிப் பாளையம், புதுவண்டிப் பாளையம், கரையேறவிட்டகுப்பம், முருகேசநகர் முதலான பல ஊர்களிலிருந்துவந்த நூற்றுக்கணக்கான மாணவர் நல்ல தமிழறிவு பெற்றுப் புலமைமிக்கோராய் வெளிப் போந்தனர்.

மற்றொன்று, தமிழுக்கு, அழியாப் பெருந்தொண்டாற்றும் நன்மகனாரைப் பாராட்டியது. 'தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத்தன்மையில் நாளும் நற்றமிழ்ப் பணியே நந்தம் பணியாய்க் கொண்ட பெருந்தகையாளர் உமாமகேசுவரனாரே' என உளங்குளிர எண்ணினார் அடிகளார். எனவே தம் மணிவிழாவின்போது தம் திருவாய் மலர்ந்து, உமாமகேசுவரனாருக்குச் **'செந்தமிழ்ப்புரவலர்'** என்னும் செவ்வியபட்டமளித்துப் பாராட்டினார். பொன்னாடையும் போர்த்திச் சிறப்பித்தார். தமிழாய்ந்த தமிழ் அடிகளார், தமிழ் மகனாரைப் பாராட்டியது பொருத்தந் தானே! அப்பாராட்டுவிழாவில், பண்டிதமணி கதிரேசச்செட்டியார், கா. சுப்பிரமணியபிள்ளை, திரு.வி.க., சச்சிதானந்தம்பிள்ளை, பி.சி. ஆச்சாரியார், டி.கே. சிதம்பரநாத முதலியார் கலந்து கொண்டு உமாமகேசுவரனாரின் பண்புநலன்களையும், செந்தமிழைப் புரக்கும் சீர்மையினையும் விரிவாக எடுத்துரைத்தனர். அன்றுமுதல், உமாமகேசுவரனார் 'செந்தமிழ்ப் புரவலர்' ஆனார்

## இராவ்சாகிப்

அரசியலிலும் சரி, வழக்காடுவதலிலும் சரி, தம்மொழியைப் பாதுகாத்தலிலும் சரி உமாமகேசுவரனார் தமக்கெனச் சில வழி துறைகளை வகுத்துக்கொண்டார். அவற்றுள் தலையாயது எவர்க்கும் அஞ்சாமல் உள்ளத்திலுள்ளதை உரைத்திடுதலாகும். உமாமகேசு வரனாரின் பொதுநலத்தொண்டினையும், நேர்மைத் திறனையும் கண்டுவியந்த அரசியலார், இவரைப் பாராட்டுமுகத்தான் 'அரசர் வெள்ளிவிழாப்பதக்கத்'தையும், **'இராவ்சாகிப்'** எனும் பட்டத்தையும் 1935–ஆம் ஆண்டில் வழங்கினர்.

## தமிழவேள்

செந்தமிழ்ப்புரவலராய், இராவ் சாகிப்பாய் விளங்கிய உமாமகேசுவரனாருக்கு, மற்றுமொரு உரிய பட்டம் – உயரியபட்டம் தேடி வந்தது. அதவே 'தமிழவேள்' எனும் தகுதியுடைய பட்டமாகும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழா, அருட்டிரு ஞானியாரடிகளின் சீரிய தலைமையில், உமாகேசுவரனாரின் உயரிய உழைப்பினால், தமிழ்நாடு போற்றும் வண்ணம் கொண்டாடப் பட்டதென்பதையும், அக்காலையில் உமாமகேசுவரனாருக்குத் 'தமிழவேள்' எனும் பட்டம் கொடுக்கப்பட்ட தென்பதையும் முன்னர்க் கண்டோம் ஈண்டு அப்பட்டம் பெற்ற பான்மையினை மட்டும் விரிவாகக் காண்போம்

வெள்ளிவிழா நாட்களில் கூடியிருந்த தமிழ்நாட்டின் பல ஊர்களிலுமிருந்து வந்த புலவர்களும் பெரியோர்களும் இருபத்தைந்து ஆண்டுகட்கு மேலாகக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக அமர்ந்து அரியதொண்டாற்றிய த.வே. உமா மகேசுவரனாருக்குத் தமிழகத்தின் நன்றியையும் நன்மதிப்பையும் தெரிவித்தல் வழியாகப் பட்டம் ஒன்று வழங்க விரும்பினர் இவ்விருப்பத்தை அவைத் தலைவராயமர்ந்த அருட்டிரு. ஞானியாரடிகள் பலருமறிய அறிவித்தார். அப்போது அடிகளார், ''செந்தமிழ்ப் புரவலர் த.வே உமாமகேசுவரனாரவர்களைப் பல்லாண்டுகளாக யான் நன்குணர்வேன். அவர்கள், தமிழ் அன்னையையே தமக்குத் தாயாகவும், தந்தையாகவும், சேயாகவும், உடன்பிறப்பாளனாகவும் மற்றுவெல்லாமாகவும் கொண்டுள்ளவர்கள். தமிழ்ப் பணியே தம் பணியாகக் கருதிப் பல தொண்டுகள் செய்து வருகிறார்கள். அவர்களைத் தமிழகம் தக்கவாறு சிறப்பித்தல் இயல்பு தன்னாட்டு மக்களாலேயும் அறிஞர்களாலேயும் அளிக்கப்பெற்று ஒருவரடையும் பட்டம் ஏனைய பட்டங்களெல்லாவற்றுள்ளும் சிறந்தது. பிள்ளையவர்கட்குத் **'தமிழவேள்'** என்னும் பட்டம் மிகவும் பொருத்தமானது!'' என்று கூறினார்.

பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் ச சோமசுந்தரபாரதியார், வந்திருந்த பேரவையின்சார்பாக இப்பட்டம் வழங்கப் பெறுகிறதென முன் மொழிகையில், உமாமகேசுவரனாரின் பல பண்புகளை எடுத்துக்கூறி, உலையா ஊக்கமும், வள்ளன்மையும் பொருந்திய இவர்கட்கு 'வேள்' என்னும் சிறப்பு எவ்வகையானும் உரியதென்றும் இவ்வேள் என்னும் பட்டம் தமிழரசர்களால் பண்டைய நாட்களில் வழங்கப்பட்டுள்ள தென்றும் அச்சிறப்புக்கேற்ற பண்புகளெல்லாம் நிறையப் பெற்ற நம் பிள்ளையவர்கள் இக்காலத்துத் 'தமிழவேள்' என்னும் சிறப்பைப் பெற்று நீடு வாழ்வார்களாக என்று கூறினார் அதனைப பின்பற்றி

அப்பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சீனிவாசாச்சாரியார், சங்கத் தலைவரின் இப்பட்டப் பேற்றிற்குரிய தகுதிப் பாட்டினை எடுத்துரைத்தார். தென்னாற்காடு மாவட்டக் கல்வித் துறைத் தலைவர் சச்சிதானந்தம் பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்களான பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சி விரிவுரையாளர் ரா.பி. சேதுப்பிள்ளை, கரந்தை இராவ்சாகிப்,ஐ. குமாரசாமிப்பிள்ளை ஆகிய பெருமக்கள் வழிமொழியத் தமிழ்ப் பேரவையினர் அனைவரும் தமது கருத்தொருமையினை வெளிப்படுத்தும் கருவி பிறிதின்மை–யின், தம் கையோசை எழுப்பிப் பேரின்பத்தில் திளைத்தனர். பின்னர், அடிகளார், 'தமிழவேள்' என்ற பட்டப் பெயரின் சொற் பொருளை இனிது விளக்கி, இப்பட்டத்தைப் பெருமகனாரான சங்கத் தலைவரை வாழ்த்துக் கூறுங்கால், தாம் நாளும் முருகவேளை வழிபட்ட பின், நாட்டு நல்லோர் பலரைத் தம் நெஞ்சத்தே உள்ளுவது வழக்கமென்றும், அப்பலருள் முதல்வராக உள்ளப்பெறும் சிறப்புடையவர் இச்சங்கத்தலைவரே என்றும் கூறி வாழ்த்தி அப்பட்டத்தின் அடையாளமாகப் பொற்பூவைச் சூட்ட, அவையோர் 'தமிழவேள் வாழ்க!' என்று பேரார்வத்துடன் முழக்கம் இட்டனர்! தலைவர் உமாமகேசுவரனார், அடிகளாரின் திருவடியில் அப்பேரவைப் பெருமன்றத்தே வணங்கி அவற்றோடு திருநீறு பெற்றுத் தம் உருவார அணிந்து தம் உளங்குளிர்ந்தார்.

**வாழ்த்துப் பாக்கள்**

அப்போது, தமிழவேள் உமாமகேசுவரனாருக்கு வாழ்த்துப் பாக்கள் பல கொடுக்கப் பெற்றன. அவற்றுள் சில வருமாறு:

"..... ..... .....

***உமாமகே சுரப்பேர் ஒன்றிடு மிக்கோய்!***
***எத்துணை இடுக்கணும் யாய்க்குறல் பொறேனென்று***
***மடிதற் றெழுந்தனை மாண்புடைப் பெரும! நீ***
***அனைமொழிக் காற்றிய அரும்பணி எத்துணை?***
***ஒருவர்க் கொருமொழிக் காயிற் றொழிந்த***
***அருமைசே ரையாற் றரசர் கல்லூரியில்***
***தமிழர்க்கும் தமிழ்க்கு மிடங்காண் தகைமையும்***
***தமிழ்மொழி பேணிய தகையுறு சோழர்***
***அமர்வுறு தஞ்சையை அடுத்திடு புகழார்***

*வாடாக் கரந்தை குவியாய்ச் சங்கமொன்*
*றார்வமொடு நிறீஇ அரும்பெரும் நூல்களும்*
*திங்கள் நூல்களும் திறம்பட வெளியிட்டும்*
*பேரா சிரியர் பலர்தமைப் பேணி*
*மாணவர்க் கனைமொழி ஆங்கிலம் பயிற்றியும்*
..... ..... .....
*புறமொழி பேசுவார் பேசுக நீநின்*
*தனிமொழி ஓம்புதல் தவிர்ந்திலை அறிவேம், தமிழே!*
*எந்தமக் கன்னை நின்றனக்கு மகளே, நீயவள்*
*தோற்றி வளர்த்தலின் நின்மகள் யாண்டும்*
*இளமையள் ஆதலின் நீயு மிளமையை*
*தோன்றிய பொருட்குணம் தோற்றிய பொருளிடை*
*இல்லையாதல் யாங்ஙனம்? பெரியோய்!*
*பலப்பல வூழி வாழியர்*
*நலப்பல தொண்டு நன்மகட் புரிந்தே!''*

– இது, திருவையாற்று அரசர் கல்லூரி மாணவர் தந்த வாழ்த்துப் பாவாகும்.

**''செந்தமிழ்ப் புரவல!**

நும்மாண் எம்மால் செவ்வன் சொல்லற்பாலதன்று. எனினும் நுண்மாண் மன்னவர் நுந்தகைமை கண்டு தகுபெறும் பேறு தந்துழி, எம்மாதரம் இயல்வது செயத்துணிந்தது.

**பிள்ளையார் வினை!**

கல்விக்காளையராய்க் காலஞ்சென்ற அப்பர் இருந்த இடத்துச் சிறு உறுப்பினரானீர். இருக்க இயலாது ஈட்டந்தேறி இப்பால் மேல் நீதிமன்றத்து அரசர் நீதிவாதிக்கும் உயர்வு பெற்றீர் அங்கு நுந்தம் பெருமையறியார் உளரோ?

**பொதுநலப் பணி!**

இவை அளவுக்கடங்காத் தஞ்சை நாட்டாண்மைக் கழகத் தலைமையில் ஈரெட்டாண்டும், சோழவள நாடாள் கழகத்து ஈராறாண்டும், நகராணவையில் ஈரோராண்டும், கூட்டுறவில் ஓரீராண்டும், நும்மாயர் முத்துக்குமரரும், தோழர் அண்ணமாலரும், வீரராங் குமரரும், மந்திர மன்றத்தர் பன்னீரும்பாங்கர் விளங்க, பல்லோர்யாவரும் நும்பணிப்பயன் ஒக்க நுகரஊக்கி உழைத்தீர்.

எண்ணில் தருவும், தெருவும் நெடுவழி, பள்ளியும், பல்வகை இன்னண எங்கும் உள! அவை மலையிலக்கென நும் மாண்பு காணவுள!

தமிழ்க்கலைத் தொண்டு! தனித் தலையளி தமிழ்ப் புரவலர் தலைவ! ஓங்கு புகழ்த் தமிழ்ச்சங்கம், வீங்கு நலந்திகழ் அண்ணாமலையார் பல்கலைக்குழூஉ, அரசர் அகராதி அவை– நுந்தனித்தமிழ்த் தொண்டு கண்டு அறியக்கிடப்பன. கரந்தைத் தமிழ்ச் சங்கமே நும்முரு, திக்கற்ற மாணவர் இல்லமே நும்மிலக்கு, அவண்நோய் தீர்சாலை நும்முன்னயரா அன்பு, கைத்தொழிற்கூடம் நுங்கையணி விலங்கு குறை நீக்கம் நும் விழிப்பு, நாணயக்கூட்டு – நும் நிறையில் நடுநா, சைவம் – நும் நடையில் நிலையது, நும்பொறையோ பூவினும் பெரியது, அறிவின் ஆற்றலோ அலை கடற்பரப்பு, இன்னும் பலவுள. அவையும் எண்ணில. இவையும் மற்றும் இறையவர் கண்டு ஏற்புழி ஏற்றனர்; ஏற்றினர். எந்துறவறத் தூயரும் தமிழ்ப் புரவலர் என்றனர். எல்லாம் இயைபே.

**பொறைசால் புண்ணிய!**

நுந்தன் துயரும் ஊறும் பலவே எனினும் நுந் தூய மனந் திண்மையது. உலகு வாழத், தமிழ் வாழத் தமிழகம் வாழ வெள்ளி விழாக்கண்டீர். பொன்மணி விழாக்களும் கண்டு பன்னாள் வாழ்ந்து, பிறர்க்கென வாழத் தொண்டின் பயன் கண்டு பரமன் அழைப்ப அதுவும் பணியென யெண்ணிச் செல்ல, எல்லாம் வல்ல இறையருட் பல்காலும் பாலித்தருள்க''.

–இது, தஞ்சைத் தண்டமிழ் விநாயகர் தமிழ்க்கழகத்தார் தந்தது.

''..... ..... .....

***உமையொரு பாகத் தொருவனைப் போற்றும்***
***உமாமகே சுரனாம் உயர்தனிச் செல்வ!***

..... ..... ......

***நிலவுநங் கரந்தைக் கல்லூரி நிறுவி***
***உலகினிற் சுற்றமற் றுறுதுணை பெறாஅ***
***துலைவுறு மாணவர் குழுவொன் றமைத்தே***
***அன்னவர் தமக்கிங் கருங்கலை வளத்தோ***
***டுண்டி யுறையுள் உய்திதந் தருந்தமிழ்த்***
***தொண்டி முதலாந் தொழில்பல காட்டி***

*ஆரா அன்பி னாங்கவர் தமக்குப்*
*பேரா தரவாம் பெரும்புகழ்ப் பெரும!*
..... ..... ......
*நீயே,*
*புலவர்ப் போற்றும் புரவல னன்றியும்*
*மாணவர்ப் புரந்து மாண்புறு கல்வி*
*மருந்து முதலா வளித்துத் திருந்திய*
*புலவ ராக்கும் புகழினை யாகலின்*
*உலகெலாம் புரக்கும் ஒருவன தருளால்*
*நிலமிசை யென்றும் நீடுவா ழியரோ!''*

— இது சங்கக் கல்லூரி ஆசிரியர்கள் அளித்த வாழ்த்துப்பா!

**''செந்தமிழ்ப் புரவல!**

கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த நம் தாய்த்தமிழினைப் போற்றிய சங்கங்கள் பலவாம் அவைகளுள் நுமது கரந்தைத் தமிழ்ச்சங்கமும் ஒன்றாகும் அதனின் தலைமை பெற இறைவனின் திருநாமத்தை நுமக்கு இட்ட பெருமைசான்ற பெற்றோர்களின் சிறப்புத்தான் என்னே!

அன்பர் பணிக்கு ஆளாகிவிட்டதும் அவர்களின் அருட்டிற–னேயாமன்றோ! மற்றும், தமிழே தனித் தமிழாக இயங்க, மொழி வளர்ச்சி செய்யும் நுமது அருந்திறல் என்றும் போற்றத்தக்கது.

**பெருமை சான்ற சிவநேசச் செல்வ!**

தமிழ்த்தாயின் பணி பூண்டு நடத்திவரும் உழைப்புப் போதாது, ஆங்காங்கே மத வளர்ச்சிக்காவும் எம் போன்ற சமய சங்கங்கள் விரும்பும் போதெல்லாம், நுமது விசாலமான மனத்தின் காரணமாக, உடல் நலத்தைச் சிறிதும் பேணாது வந்து அங்கு எம்போல்வாருக்கு ஆண்டவனின் அருட்டிறத்தை எடுத்துப் போதித்தும், சமயப்பற்றும் சமய ஒற்றுமையும் வேண்டுமெனக் கூவியறைந்தும் யாவரையும் தீவிரப் பக்குவிகளாக ஆக்குந்திறல்தான் என்னே! மற்றும் இவ்வரிய சொற்பொழிவுகளால் சமய விடயங்களில் உண்மை தெரியாது தயங்கித் தத்தளிக்கும் ஆன்மாக்கள் நுமது அருள் நிறைந்த வாக்கியங்களால் புத்துயிர் பெற்றும், சிவனென்னும் செம்பொருள் காண்பதையும் யாம் கண்கூடாகக் கண்டுள்ளோம்.

## பிறர்க்குதவும் பேரறிவுடையோய்!

நுமது அரிய பணிகள் அன்பீனும்! அருளீனும்! தனக்கென வாழாப் பிறர்க்குரியனவாக்கிய நுமது வாழ்க்கைப் பயன் பெரும் பேறுடைத்து, தமிழ்ச்சேய்கள் எழில்உறு நின்செயல்களைச் சிந்தித்து நலம் பெறுக! சாற்றரும் நின் குணத்தைப் பெறுக! அருளும், திறனும், அன்பும் ஓங்கப் பெருஞ்சிறப்புற்ற நுமது வாழ்நாள் கடல்மணற் றொகையின் பெரிதேயாகுக! சீரும், பெயரும் சிறப்புற, நீடிய ஆயுளும், நிலவியபுகழும், நாடிய பொருளும் நலமிகப் பெறுக! என உலகெலாமுணர்ந்தோதற்கரிய அலகில் சோதியன் அடியினை என்றும் இறைஞ்சுகின்றோம்''

—இது, தஞ்சை இராசராச சமய சங்கத்தினர் அளித்த வாழ்த்துப்பாவாகும்.

இத்தகு வாழ்த்துரைகளாலும், பாமாலைகளாலும் தமிழவேள் உமாமகேசுவரனார் செய்த தமிழ்ப்பணியை நினைவுகூர்ந்து போற்றிய பான்மையினால், நன்றிமறவாப் பேராண்மைக்குத் தமிழர்கள் ஆளாயினார்கள் என்றே கூறலாம்.

தம் வாழ்நாளிலேயே செந்தமிழ்ப் புரவலர், இராவ்சாகிப், தமிழவேள் என்னும் பட்டங்களைப் பெற்ற பெருஞ்சிறப்புக் குரியவராய்த் திகழ்ந்தார் உமாமகேசுவரனார் என்று உன்னுங்காலத்து உண்மையிலேயே எந்தத் தமிழ்மகனும் பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது.

# 9

## புகழாரப் பொற்பினர்

“சேற்றிலே வளரும் செந்தாமரை மலரின் நூற்றுக்கணக்கான இதழ்களும் தம்முள் வேற்றுமையற்ற குணம் உடையனவாயிருக்கும். அதுபோல வேற்றுமையில்லாத உயர்குடியிற் பிறந்து வாழ்ந்தவரே யாயினும், ஆராயுங்காலத்து அவருள்ளும் உரையும் பாட்டுமாகப் புகழப்பெற்றோர், வானின்கண், செலுத்துபவன் இன்றித் தானே இயங்கும் வானவூர்தியிற் செல்லும் அளவு உயர்வர்”

*“சேற்றுவளர் தாமரை பயந்த ஒண்கேழ்*
*நூற்றிதழ் அலரின் நிறைகண் டன்ன*
*வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து*
*வீற்றிருந் தோரை எண்ணுங் காலை*
*உரையும் பாட்டும் உடையோர் சிலரே!*
*மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே!*
*புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்*
*வலவன் ஏவா வான வூர்தி*
*எய்துப”* (புறம் : 27)

– சோழன் நலங்கிள்ளியைப் புகழவந்த உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் இங்ஙனம் உரைக்கின்றார்

த.வே உமாமகேசுவரனார், தம் வாழ்நாளிலேயே புலவர் பாடும் புகழுடையோராய் இலங்கினார் என்று எண்ணும்போது மேற்காட்டிய புறப்பாட்டே உள்ளத்தில் எழுகின்றது.

சைவப் பயிரும் தமிழ்க்கொடியும் தழைப்பதற்குற்ற தனிப்பேரிடமாய்க் ‘கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்’ என்ற பொய்யில் புலவரின் பொருளுரைக்கு இலக்காய்த் திருப்பாதிரிப் புலியூர்த் தேவனின் திருவடிக்கன்புபூண்டு, தொண்டர் சூழத் திருக்கோவலூர் மடத்துத் தலைமை ஏற்றருளிய மறைத்திரு. சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய அடிகளார், தம் அறுபதாவது நாண்மங்கலத்தில், தமிழகப் பெரும் புலவர்களும், பேரறிஞர்களும் குழுமிய ஒரு மாபெருங் கூட்டத்தில், யாவரும் ஒருங்கே போற்றி மகிழுமாறு

உமாமகேசுவரனாரைச் 'செந்தமிழ்ப்புரவலர்' எனச் சிறப்பித்துப் பொன்னரி நிரம்பிய போர்வையும், திருவெண்ணீறும் புகழ்மணமாலை-யும் நல்கிய ஒன்றே 'பெரும்புகழ்ச் செல்வர் உமாமகேசுவரனார்' என்பதை நன்கெடுத்துக் காட்டும்!

வெள்ளிவிழா நாளில் பல்லாயிரவர் புடைசூழத் தமிழ்ப் பேரவையினர் 'வாழ்க தமிழவேள், வாழ்க தமிழவேள்!' எனும் வாழ்த்தொலியை விண்ணும் மண்ணும் அதிர முழங்க, அதே ஞானியாரடிகள் 'தமிழவேள்' என்னும் பட்டம் தந்து பொற்பூவைச் சூட்டியது அதனினும் மேலாய புகழன்றோ?

மேலும் தமிழகத்துப்பெரியார் பலரும் தமிழவேளைப் புகழ்ந்து கூறிய உரைகள் எண்ணிறந்தன. அவற்றுள் சில வருமாறு.

**புகழுரைகள்**

ஈழத்துப் பேரறிஞர் சு நடேசப்பிள்ளை, ஒருகால் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு வருகை புரிந்த போது, ''இக் கரந்தைத் தமிழ்ச் சங்கமே தமிழ்நாட்டில் சிறந்துமிளிர்கின்றது; இது, தன்னொளியை வடவேங்கடம் தென்குமரிவரையுமன்றி, ஈழத்திலும் வீசுகின்றது. தமிழ்நாட்டின் வரலாற்றையும், தமிழ்மொழியின் வளர்ச்சியையும் பிற்காலத்தில் எழுதப்புகும் ஆசிரியர்கள், இச்சங்கத்தின் தமிழ்த் தொண்டினைப் பொன்னெழுத்துக்களால் பொறித்துச் செல்வர். இவ்வாறு இச்சங்கம் மிளிர்ந்தோங்குவதற்கு உறுதுணையாயிருந்து பணியாற்றுபவர் தமிழவேள் திரு.த.வே. உமாமகேசுவரம் பிள்ளையாவார்கள். அவர்கள் தமிழ்நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் பெரும் வைப்பு நிதியாவார்கள். இவர்களது அரிய உழைப்பே இதன் வளர்ச்சிக்குப் பெருந்துணையாய் நிற்கின்றது!'' என்று புகழ்ந்துள்ளார்

தஞ்சை மாவட்டத் தலைவராயிருந்த டி.கே. சங்கரவடிவேற் பிள்ளை என்பார், ''தஞ்சைப் பெரிய கோயிலைப் பார்க்கும் போதும் எண்ணும் போதும் அதை எடுப்பித்த இராசராசனின் நினைவு எமக்கு முன்னிற்கின்றது. காவிரிக் கல்லணையைப் பார்க்கும் போதும் எண்ணும் போதும் அதைக் கட்டுவித்த கரிகாற்சோழன் நினைவு நமக்கு முன்னிற்கின்றது. அதுபோலவே, கரந்தைத் தமிழ்ச்சங்கத்தைப் பார்க்கும்போதும் எண்ணும்போதும் அதைத் தோற்றுவித்து வளர்த்து அரும்பெரும் தமிழ்த்தொண்டு செய்த தலைவர், தமிழவேள், செந்தமிழ்ப்புரவலர் திரு. உமாமகேசுவரம்பிள்ளையவர்களின் நினைவே நம்முன் நிற்கின்றது!'' என உரைத்துள்ளார்.

பேரறிஞர் சி. பன்னிருகைப் பெருமாள் முதலியார் "தமிழ்நாட்டில் பல இடங்களில் தமிழ்மொழியை வளர்ப்பதற்காகப் பல சங்கங்கள் நிறுவப்படவேண்டும். தமிழ்த் தாயின் தவப்புதல்வராய்த் தோன்றிய காலஞ்சென்ற பாண்டித்துரைத் தேவரவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார்கள். அச் சங்கம் தொடக்கத்தில் தமிழ்மொழி வளர்ச்சியின் பொருட்டுச் சிறந்த வேலை செய்து வந்தது. பின்னர்க் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றிற்று. அச்சங்கம் தமிழ்மொழி வளர்ச்சியின் பொருட்டு உண்மையான வேலை செய்து வருகின்றது. இச்சங்கத்தின் தலைவரான திருவாளர் டி.வி. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களைப் போல ஒரு பதின்மர் தமிழ்நாட்டில் இருப்பார்களேயானால் தமிழ்மொழி இன்றைக்கு மிகுந்த மேம்பாடு அடைந்திருக்கும்!" என்பாராயினர்.

அருட்செல்வர் சுத்தானந்த பாரதியார், சங்க வெள்ளிவிழாவின் போது தமிழவேளுக்கு எழுதிய முடங்கலில் "தங்கள் தலைமையில் தளரா வீறு கொண்டு தமிழும் சைவமும் தழைத்தோங்கப் பலதுறைப் பணிகளை வெற்றியுறப் புரிந்து வரும் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் வெள்ளிவிழாவில் என்உள்ளம் இன்புறக் கலந்து நிற்கின்றது... தங்கள் அரியதமிழ்த்தொண்டு இன்று வெள்ளிக்கனி காட்டியதைக் கண்டு உண்மைத் தமிழன் உள்ளம் இறும்பூ தெய்துகிறது. தங்கள் சங்கம் மென்மேலும் தழைத்தோங்கிப் பல பொற்கனிகளும் வைரக்கனிகளும் பழுத்துப் பிறமொழிப் புட்களெல்லாம் நாட்புறத்தினின்றும் குழுமித் தமிழ்க்கனியுண்டு தமிழின் புகழைப் பாடச்செய்க! கரந்தையிற் கனலும் தமிழ் வேள்வித்தீ ஒவ்வொரு தமிழன் உள்ளத்தையும் பற்றி உயிர்க்கனலாகக் கொழுந்தேறுக! ஐய, தமிழ் தமது உயிர்ப்பு; தமிழகம் நமது உடல்; தமிழர் கூட்டம் நமது உட்கரணம்!" என்று புகழ்ந்துள்ளார்.

'தமிழரசி குறவஞ்சி' என்னும் நூலில் புலவரேறு வரத நஞ்சயனார். 'பறவைகள் புரவுகின்றன' என்று கூறவந்தபோது, "உமாமகேசன் தமிழார்வம் போலப் பறவைகள் பரவுகின்றன" என்று உவமை வாயிலாகப் போற்றுவது காணலாம்

***"அன்னையை மீட்டன்றிவேறுசெய் யேனென***
***ஆவியுடலும் பொருளும் அவட்கெனத்***
***தன்னல நீர்விட்டுத் தானங் கொடுத்தேயா***
***தரிக்கும் உமாமகேசன் தமிழார்வம் போலப்***
***பரவுறுடையே – பறவைகள் பரவுறுடையே!"***

என்பதே அவர் பாடிய பாடல்!

சர்க்கரை இராமசாமிப் புலவர் என்பார்,

*"பூவிற் சிறந்த தாமரையிற் புவியிற்சிறந்த சோணாட்டிற்*
*பொன்னிற் சிறந்த கரந்தையிலெப் போதுமோங்குந் தமிழ்ச்சங்கம்*
*புரிந்து வளர்க்கும் முபகாரி புலவர் போற்று மவுதாரி*
*பொறுமை வாய்மை தயையடக்கம் புலமைமிகுந்த தகையாளன்*
*காவிற் சிறந்த மலர்க்கையான் கலையிற் சிறந்தோர் கவிகையான்*
*கண்டோர்க் கினியான் வறியவரைக் காக்கமுனியான் றான்றேடுங்*
*கனக மனைத்தும் யாவர்க்கும் களிப்போ டுதவி வருவோனங்*
*கண்ணே யனைய தண்ணளியான் கார்நேர்உமாம கேசுரமால்"*

எனப் புகழ்ந்து ஏத்தியுள்ளார்.

தில்லைநகரில் பண்டிதமணிக்கு வெள்ளியளித்த விழாநாளில் தலைமைதாங்கிய தமிழவேளுக்குத் தில்லைத் தமிழ்க் கழகத்தார் பாராட்டிய பாமாலை, புகழ்மாலையாகக் காட்சியளிப்பதைக் கீழே காணலாம்.

## மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

*"சொற்கொண்ட செருத்துணையார் சோர்வில்லாச் சிறுத்தொண்டர்*
*மற்கொண்ட இயற்பகையார் மயிலியலி புனிதவதி*
*செப்பரிய அதிபத்தர் சேணோங்கும் அமர்நீதி*
*தப்பறியாக் குங்குலியர் தாவில்சீர்க் கணம்புல்லர்*
*இப்பெரியார் அவதரித்த எழிலிடங்கொள் தஞ்சையினில்*
*நல்வேம்பின் தவப்பயனாய் நானிலத்திற் **றமிழ்வேளாய்ச்***
***செந்தமிழின் புரவலனாய்ச்** சேவுகைத்தார்க் கன்பனுமாய்*
*வந்துதித்த பெரியோயே! வருக**வுமா மகேசரனே!***
*முன்னொருநாள் செருத்துணையார் மூக்கரிந்தா ரென்பவே*
*நன்னர் தமிழ் பழிப்பார்பன் னாவுரியுஞ் செருத்துணைநீ,*
*அன்றொருநாள் சிறுத்தொண்டர் வாய்காத்தரென்பவே*
*இன்றுபல வாய்காக்கும் இன்றமிழ்க்குத் தொண்டனீ!*
*இல்வினையுந் துறந்திட்டா ரியற்பகையா ரென்பவே*

*இல்லிழந்தும் மனைகொள்ளா இயலுறுதி யுடையோய் நீ!*
*தன்னலத்தைப் புனிதவதி தகைந்திட்டா ரென்பவே*
*உன்னலமும் உன்னாத உயர்தமிழிற் குழைப்பை நீ!*
*அனைய நினையின் அறவோய் நின்னை*
*இனையை யென்றல் எமக்கரி தரிது*
*ஆங்கிலந் தமிழ்நிறை யருங்கடல் நீ!*
*ஓங்கு மொழுக்கத் துயர்குன்றுந் நீ*
*பேசும் பண்பாற் பேரியாறுந் நீ!*
*வீசு மன்பால் விண்முகி லுந் நீ!*
*ஆங்க,*
*கரந்தைச் சங்கக் காவல வருக!*
*அரந்தை யகற்று மார்வல வருக!*
*தமிழ்க்கே யுழைக்குஞ் சான்றோய் வருக!*
*தமிழர்க் குழைக்குந் தலைவா வருக!*
*சிலவாண் டாகவித் தில்லைப் பதியுட்*
*சிலப்பதி காரம் செவ்விதி னளித்த*
*பண்டித மணிக்குச் செய்யுமத்*
*தொண்டினிற் றலைமைத் தோன்ற லாகவே!''*

(அ. சிதம்பரநாதச் செட்டியார்)

தமிழவேள், தம் சங்கத்தில், செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரியை நிறுவிய காலத்து அக்கல்லூரி மாணவர்கள் அளித்த வாழ்த்துப் பாமாலையில் ஒன்று வருமாறு:

*''கற்பகத்தின் பூங்கொம்பு கற்றார்க்கு நற்கரும்பு*
*பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமாம் புகழாளன்*
*அற்புதமா யம்பலத்தி லாடுகின்ற சிவனன்பன்*
*கற்கண்டு போலினிய கல்வியுமா மகேசன்றான்''*

**உருவப் படம்**

தமிழவேள், தஞ்சை நாட்டாண்மைக் கழகத் தலைவராய்ப் பல்லாண்டுகள் இருந்து பணிபுரிந்தவரேயாயினும், முதல் ஐந்தாறு ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே பொதுமக்கள் இவர்தம் தன்னலமற்ற தொண்டினையறிந்து பாராட்டலாயினர். 10-4-1926இல் தஞ்சை நாட்டாண்மைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், மாவட்ட நடுவர் பி சி லோபோ தலைமையேற்றுத் தமிழவேளின் உருவப்படத்தைத் திறந்து வைத்துப் பாராட்டிப் பேசினார்

தஞ்சைப் பெருவழக்கறிஞர் க. நடராசன் என்பார்: "தமிழவேள் சென்னை போன்ற இடங்களில் இருந்திருப்பாரானால் உயர் வழக்கறிஞர் போன்ற உயர்பதவிகள் பெற்று உலகமறிய விளங்கியிருப்பார்!" என்று போற்றியுள்ளார்!

தமிழவேளின் நெருங்கிய நண்பர்; நீதிக்கட்சியின் நிகரற்ற தலைவர்; 1935 முதல் 37 வரை, சென்னை இறையாட்சிக் குழுவின் உள்துறை அமைச்சராக விளங்கியவர். அவரே சர்.ஆ.தா பன்னீர்செல்வம். அவர் தமிழவேளைப் பற்றிப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்:

"தமிழவேளைப் போன்ற மொழிப்பற்றும் நாட்டுப்பற்றுமுடைய பெரியோர் வேற்றுநாட்டில் வேற்று மொழியாளர்களிடத்தில் தோன்றி நின்று அந்நாட்டில் அவர்தம் தாய்மொழிக்கென ஒரு கல்லூரி நாட்டவேண்டுமென்னும் எண்ணங்கொண்டு இத்தகு பணியினை மேற்கொண்டிருப்பாராயின் அவரை அந்நாட்டினரும், மொழியினரும் பின்பற்றி ஆதரவளித்து, அவர் முயற்சி வெற்றிபெற்று வீறுகொள்ளப் பொருளிடம் முதலிய அளித்துப் போற்றிப் பேருவகை அடையாது ஒழிவரோ? தங்களின் தொண்டு முதலியவற்றுக்குத் தமிழர்கள் ஆதரவளித்துத் தங்கள் தொண்டாலாம் பயனைப் பயன்படுத்தாது ஒழிகின்றனரே! என்னே தமிழர்தம் ஆகூழற்ற தன்மை?"

தமிழவேளோடு நெருங்கிய தொடர்பு கொண்ட பேரறிஞர்களான நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், மறைமலையடிகள், ந.மு. வேங்கடசாமி நாட்டார், 'கரந்தைக் கவியரசு' வேங்கடாசலம் பிள்ளை, 'பண்டிதமணி' மு. கதிரேசச் செட்டியார் போன்றோரும் பிறரும், புகழ்மாலைகள் பல சூட்டியுள்ளனர்.

இவ்வாறு, தாம் வாழ்ந்த காலத்திலேயே பல்லோர் புகழுரைகளையும், பாராட்டுக்களையும் பெற்ற நம் தமிழவேள் உமாமகேசுவரனார், இவ்வுலகில் நெடிது நில்லாது குறைந்த வாழ்நாளிலேயே இறைவன் இறையடி எய்தியமை தமிழர்கள் செய்த தவக்குறைவேயன்றி வேறன்று!

**வடபுலப் பயணம்**

தமிழவேள் உமாமகேசுவரனார் (இரண்டாம் முறையாக) வடநாட்டிற்குச் சென்று ஆங்குள்ள பல்கலைக் கழகங்களையும், மக்கள் மொழி முன்னேற்றம் முதலியவற்றைக் கருதி உழைத்துவரும் சங்கங்களையும் கண்டறிய வேண்டுமெனப் பன்னாள் எண்ணி

யிருந்தார். வடநாட்டுக் கலைக் கழகங்களில் நாட்டுமொழிகள் எங்ஙனம் போற்றப் பெறுகின்றன, எவ்வெவ் வழிகள் மேற்கொள்ளப் படுகின்றன என்பவற்றை நேரிற்கண்டு, நல்லனவாயின் தம் சங்க வளர்ச்சியிலும் கைக்கொள்ளலாம் எனும் பெருநோக்குடன் வடநாடு புறப்பட்டார்.

தமிழவேள், திருநாவுக்கரசர் திருநாளன்று (1941) சங்கக் கூட்டத்திற்கு வந்தார்; ஆளுடைய அரசரைப் பற்றிய இன்னுரைகளைச் செவிமடுத்தார்; அன்பர்களுடன் அளவளாவினார்; நல்ல திருநீற்றை நெற்றியில் பூசி மகிழ்ந்தார் தம் நண்பர் கணபதிப்பிள்ளையை உடனழைத்துக் கொண்டு அங்கிருந்தவாறே வடபுலப் பயணத்தை மேற்கொண்டார் ஆளுடைய அரசின் திருநாளில் அவர் சென்ற வழியே இவர் சென்றார். செல்லும் வழியில் சென்னையில் தங்கினார். சங்கப்புலவர் கல்லூரியின் நன்மை குறித்து உயர் அலுவலர்களிடம் வேண்டுவன எடுத்துக் கூறினார். பின்னர்க் கொல்கத்தா நகரை நண்ணினார்; ஆங்குள்ள தமிழன்பர் சிலரைக்கண்டு உரையாடினார்; அரிய தமிழ் விரிவுரைகள் ஆற்றினார்; அந்நகரில் ஆசுத்தோசுமுகர்சி முதலிய அறிஞர்கள் செய்து முடித்துள்ள அரியசோதனைகளை நுணுகி ஆராய்ந்தார். அவை, தம் சங்கப் பணிக்குத் துணைபுரியுமென உளத்துட் கொண்டார். பின்னர் உலகம் போற்றும் கவிதாகூரின் சாந்தி நிகேதனத்தைக் கண்டார்; தம் சங்கமும் அந்நிகேதனம் போல் விளங்கவேண்டுமென விழைந்தார். கொல்கத்தாவினின்று கயாவுக்குப் புறப்பட்டார் பின்னர்க் காசிநகரை அடைந்தார்; கங்கையில் நீராடிக் காசி விசுவநாதனை மலர் கொண்டு வழிபட்டார். காசி இந்துப் பல்கலைக் கழகத்தைப் பார்வையிட்டார் ஆங்கிருந்து சாராநாத் சென்று புத்தரின் திருக்கோலங் கண்டார் பிறகு பிரயாகையில் நீராடி அரித்துவாரம் போக விரும்பினார் வழியில் சிறிது காய்ச்சல் கண்டது; எனவே **அயோத்தியின்** அருகே அமைந்த **பைசாபாத்** என்னும் புகைவண்டி நிலையத்தில் இறங்கினார் உடன் வந்த நண்பர் கணபதிப்பிள்ளை கண்கலங்கினார் 'ஒன்றிற்கும் அஞ்சற்க', எனத் தம் நண்பரைத் தேற்றினார் உமாமகேசுவரனார்

## தமிழவேள் மறைவு

கணபதிப் பிள்ளை, குறசி (Qureishi) மருத்துவமனையில் தமிழவேளைக் கொண்டுபோய்ச் சேர்த்தார்; வேண்டும் உதவிகள் செய்தார். 1941 மேத்திங்கள் ஒன்பதாம்நாள் வெள்ளிக்கிழமை காலைவரையில் கணபதிப் பிள்ளையைத் தேற்றிக் கொண்டும்,

மேலும் செல்லவேண்டிய ஊர்கள் இன்னவையென்றும், தமக்குற்ற காய்ச்சல் ஒரேநாளில் தீர்ந்து போகுமென்றும், கூறிக்கொண்டிருந்தார் மருந்தும் பாலும் அருந்தி வந்தார். பேச்சொடுங்கினார்! அதே நாள் மாலை 3–50 மணிக்குத் தொல்லை ஏதுமின்றி மூச்சொடுங்கினார்; ஆளுடைய அரசோ, தென்னாடு உய்யத் திரும்பி வந்தார்! நம் தமிழவேளோ மீளாப் பயணத்தை மேற்கொண்டார்! என்றும் எப்போதும் சிவன்பாலே சிந்தையை வைத்த செம்மல் உமாமகேசுவரனார், சிவனை வணங்கிய நிலையிலேயே சிவன் கழல் சேர்ந்தார்!

உடனிருந்த கணபதிப் பிள்ளையின் உள்ளநிலை எவ்வாறிருக்கும்? பதறினார்; புரண்டார்; அழுதார்; அரற்றினார். ஆயினும் என்? மாண்டவர் மீள்வரோ இம்மாநிலத்தில்? அழுந்திய துயரத்தினராய்த் தமிழவேளின் திருமேனியைச் சரயு ஆற்றின் கரையில் தீயிடையிட்டார்; தயரதற்கு இறுதிக் கடனிறுத்த அதே இடத்திலேயே தம் தலைவருக்குத் தம் கைகளால் கடனாற்றினார்!

'இருவராய் வந்தோம்; ஒருவராய்த் திரும்புகிறோம்!' என்ற எண்ணம் கணபதிப் பிள்ளையை வாட்டிவதைத்துவிட்டது. ஆயினும் மனத்தை ஒருநிலைப்படுத்தி உடனடியாகக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்க்குப் பின்வருமாறு முடங்கல் அனுப்பினார்.

அயோத்தி (பைசாபாத்)
விசு, சித்திரை, உஎ.

அன்பு நிரம்பிய தண்டமிழ்த் தொண்டரே,

நம் அருமைத் தலைவரும், தண்டமிழ்த் தொண்டருள் முதல்வரும், பல்குடிக் கொடிகட்குக் கொழுகொம்பும், வீரத் திருமகனும் ஆகிய செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் (இராப் சாகிப்) திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் இங்குத் தம் வினையை ஒழித்துக் கொண்ட கடுஞ் செய்தியைத் தங்கட்கு ஆற்றொணாத் துயருடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமக்கெனச் சிறப்பேதும் வேண்டாத் தம் உண்மைக் கருத்தினாலேதான் நண்பர், உற்றார், உறவினர், சங்கச்செல்வர்கள் எல்லோரையும் விட்டு, இங்கு அயோத்தியில், யாரும் தம் பெருமையறியாதபடி, தனித்தே முத்தி தேடிக் கொண்டார்கள் போலும்!

இவர்கள் பிரிவு கேட்டார்க்கெல்லாம் மாற்றொணாத் துன்பம் தரும். இவர்களுடன் தனித்திருந்து இவர்களை விட்டுப் பிரியும் தீவினை எனக்குத் தனியுரிமையாயிற்று. என் செய்வேன்?

9–5–1941. அ. கணபதி

இவ்வஞ்சலைக் கண்டதும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் பட்ட அளவிலாத் துயரை எங்ஙனம் அளந்துரைப்பது? தமிழவேளின் உற்றாரும் உறவினரும் கதறியழுத காட்சியினை எங்ஙனம் காட்டுவது? தமிழவேளின் பிரிவால் தமிழகமே பெருந்துயர்க்கடலில் ஆழ்ந்தது!

*''நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்*
*பெருமை யுடைத்திவ் வுலகு''* (குறள் : 336)

என்னும் பொய்யாமொழி – பொய்யாத மொழியாகவே போய்விட்டதென்று எண்ணி ஏக்கமுற்றனர் தமிழர்!

''அந்தோ! தன்னலம் இல்லாத் தனிப்பெருந்தலைவரை இனி எந்நாட் காண்போம்? வீரம் பொருந்தி அன்புதவமும் அறிவுரை–களையும் இனி எந்நாட் கேட்போம்? செந்தமிழின் தூய்மையும் வன்மையும் மிளிரும் கட்டுரைகள் இளி எந்நாள் வெளிவரும்! திருநீறு பொலிந்த திருமுகமும், பரந்த உள்ளத்தைக் காட்டுவது போன்ற அகன்ற மார்பும், ஏறு போன்ற பெருமித நடையும், வேற்றுமை கருதாது எவரையும் கைகுவித்துப் புன்முறுவலோடு வரவேற்கும் செயலும், உள்ளத்தே சென்று இனிக்கப் பேசும் கனிந்த சொற்களும் இனிநாம் காண்பதும் கேட்பதுமுளதாமோ? அந்தோ மறைந்தன. காலமென்னும் பேராற்று வெள்ளம் கவர்ந்தது; இத்துயரம் ஆற்றக் கூடியதா? மாற்றக்கூடியதா, அன்று அன்று'' என்று அலறித்துடித்து அழுதவர் எத்தனை பேர்?

''தமிழுக்காகத் தம் இன்னுயிரையே ஈந்த இத்தகு கொடை வள்ளலை இனி எந்நாட் காண்போம்'' என நெஞ்சு நோகக் கூறியவர் எத்தனைபேர்?

''சங்கத்து ஆலமரம் போல வருந்தி வந்தோர்க்கெல்லாம் பெருந்துணை புரிந்த செந்தமிழ்ப் புரவலரைக் காணும் நாள் எந்நாளோ'' எனக் கண்ணீர் வடித்தவர் எத்தனை பேர்?

''தமிழுக்குக் கேடெனின் தமக்குக்கேடு; தமிழுக்கு வாழ்வெனின் தமக்கும் வாழ்வு என உண்மையாகவே கருதி வாழ்ந்த உயரிய

பெரியோரைப் பார்க்கும் நாள் எந்நாளோ'' எனப் பலகால் வருந்தியவர் எத்தனை பேர்?

## துன்ப மாலை

நோயிற் கிடவாமல், நொந்துமனம் வாடாமல்,பாயிற் கிடவாமல் பரமனடி சேர்ந்தார் தமிழவேள் எனும் செய்தி எங்கும் எட்டிற்று. தமிழ்ப் புலவருலகம் சொல்லொணாத் துயருற்றது. அத்துயர் 'துன்பமாலை'யாய் வெளிவந்தது. ஈண்டுச் சில வருமாறு:

*''சங்கமுதல் வாயிலிலே தளிராலின்*
*நிழலகத்தே சார்ந்த மன்றம்*
*அங்கங்காம் அவற்றகத்தே ஆற்றிடத்தே*
*அகல்வெளியாம் ஆங்கே மற்றும்*
*எங்கணுநீ நிற்கின்றாய் இருக்கின்றாய்*
*இயல்கின்றாய் எளியேம் பாலே*
*பொங்கினிய மொழிகின்றாய் பொற்புடைய*
*தலைவஇவை பொய்யோ! மெய்யோ!''*

–கவியரசு. வேங்கடாசலம் பிள்ளை

*''மழைபெய லின்றி வாடிய பயிரென*
*அரசுகோல் கோடிநல் லமைச்ச ரின்றித்*
*துன்புறு நாட்டின் மன்பதை யென்ன...*
*போற்றுந ரற்றுப் பொலிவழிந்து சிதைவுற்*
*றுணங்குதமி ழணங்கிற்கோர் உறுதுணை யாகி*
*அவளைப் பேணுத லொன்றே பேரற மெனவும்*
*அவளது, ஆக்கமொன்றே நோக்க மெனவும்*
*உளங்கொண் டுழைத்த உரவோன்*
*..... ..... .....''*

–அறிஞர். வையாபுரிப்பிள்ளை

*''செந்தமிழே அவருயிராம்! செழும்புலவோர் அவரறிவாம்! சீர்த்திவாய்ந்த*
*நந்தமிழின் மேன்மைதனை நாட்டுதற்கு முயலாத நாளுமுண்டோ?*
*இந்தவோர் செயலால்தான் இருந்தமிழ்த்தாய் போக்கினாளோ என்னே ஐயோ*
*செந்தமிழ்க்குப் பணிபுரிந்தோர் எவரேனும் செலநூறும் வாழ்ந்த துண்டோ?''*

–சி. இலக்குவனார்

*''தாயாகி உண்பித்தான்; தந்தையாய்*
*அறிவளித்தான்; சான்றோ னாகி*
*ஆயாத நூல்பலவும் ஆய்வித்தான்!*
*அவ்வப்போ தயர்ந்த காலை*
*ஓயாமல் நலமுரைத்து ஊக்குவித்தான்!*
*இனியாரை உறுவேம்! அந்தோ!*
*தேயாத புகழான்தன் செயல் நினைந்து*
*உளம் தேய்ந்து சிதைகின்றே மால்!''* –ஔவை சு. துரைசாமி

*''மன்னு தமிழ்க்கே உடம்பெடுத்தாய் வளமார் தமிழைக் குறைப்போர்க்கு*
*முன்னின் றெதிர்க்கும் மொழியுடையாய்! முயன்று புரிநற் செயலுடையாய்!*
*அன்னை நிகர்ப்பாய்! ஆதரவற்றிருக்குந் தமிழ்மா ணவர்கட்கே*
*இன்னல் தீர்க்கும் நினைப்பிரிந்தே எவ்வா றெளியேம் உய்வேமால்!''*

–க. வெள்ளைவாரணன்

*''ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானகத்தே யிருப்போ ரெல்லாம்*
*சாவாத புலவரெனச் சார்ந்தனையோ மற்றவர்க்குத் தமிழன்பு உண்டோ?*
*ஓவாது பணிபுரிந்தாய் உமாமகேசுவரப்பேர் உற்றாய் நின்னை*
*ஆவாவின் றிழந்தனமால் ஐயகோ விக்கொடுமை அறையற் பாற்றோ?''*

–சதாசிவப் பண்டாரத்தார்

*''உலகெல்லாம் இன்றமிழ் உணர்வு பாழாகி*
*அலகிலாக் காரிருள் அமிழ்ந்த ஞான்று*
*உமாம கேசர் ஒளியெனத் தோன்றினை*
*நீயொழி காலை நின்னோ டெல்லாம்*
*தாயொழி குழவி போலக் கூஉம்!*
*..... ...... ......''* –அ. சீனிவாசாசாரியார்

இப்பெரும் புலவர்களும், அரசியல் தலைவர்களும், உயர் அலுவலர்களும், இன்ன பிறரும், தமிழவேளின் மறைவு குறித்துத் தம் இரங்கலுரைகளை வெளிப்படுத்தினர் அவை, இரங்கலுரைகளே எனினும் அனைத்தும் புகழுரைகளாம்!

''நிகழும் இருபதாவது நூற்றாண்டின் முதற்பகுதியினின்று சென்ற ஆண்டுவரை தமிழ்மொழிக்கும், தமிழர் முன்னேற்றத்திற்கும் பெருந்தொண்டாற்றி மறைந்த நமது தமிழவேள், தமிழ்நாட்டின் தவப்புதல்வருள் ஒருவர் என்பதனை நம்மன்பர்கள் அனைவரும் அறிவர். தமிழின் வாழ்வே தம் வாழ்வாக வாழ்ந்தவர் அவர். காலஞ்சென்ற ஞானியாரடிகள், ஒரு காலத்து இவர்களைப் பற்றிக் கூறுங்கால், 'தந்தையாய்த் தாயாய் உடன்பிறந்தாராய் மக்களாய் இன்னும் மற்றுமாய்த் தமிழையே கொண்டவர் இவர்கள்' என்று கூறியது இவர்கள் வாழ்க்கையின் சுருக்க வரலாறென்றே கூறலாம். இவரது தொண்டின் பயன் தமிழ்மக்கள் எல்லோராலும் சென்ற முப்பதாண்டுகளாகத் துய்க்கப் பெற்று வருகின்றது. புலவர் கல்லூரியின் மாணவர்கள் வடவேங்கடம் முதல் தென்குமரி காறும் உள்ள பரந்த தமிழ்ப்பரப்பின் பல இடங்களிலிருந்து வந்திருக் கின்றனர். தஞ்சைக் கரந்தையின் இச்சங்கம் நிலைபெற்றுள்ளதாயினும், இதன் தொண்டும் பயனும் தமிழ்நாட்டுடன், தமிழ்மக்கள் வாழ்ந்துவரும் பிறநாடெல்லாம் பரவ வேண்டுமென்பதே நம் தமிழவேளவர்கள் நோக்கமும், ஊக்கமும், உழைப்பும், உறக்கத்திற்கனவும் ஆகும் அந்தோ! கால வரம்பிற்பட்ட உடலத்தில் நின்ற உயிராகலின், அவர்கள் ஆவி, உடம்பழியவே, நாம் கவல மறைந்தாலும், அதன் உணர்ச்சியும் ஊக்கமும் பலவாறு வழியாகத் தலைகாட்டி வருகின்றன!'' என்பது கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் ஐ. குமாரசாமிப்பிள்ளையின் இரங்கலுரை.

''கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்கு வரும்போதெல்லாம் தமிழ்நாடெங்கும் தமிழ் பரவும் வகை செய்த தமிழவேள் த.வே உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் தொண்டு நினைவில் எழுகின்றது இன்று நல்ல தமிழ்ச்சொற்கள் நிலவுவதற்கு அந்நாளிலே வழிகோலியவர்கள் தமிழவேளேயாவார்கள். அவர்கள் தோற்றுவித்த இச்சங்கத்தைத் தளர விடாமல் கண்ணெனக்காப்பது தமிழ்ப் பெருமக்களது கடமையாகும்'' – இவ்வாறு உரைத்தவர் 'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை!

**புகழாரப் பொற்பினர்**

இவ்வாறு, 'புகழாரப் பொற்பினரா'கத் திகழ்ந்த 'தமிழவேள்' உமாமகேசுவரனார்,

''நம் கல்லூரியிற்படித்து நம் கருத்துப்படி ஒரு மாணவன், புலவனாக வருவதைப் பார்த்தபின் என் உயிர் நீப்பின் அதுவே

எனக்குப் பெரும்பேறாகும்'' என்று அடிக்கடி கூறுவார். அவ்வரியகாட்சி, தம்மாற் காணப்பெற முடியாதவொன்று என்ற எண்ணம் எப்படியோ இவருள்ளத்தில் பதிந்துவிட்டது. நல்லன நாடி, நல்லன பேசி, நல்லனவே செய்யும் செயற்கரிய பெரியர் கூறும் கூற்று மெய்யாகத்தானே செய்யும்? தூய உள்ளமுள்ள தமிழவேள் எண்ணிய எண்ணமும் அவ்வாறே ஆயிற்று!

தமிழவேள் மறைந்தார்; அழியும் உடலைவிட்டு அழியாப் புகழுடம்பைப் பெற்றார். இவர்தம் எண்ணம் வீண்போகவில்லை இன்று, கரந்தைத் தமிழ்ச்சங்கம் கவினுறக் காட்சியளிக்கின்றது இராதாகிருட்டிணர் தொடக்கப்பள்ளி, உமாகேசுவரர் மேனிநிலைப் பள்ளி, கரந்தைப் புலவர் கல்லூரி, (இன்று கலைக்கல்லூரி) திக்கற்ற மாணவரில்லம், கரந்தைத் தமிழ்ச்சங்க நூல் நிலையம், படிப்பகம், தமிழ்ப்பெரு மன்றம், 'தமிழ்ப்பொழில்' –ஆகியன அனைத்தும் தமிழவேளின் திருப்பெயரை – பெரும் புகழைப் பார்முழுதும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன; தமிழவேள், ஆயிரக்கணக்கான தமிழ்ப் புலவர் உள்ளங்களில் திருநடனம் புரிந்து கொண்டிருக்கிறார்; கோடிக்கணக்கான தமிழ்ப்பெருமக்களின் மனக் கோயிலில் தெய்வமாகக் குடிகொண்டிருக்கின்றார்.

ஆம்! சங்கத்து வாயிலிலே கம்பீரமாகக் காட்சியளிக்கும் தமிழவேளின் திருவுருவம்; தமிழன்னைதனை என்றும் நினைக்க வழிவகுக்கும் தமிழ்க்கோயிலாம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் – இவற்றைக் காணும் ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும், தமிழ் உணர்வையும், எழுச்சியையும் ஊட்டும் என்பது திண்ணம்!

வாழ்க தமிழவேள்! வளர்க அவர் புகழ்!

# நூற்பட்டியல்

அரசஞ்சண்முகனார், தொல்காப்பியச் சண்முக விருத்தியின் முதலாவது பாயிர விருத்தி, ஸ்ரீ வித்தியா விநோதினி முத்திராசாலை, தஞ்சை, 1905.

இளமுருகனார், மயிலைகிழார் (ப.ஆ.), தேவார அடங்கன் முறை, திருவருளகம், சென்னை, 1953.

உமாமகேசுவரம் பிள்ளை, த.வே., கரந்தைத் தமிழ்ச்சங்கம் வெள்ளிவிழா விண்ணப்பம், கரந்தை, 1936.

கரந்தைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளிவிழா வரலாறு, கரந்தை, 1938.

--------., தமிழவேள் த.வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு விழாச் சிறப்புமலர், கரந்தை, 1984.

-------., தமிழவேள், த.வே. உமாமகேசுவரனார் வாழ்வும் பணிகளும், கரந்தை, 2001.

-------., 'தமிழ்ப்பொழில்', 1925–26 முதல் 1986–1987 வரை

கழகம், கழகத் தமிழ்க்கையகராதி, கழகம், சென்னை, மறுபதிப்பு, 1956.

கிருபானந்த வாரியார், திருருக., திருப்புகழ், திருப்புகழமிர்தம், சென்னை, (?).

சாமிநாதையர், உ.வே., (ப.ஆ.) புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 7 ஆம் பதிப்பு, 1971.

சாம்பசிவனார், ச., சிவனாரின் வள்ளுவர் தெள்ளுரையும் சொல்லடைவும், வளவன் வெளியீடு, மதுரை, திருத்திய பதிப்பு, 1998.

---------., தமிழவேள் உமாமகேசுவரனார், வளவன் வெளியீடு, மதுரை, 3 ஆம் பதிப்பு, 1974.

--------, நாவலர் சோமசுந்தர பாரதியார், சாகித்திய அக்காதெமி, புதுடில்லி, 1994.

--------., நாவலர் சோமசுந்தர பாரதியாரின் தமிழ் இலக்கியப்பணி, வளவன் வெளியீடு, மதுரை, 1985.

சீனிவாசன், உ.வே.மதி., பெரிய திருமொழி–நாலாயிர திவ்யப் பிரபந்தம், ஸ்ரீவராகி பிரிண்டர்ஸ், சென்னை, 2002.

தருமையாதீனம் (பதிப்பு), ஒன்பதாம் திருமுறை பொழிப்புரை, ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை, 1997.

திருநாவுக்கரசு, மறை., மறைமலையடிகள் வரலாறு, கழகம், சென்னை, 1959.

திருவாவடுதுறையாதீனம் (பதிப்பு), பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர்புராணம், திருவாவடுதுறை, 1988.

புலியூர்க்கேசிகன் (தெ.உ.), புறநானூறு, கேசிகன் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு, 1971

வேங்கடசாமி நாட்டார், ந.மு., (உ.ஆ.) சிலப்பதிகாரம் மூலமும் உரையும், கழகம், 3 ஆம் பதிப்பு, 1950.

--------., திருவிளையாடற்புராணம், கழகம், சென்னை, 1970.

ஜெயசெந்தில்நாதன், பு.மா; திருமுறைத் தலங்கள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 4 ஆம் பதிப்பு, 2001.

**தமிழவேள் உமாமகேசுவரனார்** (1883–1941) தஞ்சையையடுத்த கரந்தையில் தோன்றினார்; வழக்குத் தொழில் வித்தகர் எனும் பெயர் பெற்றார்; வட்டக் கழகத் தலைவர்; மாவட்டக் கழக உறுப்பினர், எனப் பலநிலைகளிலும், ஆட்சித் திறன் மிக்க மாட்சியராக விளங்கினார். கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவராக இருந்து தண்டமிழின் நிலை உயரப் பாடுபட்டார்; நற்றமிழ் நாவலராக–சிவநெறிச் செல்வராக – 'நற்பண்பின் நாயகரா'கத் திகழ்ந்தார். 'செந்தமிழ்ப் புரவலர்', 'இராவ் சாகிப்', 'தமிழவேள்' எனும் பட்டங்கள் பெற்றுத் தாம் வாழ்ந்த காலத்திலேயே போற்றப்பட்டார்.

இந்நூலாசிரியர், முனைவர் **ச. சாம்பசிவனார்,** 70 நூல்களின் ஆசிரியர்; 9 நூல்களைப் பதிப்பித்தவர். 'செந்தமிழ்ச் செல்வர், தமிழாகரர், அருந்தமிழ் மாமணி, தமிழ்ச்செம்மல்' எனப் பல்வேறு பட்டங்களும் விருதுகளும் பெற்றவர். சிங்கப்பூர், மலேசியா, மொரீசியசு, இலங்கை முதலான நாடுகட்குச் சென்று, உலகளாவிய மாநாடுகளில் ஆய்வுக்கட்டுரைகள் வழங்கியவர். 'தமிழ் மாருதம்' என்னும் தரமான திங்களிதழ் ஆசிரியர். இப்போது மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சைவ சித்தாந்தத் துறையில் சிறப்பு நிலைப் பேராசிரியர்.

**Thamizhavel Umamaheswaranar** (Tamil) Rs. 25

ISBN - 81-260-1632-9

இருபத்திரண்டு இந்திய மொழிகளில் நூல்கள் வெளியிடும்
சாகித்திய அக்காதெமி, உலகிலேயே மிகப் பெரிய வெளியீட்டகம்